# அதிகாரப் பகிர்வு
# இன்றைய அறைகூவல்



இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான
உலக ஒத்துழைப்பு மன்றம்
இலங்கைக் குழு

2000

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான
உலக ஒத்துழைப்பு மன்றத்தின்
இலங்கைக் குழுவினால் பிரசுரிக்கப்பட்டது (WSF/SL)

17/2, திலகா கார்டின்ஸ்
நுகேகொட - 10250
இலங்கை

தொலைபேசி : 94-(0)1-852370. பாக்ஸ் : 94-(0)74-300103.

மின்அஞ்சல் : ahimsasl@sltnet.lk
இணையத்தளம் : www.wsf-sl.org

அட்டைப் படம்:

இதை ஒரு நவீன வட்டமெனலாம். இது, முழுமையையும் பிரபஞ்ச சக்தியின் வெளித் தோற்றத்தையும் குறித்து நிற்கின்றது. பொலன்னறுவையிலுள்ள, பலுகஸ்தமனவைச் சேர்ந்த சந்தன குமாரசிரியினால் வரையப்பட்ட இந்த ஓவியம், இலங்கையில் போரினால் ஏற்படுகின்ற தீவிரமான வேதனைகளிலிருந்து, உரையாடல், பங்குடைமை, பகிர்வு என்பற்றினூடாகச் சுதந்திரத்தையும், விமோசனத்தையும் நோக்கிப் பயணஞ் செய்யும் எல்லைப்புறப் பிரதேசங்களில் வாழும் மக்களின் திருஷ்டியைச் சித்திரிக்கின்றது.

# அதிகாரப் பகிர்வு
# இன்றைய அறைகூவல்

**அதிகாரப் பரவலாக்கம் பற்றிய ஒரு பகுப்பாய்வு**

வரலாற்றுப் பின்னணி, இன்றைய நிலைமை, எதிர்கால வாய்ப்புக்கள்

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக் குழுவின் 10ஆம் ஆண்டு நிறைவுப் பிரசுரம்

2000

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக் குழுவின் 10ஆம் ஆண்டு நிறைவுப் பிரசுரமாகிய இது, இலங்கையில், இன்று, அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தமான அறைகூவல்களுக்கு அநுகூலமான விதத்தில் துலங்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள் இலங்கை மக்கள் என்பதில் **அசைக்கமுடியாத, தளராத நம்பிக்கையின்** பேரில் இலங்கை மக்களுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

"உலகளாவிய மானிட வரலாற்றின் சிற்பிகளான சாதாரண மக்களே உண்மையான பிரஜைகளாவர்"

**கிம் சி ஹா, கொரிய கவிஞர்**

"ஒவ்வொருவரினதும் அரவணைப்பிலேயே மக்கள் வாழ்கின்றனர்"

**அயர்லாந்தின் மரபுவழிவந்த கூற்று**

# உள்ளடக்கம்

பக்கம்


1. மானிடவர்க்கத்தின் நிகழ்ச்சி நிரல் 01

2. போரும் பயங்கரவாதமும் 03


3. ஒருமித்து வாழ்தல் 07

4. வரலாற்றுப் பின்னணி 14

5. சர்வதேசப் பரிமாணமும் அரசாங்கச் சார்பற்ற அமையங்களும் 41

# 1
# மானிடவர்க்கத்தின் நிகழ்ச்சிநிரல்

**அதிகாரப் பரவலாக்கம், அல்லது மேலும் எளிமையாகக் கூறினால், அதிகாரப் பகிர்வு, இன்று மானிட வர்க்கத்தின் நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுள்ளது.** இது இலங்கைக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே பொருந்தும். பல நாடுகள், தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இதன் மூலம் தீர்வு கண்டுள்ளன. வேறும் பல நாடுகள், அதிகாரப் பரவலாக்கத்தைச் செயற்படுத்துவதன் மூலமும், அதை யதார்த்தமாக்குவதன் மூலமும் தமது கஷ்டங்களுக்குத் தீர்வு காண முயலுகின்றன. சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இது பிரத்தியேகமாகப் பயன்பட்டுள்ள போதிலும், பெரும்பான்மையோருக்கும் நன்மை பயக்குகின்றது.



ஐம்புலன்கள், சக்திகள், தோற்றங்கள் என்பவற்றைக்கொண்ட
உலகின் மலர்வைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காளி யந்திரம்
ராஜஸ்தான், இந்தியா, 18ஆம் நூற்றாண்டு



நடராஜராக சிவபெருமான், 11ஆம் நூற்றாண்டு, பொலன்னறுவை, இலங்கை,
கொழும்பு அரும்பொருட் காட்சிச்சாலை
நிழற் படம்: நிஹல் பர்னான்டோ

"சிவ தாண்டவத்தின் (நடனம்) தோற்ற நிலைகள் எதுவாக இருப்பினும் காலவோட்டத்தில் அது, எந்தவொரு கலையோ சமயமோ எடுத்துக்கூறக்கூடிய இறைவனின் செயற்பாட்டின் மிகத் துல்லியமான படிமமாகிவிட்டது. பூர்வ, முதல்நிலை லயசக்தியின் வெளிப்பாடே, இதன் அடிப்படைப் பொருளாகும்."
ஆனந்த குமாரசுவாமி

# 2
# போரும், பயங்கரவாதமும்

## இலங்கையில் போர்

இலங்கையில் நடக்கும் போர், அம்மக்களின் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் ஊடுருவிக் கோரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. 1983இல் போர் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போது, அரசாங்கத்தின் இராணுவச் செலவுகள் ஒரு பில்லியன் ரூபாவாக இருந்தது. 1994இல் இன்றைய அரசாங்கம் ஆட்சியை ஏற்ற போது இத்தொகை, 25 பில்லியனாக அதிகரித்தது. இப்பொழுது இது 50 பில்லியனுக்குச் சற்றுக் குறைவாகவுள்ளது. இது, நாட்டின் வரவு செலவுத் திட்டத்தின் செலவின் 20 சதவீதமாகவும், மொத்த உள் நாட்டு உற்பத்தியின் ஆறு சதவீதமாகவும் இருக்கின்றது. (உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது மொத்த உள் நாட்டு உற்பத்தியின் இரண்டு சதவீதத்தைத் தாண்டுவதில்லை). இன்றைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் இது இரட்டித்துள்ளது. இது முன்னைய இரண்டு அரசாங்கங்களின் ஆட்சிக் காலத்தின் ஏறத்தாழ அரைவாசிக் காலப்பகுதியாகும். படையினரதும், பொலீஸ் துறையினரதும் இறப்பும் இரட்டித்துள்ளது. அரசாங்கங்களின் குற்றத்தன்மையைக் காட்டுவதற்கன்றி, **எவ்வளவு தூரத்திற்குப் போர் தொடர்கின்றதோ, அவ்வளவு தூரத்திற்கு அதன் தாக்கங்கள் குரூரமாக இருக்கும்** என்பதை உணர்த்துவதற்கே இது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பொதுமக்களின் இறப்பும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. சொத்துக்களுக்கேற்பட்ட சேதம், சொத்துகளின் இழப்பு என்பவற்றின் அடிப்படையில் ஏற்படும் பொருளாதாரத் தாக்கங்கள் பாரியதாகும்; கணக்கிட முடியாததாகும். அத்துடன், மிகப் பாரதூரமான அகதிகள் பிரச்சினையுமுண்டு. ஏறத்தாழ சனத்தொகையின் பத்திலொரு பங்கான கிட்டத்தட்ட 15 இலட்சம் மக்கள் அகதிகளாக உள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக அமைவது சமூகத் தாக்கங்களாகும். அதாவது, அது, தனிப்பட்ட உறவுகள், புற அதிர்ச்சி, விழுமியங்களின் தேய்வு, சமூகம் முழுவதிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் வளர்ந்து வரும் வன்முறைக் கலாச்சாரம்.

**கண்ணுக்கெட்டிய தூரம் வரை போருக்கு முடிவு தென்படவில்லை**. போர் முடிவுறப் போவது நிச்சயம் என்று காலத்திற்குக் காலம் அதிகாரிகள் எதிர்வுகூறுகின்றனர். ஆனால் இந்த ஹேஷ்யங்கள் தவறானவை என்பது காலத்திற்குக் காலம் நிரூபிக்கப்பட்டு வந்துள்ளன. இலங்கை, செய்வதறியாத நிலையில் இருக்கின்றது. மக்கள் படும் வேதனைகள், நாளுக்கு நாள் தாங்க முடியாத நிலையை எய்திக்கொண்டிருக்கின்றன. **போர் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கப் போகிறதோ, இரு சாராரும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அந்தளவிற்கு மிக மூர்க்கமானவையாக இருக்கும்**. ஒரு புறம், அரந்தலாவையில் இடம்பெற்ற படுகொலைகளுடன் தொடர்புற்ற சொல்லொணா வன்முறைகள் பற்றியும் அனுராதபுரத்திலுள்ள புனித அரச மரத்திற்கண்மையிலும் கண்டி தந்ததாதுக் கோவிலிலும் (தலதா மாளிகை) இடம்பெற்ற தாக்குதல்கள் பற்றியும் நமக்குத் தெரியும். மறு புறம், வடக்கில் நாசமாக்கப்பட்ட மிகப்பல கோவில்கள் பற்றியும் யாழ்ப்பாணத்தில் ஏறத்தாழ தொண்ணூற்றையாயிரம் நூல்களைக் கொண்ட யாழ்ப்பாண நூலகம் (ஆசியாவிலேயே அதி சிறந்தது) அழிக்கப்பட்டமை பற்றியும் தொடர்ச்சியாக இடம்பெறும் 'மறைவுகள்' பற்றியும் நாம் அறிவோம். இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட பற்பல அட்டூழியங்களுள் இவை ஒரு சிலவேயாகும். இது பெரும்பாலும், பயங்கரவாதம் என்று குறிப்பிடப்படுகின்றது.

புரட்சியை நசுக்குவதற்காகவும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காகவும் இராணுவமும், பொலீஸாரும் மேற்கொள்ளும் நியாயப்படுத்தக்கூடிய செயல்களையன்றி, அவர்கள் செய்யும் பயங்கரமான குற்றங்களையே நாம் இங்கு குறிப்பிடுகின்றோம் என்பதை நாம் கூற வேண்டும்.

## பயங்கரவாதம்

இலங்கையின் தெற்கில் வாழும் மக்கள், பொதுவாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தின் உணர்வை மட்டுமே பெற்றவர்களாக இருக்கின்றனர். இந்த எண்ணம், பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் எல்லாவற்றினாலும், நாளாந்தம் அவர்கள் மீது திணிக்கப்படுவதே இதற்குக் காரணமாகும். இது தொடர்ச்சியான வேதனையையும், அதிர்ச்சியையும் தரும் அனுபவமாகும். எனினும், இப்பயங்கரவாதத்திற்குக் காரணமாக அமைந்ததென்ன என்பது பற்றிப் பொதுவாக வடக்கில் வாழும் மக்கள் அதிக பிரக்ஞையுடையவர்களாக இருக்கிறார்கள். இது, இத்தகைய பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முடியாது. எனினும், **முதல் நிலைப் பயங்கரவாதம்** எனப்படுவதை இந்நாட்டில் வாழும் மக்கள் எல்லோரும் இனங்காணக்கூடியதாக இருக்க வேண்டியமை மிக முக்கியமாகும். சுதந்திரத்தைத் தொடர்ந்து வந்த ஐம்பதாண்டுகளுள் தீர்வு காணப்பட்டிருக்கக்கூடிய பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படாததால், தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று ஆயுதம் ஏந்தி நிற்கின்றனர். அத்துடன் இலங்கையிலும், வெளி நாடுகளிலுமுள்ள தமிழ் மக்களின் கணிசமான ஆதரவையும் பெறுகின்றனர். இலங்கையில் ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் சிறுபான்மையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளிலுள்ள நியாயத்தை வெளிப்படையாகவே ஏற்று, சிறுபான்மையினருக்கு மொழி, கல்வி, நிலம், தொழில் வாய்ப்பு என்பன தொடர்பான மனக்குறைகள் உண்டென்று ஏற்றுக் கொண்டுள்ளன. (உதாரணமாக, 1976ஆம் ஆண்டு யு.என்.பி தேர்தல் கொள்கை விளக்க அறிவிப்பில் இது பிரத்தியேகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.) தெற்கில் வாழும் நியாய சிந்தனையுடைய மக்களும் இரண்டு பிரதான கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களுக்குரிய உரிமைகளை அவர்கள் பெறுவதற்கும் யாப்புச் சீர்திருத்தமும் அதிகாரப் பரவலாக்கமும் அவசியமென்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர். உடன்படிக்கைகள், தீர்வுகள், வாக்குறுதிகள் என்பன இடம்பெற்றுள்ளன; அல்லது முன் வைக்கப்பட்டுள்ளன. எனினும், இவை மீண்டும் மீண்டும் முறிவுற்றுள்ளன; அல்லது செயற்படுத்தப்படாதிருக்கின்றன. (1957, 1965, 1982, 1987, 1995). இதற்கிடையில், சிறுபான்மையினர் தமக்கெதிராக வேறுபாடு காட்டுகின்ற சட்டங்களைத் சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது. (1948, 1949ஆம் ஆண்டுகளில் பிரஜாவுரிமை அதிகாரச் சட்டம், தேர்தல் திருத்த அதிகாரச் சட்டம் என்பன ஆக்கப்பட்டு மலை நாட்டுத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டமை; 1956ஆம் ஆண்டின் அரசகரும மொழி அதிகாரச் சட்டமும் சிங்களம் மட்டும் அதிகாரச் சட்டமும் ஆக்கப்பட்டமை; 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு, சிறுபான்மையினரின் உரிமைகளைக் காப்பதாக அமைந்த சோல்பரி யாப்பின் மிக முக்கியமான 29ஆம் பிரிவை அகற்றியமை) மொழிவாரியான தரப்படுத்தலின் மூலம் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களின் வாய்ப்புக்களைப் பாரதூரமாகப் பாதிக்கும் விதத்தில், கல்வியில் தமிழர்களுக்கெதிராகக் காட்டப்பட்ட பாரபட்சம் என்பவற்றுடன், தமக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அடக்கொடுக்கு நடவடிக்கைகளையும், தாக்குதல்களையும் (திட்டமிட்ட கொலைகள்) தமிழர்கள் அனுபவிக்க வேண்டியிருந்தமை; பிரத்தியேகமாகத் தமிழருக்கெதிராக 1956, 1958, 1961, 1966, 1972 - 1977, (வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழ்ப் பிரதேசங்கள் இராணுவ ஆட்சிக்குக் கீழ் கொண்டுவரப்பட்டன. தன்னிச்சையாகக் கைது செய்தல், விசாரணையின்றித் தடுப்புக் காவலில் வைத்தல், பொது மக்களை நச்சரிப்புக்கும் தொல்லைக்குமுள்ளாக்குதல் என்பன இதன் விளைவாக அமைந்தமை), 1974, 1977, 1979, 1983 என்ற ஆண்டுகளில் நிகழ்ந்தவை.

குறிப்பாக, இளைஞர்களின் நிறைவேற்றப்படாத எதிர்பார்ப்புக்கள், அலட்சியம் செய்யப்பட்ட நியாயமான போராட்டங்கள் என்பன காரணமாக வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமன்றி, தெற்கில் மக்கள் விடுதலை முன்னணியும் கிளர்ச்சிகளினூடாக எழுச்சி கண்டன. சமூக

அமைப்புக்களில் காணப்பட்ட பயங்கரவாதமும், அடுத்தடுத்து ஆட்சி செய்த இரண்டு பிரதான கட்சிகளின் அரசாங்கங்களினதும் செயல்களும், செயற்படாத்தன்மைகளும் இதற்குக் காரணமாகும். இதுவே **அரச பயங்கரவாதம் அல்லது முதல் நிலைப் பயங்கரவாதமாகும்**. முதல் நிலைப் பயங்கரவாதமும், எதிர்ப் பயங்கரவாதம் அல்லது பொருதும் போராட்டம் என்றழைக்கக் கூடிய செயற்பாடும் (இவை, அரச பயங்கரவாதம் அல்லது முதல் நிலைப் பயங்கரவாதம் என்பவற்றிற்கு எதிரான துலங்கல்கள்) திருகு சுருள் தாக்கத்துடன் இரு தரப்பிலும் மேலும் மேலும் பயங்கரமாகி, பல ஆண்டுகள் தொடர்ந்து, இந்நாட்டில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலைமை தொடர்ந்தால், நீதியானதும், பயனுறுதிவாய்ந்ததுமான சமாதான தீர்வு வந்தாலன்றி, இது தொடரும் என்பதே சாத்தியப்பாடு. அவ்வாறாயின், இலங்கையில் என்ன எஞ்சும், இம்மக்களுள் யார் மிஞ்சுவர்?

## பயங்கரவாதிகளா, அல்லது விடுதலைப் போராளிகளா, அல்லது இரண்டுமா?

தற்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தை, மக்களிற் சில பகுதியினர், குறிப்பாகத் தமிழ் மக்களிற் சில பகுதியினர், ஒரு விடுதலை இயக்கமாக, அல்லது ஒரு விடுதலைப் போராட்டமாகக் கருதுவதுடன், அதன் அங்கத்தவர்களை விடுதலைப் போராளிகளாக நோக்குகின்றார்களேயன்றி அவர்களைப் பயங்கரவாதிகளாக நோக்கவில்லை. எனவே, இது தொடர்பாக நமது நிலைப்பாட்டைத் தெளிவாக்குதல் வேண்டுமென நாம் நினைக்கிறோம்.

ஒரு புறம், அடுத்தடுத்துத் தோல்விகள் ஏற்பட்ட போதிலும், அடக்குமுறையை எதிர்த்து நிற்கும் திடகாத்திரத்தைப் பேணுவதும் எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்தலும் முக்கியமாகும். இலங்கையின் வடக்கிலும், தெற்கிலும் போராளிகளின் எதிர்ப்பாற்றற் சக்தியை நாம் காண்கிறோம். சொந்த இழப்புக்களுக்கிடையிலும், தாங்கொணாத் தடைகளுக்கிடையிலும் அவர்கள் தாக்குப் பிடித்திருக்கிறார்கள். நாம், இதை ஆழ்ந்து நயக்கின்றோம். மேலும், நீதிமிக்கதொரு சமூகம், ஒரு புதிய சமூகம், ஒரு புதிய மானிட இனம் என்பவற்றை எய்த வேண்டும் என்ற அவர்களுடைய அபிலாசைகளையும் நாம் மெச்சுகிறோம். பெருந் தியாகங்களைச் செய்து, எதிர்த்து நிற்கும் மனோவலிமையைக் கொண்ட பரந்த முற்போக்கு இயக்கத்திலும் மிகப் பலர் இருந்துள்ளனர். அவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அபிலாசைகளைக் கொண்டிருந்தனர். அவர்களுக்கும் நாம் மரியாதை செலுத்துகிறோம். சமூகம் முழுவதும் இச்சக்திகளிடமிருந்தும் இயக்கங்களிடமிருந்தும் கற்றுக் கொள்ள வேண்டும்.

மறு புறம் எதிர்ப்பு, அல்லது போராட்டத்திற்கான சரியான செயலுபாயத்தை மக்களுடன் கலந்தாலோசித்து முடிவு செய்ய வேண்டும் என்பதையும் ஞாபகத்தில் வைத்திருத்தல் அதே அளவிற்கு முக்கியமாகும். விவேகமற்ற குறுக்கு வழிகள் எதிர்மறையான விளைவுகளைத் தரவல்லன. அவை, மக்களுக்கெதிரான சக்திகளின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு உதவுவதுடன், உண்மையான புரட்சிச் சக்திகளுக்கு, மக்கள் மத்தியில் கெட்ட பெயரையும் ஏற்படுத்திவிடும். **அச்சுறுத்தற் பிரச்சாரங்களும் ஒருதலைப்பட்சமாகப் பலாத்காரத்தைப் பயன்படுத்துதலும், படுகொலைகளும் எவ்வளவு தான் அரசாங்க அடக்குமுறையினால் தூண்டப்பட்டவையாக இருந்த போதிலும், அவை குறுகியகால வெற்றிகள் சிலவற்றைத் தரக்கூடுமெனினும், நீண்ட கால நோக்கில் வெற்றியைத் தரமாட்டா.** இறுதியில் தீவிர இடதுசாரி முறைகளிலிருந்து தீவிர வலதுசாரி முறைகளை வித்தியாசப்படுத்த முடியாது போய்விடும். இவை இரண்டும் பிற்போக்கிற்கு வழிவகுப்பனவாகவும் மக்களின் முற்போக்குத் தன்மைகளுக்குப் பாதகம் விளைவிப்பனவாகவும் அமையும். எனவே, இவை இரண்டும் கண்டனத்திற்குள்ளாக்கப்பட வேண்டியவை.

சமூக நிலைமைகள் முதிர்வடைந்து, பரந்ததோர் அடிப்படையில் மக்களிடையே குறிப்பிடத்தக்களவு புரிந்துணர்வும் கூட்டுறவும் இடம்பெற்றால் மட்டுமே பயனுறுதிமிக்க மாற்றங்கள் இடம்பெற முடியும். எனவே, சமாதானத்தையும் நீதியையும் நிலைநாட்டுவதற்கெனத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர்கள், தொழிலாளர், விவசாயிகள் என்ற உழைக்கும் மக்களுடன் அறிவாளிகள், மதத்தலைவர்கள், வரலாற்றின் நகர்வை விளங்கிக் கொண்ட மக்கள் பிரிவினர் என்ற யாவரையும் ஒன்று திரட்டி மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாகக் காலந்தாழ்த்தாது பணியாற்றி, சாத்தியப்படும் சகல, முறையான ஜனநாயக வழிகளினூடாக, மிக அவசரமாகக் கவனிக்க வேண்டிய மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய மாற்றங்களைச் சமூகத்தில் ஏற்படுத்த முற்பட வேண்டும்.

எப்படியிருப்பினும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், மக்கள் விடுதலை முன்னணியும் கைக்கொள்ளும் பயங்கரவாத முறைகளைச் சாடுபவர்கள், இத்தகைய முறைகளை இவர்கள் கையாள்வதற்குத் தூண்டுதலாக அமையும், குறிப்பாக இளைஞர்களிடையே நிலவும் செய்வதறியாது தவிக்கும் இன்றைய நிலையையும் கவனத்திற்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும். மாற்று, அகிம்சா முறைகளைத் தேடும் பொறுமை வயதுவந்தோரிடையேயும் முதிர்ச்சியடைந்தோரிடையேயும் காணப்படலாம். ஆனால், பல இளைஞர்கள் மத்தியிலும் நடுத்தர வயதினர் சிலரிடமும் இத்தகைய போக்கைக் காண இயலாது. விசேடமாக, அலைகள் தமக்கெதிராகத் திரும்புகின்றன என்பதையும் தடைகள் பலவும் தமக்கெதிராக விசுவரூபமெடுத்து நிற்கின்றன என்பதையும் கண்டு நடைமுறைச் சாத்தியமான மாற்று வழி எதுவும் அவர்களுக்குத் தென்படாத நிலையில், குறிப்பாக, தமது நோக்கத்தில் நியாயம் உண்டென நம்பும் போது, செய்வதறியாது, அவர்கள், மேலும் பாரதூரமான செயல்களில் ஈடுபடும் சாத்தியப்பாடு உண்டு. ‘சைனைட்’ மாத்திரையும், தற்கொலைக் குண்டுதாரியும் வடக்கில் தோன்றும் நிலை இவ்விதமாகவே உருவாகியது. இத்தகையதொரு நிலை, இது வரை, தெற்கில் உருவாகவில்லை. வடக்கிலும், தெற்கிலும் நிலவும் விரக்தியின் அளவிலும் செய்வதறியாத நிலையிலுமுள்ள வித்தியாசத்தைக் குறிப்பதாக இது அமைந்துள்ளதென்பதில் சந்தேகமில்லை; அல்லது, தத்தமத நோக்கம் தொடர்பாக அவர்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்பின் தன்மையிலுள்ள அளவு வேறுபாட்டை இது குறித்து நிற்கின்றதென்றும் சிலர் கூறக்கூடும். தெற்கில் இத்தகையதொரு நிலைமை உருவாகும் காலம் தூரத்தில் இல்லையெனலாமா? எவ்வாறாயினும், முன்னர் குறிப்பிட்டது போல, **இன மோதலில் வன்முறைகளும், எதிர் வன்முறைகளும் பெருமளவில் பரஸ்பர அழிவைத் தரும் நிலையை எய்திவிட்டன.**

# 3
# ஒருமித்து வாழ்தல்

## ஒற்றுமைக்கான அறைகூவல்

நீதியானதொரு தீர்வைக் கண்டு, அதை நடைமுறைப்படுத்தி, போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மக்களின் சகல பிரிவினருக்கும் விடுக்கப்படும் ஒரு தெளிவான அறைகூவலாகும் இது. இலங்கைக்கு வாழ்வா, அழிவா என்ற பிரச்சினை இது. இதற்கு முந்துரிமை கொடுக்கப்பட வேண்டியது அதி முக்கியமாகும். அரசியல்வாதிகளும் இன்றையக் கட்சி அரசியல் முறைமையுமே, தொடரும் போருக்குப் பொறுப்பென்று அடிக்கடி சொல்லப்படுகின்றது. இதற்கு விடை, தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதாகும் என்பது சிலருடைய பதிலாகும். நாம், இக்கருத்தைக் கொண்டவர்களல்ல. இன்றையக் கட்சி அரசியல் முறைமை, சமூகத்திலுள்ள அரசியற் பிரிவுகளின் யதார்த்த நிலையைப் பிரதிபலிக்கின்றதென்றும் இது சில திருப்தியற்ற தன்மைகளைக் கொண்டிருந்த போதிலும், இன்றைய காலப்பகுதியில், இது வரை உருவாக்கப்பட்டவற்றுள் மிகச் சிறந்த முறைமை இதுவே என்றும் நாம் கருதுகின்றோம். கட்சி அரசியல் முறைமையை வெறுமனே அகற்றி விட முடியாது. இன்றைய அரசியற் கட்சி முறையை ஒழித்தல் என்பது ஒரு கனவாகும். இது, சர்வாதிகார ஆட்சியில் மட்டுமே சாத்தியமாகும். மேலும், ஒரு வெளிநாட்டு எதிரியைச் சமாளிப்பதற்கு ஒரு தேசிய அரசாங்கத்தை அமைப்பது சாத்தியப்பட்டாலும், தற்போதைய நிலைமையில், தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்படலாமென்றோ அதற்கான வாய்ப்பு நிலை உண்டென்றோ நாம் கருதவில்லை. எப்படியிருப்பினும், பல்வேறு சமுதாயங்களும் கட்சிகளும் கூறுகளும் தத்தமது தனித்தன்மைகளைப் பேணி, தத்தமது நீண்ட கால சமூக, அரசியல் இலக்குகளை எய்துவதற்கு முயலும் உரிமையைப் பாதுகாக்கும் அதே வேளை, முடிவற்றவை போல் தோன்றும் கொலைகளையும் அழிவுகளையும், நிறுத்தி அபிவிருத்தியையும் சமாதானத்தையும் நோக்கி முன்னேறுவதற்கு வகை செய்வதற்காகத் தற்போது உண்மையான தியாகங்களைச் செய்து, விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்க முடியும். **தேவைப்படுவது தேசிய அரசாங்கமல்ல. ஆனால், சகல கட்சிகளும், குழுக்களும் இனப் பிரச்சினையைத் தேசியப் பாங்கில் நோக்க வேண்டும். சமாதானத்தை நோக்கிய தேடலில், எந்தவொரு கட்சியும் கட்சிசார் அரசியல் இலாபம் தேடலாகாது.** கூட்டுத் தலைமையையும் சமாதானத்திற்கான கூட்டுத் தீர்வையும் ஏற்படுத்துவதற்குதவும் வல்லமையிலேயே ஜனாதிபதி, அல்லது பிரதம மந்திரியின் தலைமைத்துவப் பண்பைக் காணலாம். எல்லாத் தரப்பினரும் சலுகைகளை வழங்குவதற்கும் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் தயாராக இருத்தல் வேண்டும். அரசாங்கமோ, எதிர்க்கட்சியோ, வேறெந்தவொரு மக்கட் பிரிவோ சமாதானத்தை எய்தியதற்கான பெருமையைப் பெற்றுக் கொள்ள முயலலாகாது. பெருமையை யாவரும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். அப்பொழுது வெற்றி பெற்றோர் மக்களாக இருப்பர்; சமாதானம் எய்தப்பட்டுவிடும்.

## இணைந்து வாழ்தல்

அதிகமதிகமான மக்களும் அதிகமதிகமான மக்கட் பிரிவினரும் இக்கருத்தை விளங்கிக் கொள்ள ஆரம்பித்துள்ளனர். வாழ்ந்தாக வேண்டுமென்ற தேவை கருதி, குறிப்பாக எங்களுடையது போன்றதொரு பல் சமூகத்தில் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்வதற்கும், ஒன்று சேர்ந்து வாழ்வதற்கும் முதலில் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர். பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் மட்டுமன்றி, வேறுபட்ட சமூக மட்டங்களை, அல்லது

வகுப்புக்களைச் சார்ந்தோரும் இதை உணர வேண்டும். உதாரணமாக, வடக்கிலும், தெற்கிலும் வாழும் புரட்சிவாத இளைஞர்களைப் புரிந்து கொண்டு, அவர்களுடன் வாழ்ந்து முழுமையான அபிவிருத்திச் செயற்பாட்டில், அவர்களுடைய ஆக்கபூர்வமான பங்குபற்றலைப் பெற வேண்டும். இதன் காரணமாகவே, முன்னர், கண்டனத்தை விடப் புரிந்துணர்வு வலியுறுத்தப்பட்டது. சகல இனச் சமூகத்தினரதும் புரிந்துணர்வு பற்றியும் அவர்களுடைய ஆக்கபூர்வமான பங்குபற்றலைப் பெறுவது பற்றியும் பின்னர் மேலும் விளக்கப்படும். அடிப்படையான ஒரு பரஸ்பர நம்பிக்கையும் வாழ்வதற்காகப் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மையும் இருத்தல் வேண்டும். அன்றேல், எதுவுமே சாத்தியப்படாது. இச்சூழ்நிலையின் கீழ்த்தான் பல்வேறு குழுக்களும் தமது பலதரப்பட்ட சமூக, பொருளாதார இலக்குகளை நோக்கிச் செயற்படலாம். அத்துடன், ஜனநாயக வழிகளினூடாகத் தமது கொள்கைகளுக்கு மக்களின் ஆதரவைப் பெற்றுத் தோழமை அடிப்படையில் நாட்டை விருத்தி செய்து மக்களையும் முன்னேற்றலாம்.

## மக்கள் இயக்கம்

இதில் பொதுமக்களுக்கு அதி முக்கியமானதொரு பங்குண்டு என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் தமது பொறுப்புக்களை உணர வேண்டும். தலைவர்களின் மீதும், அரசியல் வாதிகளின் மீதும் குற்றத்தைச் சுமத்தி விட்டுப் பொதுமக்கள் வாளாதிருக்கக் கூடாது. சமுதாய அமைப்புக்களும், தேர்தற் செயன்முறையும் அவர்களுக்கெதிராக அமைந்தாலும் கூட அவர்கள் தமது பங்கைச் செலுத்த முடியும்; செலுத்தவும் வேண்டும். **குறிப்பாக தெரிவு செய்யப்பட்ட தலைவர்களும், மதஞ்சாராத தலைவர்களும் மதத் தலைவர்களும் கூடத் தமது பங்கைச் செலுத்தாதவிடத்து மக்கள் தம்மை ஒழுங்கமைத்து, மக்களின் வலிமையைத் திரட்டி தலைவர்களின் மீதும் மதஞ்சார்ந்தனவும் மதச்சார்பற்றனவுமான அதிகார மையங்களின் மீதும் நெருக்குதலை ஏற்படுத்த வேண்டும்.** இது பற்றிய, ஏற்ற இறக்கங்களைக் கொண்ட நீண்டதொரு வரலாறுண்டு. அவர்களை எப்பொழுதுமே அடக்கி வைத்திருக்கக் முடியாது. இன்றைய இக்கட்டான நிலையில், அவர்கள் மீண்டும் எழுச்சி பெற்றுத் தமது குரல் அவர்களுக்கு எட்டும்படி செய்கிறார்கள்.

## மாற்றத்திற்கான அறிகுறிகள்

பல ஆண்டுகளாகப் பல்வேறுபட்ட முற்போக்குச் சக்திகள், மேலே கூறப்பட்டவற்றைப் பல்வேறு அளவுகளில் கிரகித்துள்ளன. ஆனால், இன்று, முற்போக்குச் சக்திகள் என்று கருதப்படாத சக்திகள் கூட இப்போக்குகளை உணர ஆரம்பித்துள்ளன. அடி மட்டத்திலுள்ள குமுறல்களும், எழுச்சிகளும் மேல் மட்டங்களில் உணரப்படுகின்றன.

உலக வங்கித் தலைவர், ஜேம்ஸ் டி வுல்ஃபன்ஸன் ஆளுநர் சபையில் நிகழ்த்திய உரையில் (1998ஆம் ஆண்டு ஒக்டோபர் 6ஆந் திகதி) தமது கொள்கைகளின் பயனாக ஏற்பட்டுள்ள சில மிகப் பாதகமான தாக்கங்கள் பற்றியும் அண்மையிலேற்பட்ட உலக நிதி இக்கட்டுப் பற்றியும் இவற்றை எதிர்நோக்குவதற்குப் புதிய அணுகு முறைகள் அவசியம் என்பது பற்றியும் எடுத்துரைத்துள்ளார்.

> “வறிய சமுதாயங்களை விரைவாகச் சென்றடையக்கூடிய முந்துரிமை நிகழ்ச்சித் திட்டங்களில் தீவிர கவனஞ் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, நாம் தற்பொழுதுள்ள முதலீட்டுப் பட்டியல்களை மீளமைப்புச் செய்து வந்துள்ளோம்.”

"நிதித் திட்டங்கள் போதியதாக இல்லை. தமது பொருளாதாரங்களைச் சரிப்படுத்துவதற்கு வேதனை மிக்க நடவடிக்கைகளை எடுக்கும்படி நாம் அரசாங்கங்களைக் கேட்கும் போது, நாம் பெரும் உள அலைவை ஏற்படுத்துகின்றோம் என்பதை நாம் அறிய முடிந்தது. மனத்துயரை அனுபவிப்பது மக்களேயன்றி அரசாங்கங்களல்ல."

"மனித வர்க்கத்தின் மீது, கணிதம் ஆதிக்கம் செலுத்தாததும், அவசியப்படும் பாரதூரமான மாற்றம் வறியோரின் நன்மைகளைப் பாதுகாக்கும் வகையில் சமநிலைப்படுத்தப் படக்கூடியதுமான ஒரு விவாதத்தை நடத்துவதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் நாம் பேண்தகு தீர்வுகளைக் காண முடியும். அப்பொழுது தான் சர்வதேச நிதி சமுதாயத்தையும், உள்ளூர் மக்களையும் நாம் சேர்த்துக் கொள்ள முடியும்."

அதிகரித்துவரும் வறுமைப் பிரச்சினையின் பாரதூரமான தன்மையைப் பின்னர் 'சார்க்' அமையம் உணர்ந்து, அதைக் கையாள்வதற்குப் புதிய வழிகளை விதந்துரைக்கும்படி, விசேட நிபுணர்கள் குழுவொன்றை நியமித்தது. இக்குழு அங்கத்தவர்களுள் ஒருவரான இலங்கையைச் சேர்ந்த கலாநிதி விக்னராஜா ஆலோசனைகளை முன் வைத்துள்ளார். அதிதாழ் மட்டங்களில் மக்கள் நிறுவனங்களை உருவாக்குவதற்கு அழுத்தம் அளிக்கப்பட வேண்டும் என்பது இவ்வாலோசனைகளுள் ஒன்றாகும். ஆசியாவில், அதிதாழ் மட்டங்களில் உருவாக்கப்பட்ட மக்களின் செயற்றிட்டங்கள் சில, வினைத்திறமையில் மிக உயர் மட்டங்களை எய்தியிருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் தொழிற்றுறைவாணர் அமையமொன்றும், வர்த்தகத்துறை அமையமொன்றும் சமாதான ஆலோசனைகளிலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் ஆர்வங்கொண்டு, வற்புறுத்தி, நடுவர் தலையீட்டை ஏற்படுத்த முயன்றன. தொழிற்றுறைப் பிரமுகர்களுள் ஒருவரும், சமாதானத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்குமான தேசியக் குழுவின் இணைப்புத் தலைவருமான தேசமானி லலித் கொத்தலாவலையை மேற்கோள் காட்டுவது பொருந்தும். சமாதானத்திற்காகத் தொழிற்றுறைத் தலைவர்களின் முனைப்புத் தொடர்பாகப் பேசுகையில், அவர் பின்வருமாறு கூறினார்:

"**நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து 'மக்கள் வலிமை'யைப் பிரயோகிக்க வேண்டிய ஒரு நேரம் வரக்கூடும்**. அரசியல்வாதிகள் ஒன்று சேராவிட்டால் மக்கள் வலிமை தான் ஒரே பதிலாக அமைய முடியும். மக்கள் இதை இனியும் தாங்கிக் கொள்ள முடியாது. அவர்கள் சமாதானத்திற்காக ஏங்குகிறார்கள். பொறுப்பு மிக்க தலைவர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து சமாதானத்தை ஏற்படுத்த முன் வருவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்கள் பொறுமையாக இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். துன்பத்தின் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க, பொருளாதாரம் தாழ் நிலையை அடைகின்றது; எதிர்காலம் இல்லை. மக்களே முன்வருவர் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆம். **சமாதானத்திற்கான மக்கள் இயக்கமொன்றிற்கு ஆதரவு வழங்க நான் தயாராக இருக்கிறேன்.**" (லங்கா மன்த்லி டைஜெஸ்ட், மார்ச், 1999).

நாம் தீவிரமான சமூக மாற்றத்தின் விளிம்பில் இருக்கின்றோம் என்பது இதன் கருத்தல்ல. பகிரங்கச் சந்தை முறைமை, அமைப்புரீதியான சீராக்கங்கள், ஆயுதக் கைத்தொழில் அமைப்புக்கள் என்பவற்றை நினைத்த மாத்திரத்தில் அகற்றிவிட முடியாது. எனவே, முழுப் பொருளாதாரத்திலும் சமூக முறைமையிலும், அதிகாரப் பரவலாக்கத்திற்கான திட்டங்களும் பேச்சுவார்த்தைகளும்

தீவிர மீளமைப்பை ஏற்படுத்துமென்று கருதப்படவில்லை; கருதப்படவும் முடியாது. தற்போதைய சர்வதேச, தேசிய பொருளாதாரக் கட்டுக்கோப்பினுள், சில அடிப்படை அதிகாரப்பகிர்வையும், பரஸ்பர நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்காகச் சில மாற்றங்களைச் செய்வதற்கும், சிலவற்றைப் பொருத்தம் கருதி மாற்றியமைப்பதற்குமே அவர்கள் முயல்கிறார்கள். சமாதானம் உதயமானதும் மக்கள் ஜனநாயக முறையின் மூலம் தெரிவு செய்த எக்கொள்கைகள் மக்களின் ஆதரவைப் பெறுகின்றனவோ, அவற்றிற்கிணங்க, மேலும் ஆழ்ந்த சமூக இலக்குகளையும் பொருளாதார இலக்குகளையும் நோக்கிச் செல்வதற்கு இது வழிவகுக்கும்.

**வலிதானதும், துருவப்படுத்துவதுமான நிலையிலிருந்து மாறி ஒருவர் மற்றொருவரின் நிலைமைகளையும் கருத்துக்களையும் புரிந்து கொண்டு, ஓரளவு திறந்த தன்மையையும் விளங்கிக் கொள்ளும் தன்மையையும் நோக்கி நகர ஆரம்பித்துள்ளனர்** என்பதே மேலே கூறப்பட்ட கருத்துக்களின் முக்கியத்துவமாகும். முக்கியமான சமாதானப் பிரச்சினைகள் தொடர்பாகக் கருத்தொருமைப்பாட்டை உருவாக்குவதற்கு இது உதவும்.

### இயக்க ஆற்றல்

**இன மோதலின் இயக்க ஆற்றல் பற்றிய முழுமையான, நடுநிலையான விளக்கமும், சமாதானச் செயன்முறை பற்றிய விளக்கமும் சமாதானத்திற்கான பணியில் அத்தியாவசியமாகும்.** செயல் தொடர்பானதும் பிரச்சினைகளின் இடைத்தாக்கம் தொடர்பானதுமான கூருணர்வு, தனி ஆட்கள், கூட்டு அலகுகள் என்பன இருத்தல் வேண்டும். சமயங்களும் இனச் சமுதாயங்களும் அரசியற் கட்சிகளும் குழுக்களும் பல்வேறு பகுதிகள் - விவசாயி, தொழிலாளி, மாணவன், இளைஞன், பெண், தொழில்வாணர் வகுப்புக்கள், வர்த்தகச் சமுதாயம், தொண்டர் அமையங்கள், அடிமட்ட அமையங்கள் முதலியன கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படல் வேண்டும். அத்துடன், சர்வதேசச் சக்திகளும் தேசியச் சக்திகளும் இடம்பெறும். மிக உயர்ந்த மட்டத்திலும், பொறுப்பு மிக்க மட்டத்திலும் கூட ஒருதலைப்பட்சமானதும், மேலோட்டமானதுமான சிந்தனையையும், செயலையும் பெரும்பாலும் காணலாம். ஒருவர், அல்லது அத்தியாவசியமான ஒரு கூறு விடுபடலாம்; உதாசீனப்படுத்தப்படலாம்; அல்லது போதிய அளவில் கவனத்திற் கொள்ளப்படாமலிருக்கலாம். ஒருவர், அல்லது அத்தியாவசியமான ஒரு கூறு மிக வலிதாக அழுத்தப்படலாம்; அளவுக்கு மீறி அழுத்தப்படலாம். எனவே, இன மோதலின் இயக்க ஆற்றல் பற்றிய முழுமையான, நடுநிலையான விளக்கத்தினதும் சமாதானச் செயன்முறையினதும் முக்கியத்துவம் மிகக் கடுமையாக வலியுறுத்தப்பட முடியாது.

### இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம் / இலங்கைக் குழு

அதனுடைய அமைப்பினாலும் அது ஈடுபட்டுள்ள பணியின் இயல்பினாலும் இன மோதல்களினதும் சமாதானச் செயல்முறையினதும் இயக்க ஆற்றலை முழுமையாகவும் நடுநிலையில் நின்றும் விளங்கிக்கொள்வதற்கு உலக ஒத்துழைப்பு மன்றம் / இலங்கைக்குழு (உ.ஒ.ம./இ) உகந்ததொரு நிலையிலுள்ளது. நாம் முன் வைக்கப்போகும் சில கருத்துக்களை மனத்திற் கொண்டு, உ.ஒ.ம./இ.கு. கருத்தரங்கின் நம்பிக்கைச் சான்றுகளைச் சுருக்கமாகக் குறிப்படுவது இத்தொடர்பில் பயனுடையது என்று நாம் நினைக்கின்றோம்.

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றக் கருத்தரங்கு, 19 நாடுகளைச் சேர்ந்த 90 பிரதிநிதிகளைக் கொண்டு, இலங்கையின் முனைப்பின் கீழும்,

தலைமைத்துவத்தின் கீழும் 1990இல் தாய்லாந்தின் தாபிக்கப்பட்டது. இலங்கைக் குழு (உ.ஒ.ம./ இ.கு.) நான்கு பிரதான சமயங்களாகிய பௌத்த மதம், இந்து மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம் என்பவற்றை அங்கத்துவப்படுத்துபவர்களாகிய சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் (சோனகர், மலாயர்) என்போரை அங்கத்துவப்படுத்துபவர்களையும் கொண்ட பரந்த பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளது. உ.ஒ.ம./இ.கு. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள், மாற்று நிகழ்ச்சித்திட்டங்கள், சமாதானப் பாத யாத்திரைகள் வீதி நாடகங்கள், ஆதரவு திரட்டல் என்பவற்றின் மூலம் இலங்கையில் போரும் சமாதானமும் பற்றிய பிரச்சினைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளது. அத்துடன், அது உலகின் ஏனைய பகுதிகளிலுள்ள உ.ஒ.ம. கிளைகளுடனும், சம்பந்தப்பட்ட குழுக்களுடனும் கூட்டொருமைப்பாட்டுத் தொடர்புகளைப் பேணி வந்துள்ளது.

ஒவ்வொரு சமுதாயம், அல்லது குழு மற்றவருடைய கருத்தைச் செவிமடுத்து அவருடைய கோரிக்கைகளைக் கருத்திற்கொள்வதுடன், தம் சொந்த நிலையை விளக்கித் தம் கோரிக்கைகளையும் முன் வைக்க வேண்டும் என்பதே பிரதான அணுகு முறையாகும். இதற்கு ஓர் ஆழ்ந்த உரையாடல் அவசியம். அதே வேளை, இரு வகையான செயற்பாடும் இடம்பெறும். அதாவது, அடிமட்டத்திலான செயற்பாடுகளை வலியுறுத்துவதுடன் மதம் சாரா, மதம் சார்ந்த அதிகார மையங்களின் அழுத்தத்தைப் பிரயோகித்தல். போரை நிறுத்துவதற்கு அரசியல் தீர்வொன்றைக் கண்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய வழிவகைகளைத் தேடுவதே சகல நடவடிக்கைகளினதும் முக்கிய இலக்காகும். தத்தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், தமது அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் ஒரு வழி என்ற முறையிலேயே **சகல** சமுதாயங்களும் இந்த அரசியல் தீர்வை நோக்க வேண்டும்.

1990இல் உ.ஒ.ம. தாபிக்கப்படுவதற்கு முன்னரே இதைத் தாபிப்பதில் பங்கெடுத்த சிலர், பல ஆண்டுகளாக சமாதான இயக்கத்தில் மிக்க முனைப்புடன் ஈடுபட்டவர்களாவர். உ.ஒ.ம./இ.கு. வினுடைய சமாதான நினைவிதழை வாசிக்கையில், பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் நூலகரும் வகுப்பு 4 - தொகுதி, இலங்கை நூல் விவரத் தொகுப்பின் சர்வதேசப் புகழ் பெற்ற ஆசிரியருமான கலாநிதி எச்.ஏ.ஐ.குணதிலக அவர்களின் உ.ஒ.ம./இ.கு. பற்றிய செய்தியைக் குறிப்பிட்டு இக்குறிப்பை நாம் முடிக்கலாம்.

> "பிரசாரரீதியான செயற்பாடுகளை விடுத்து, நின்று நிலைக்கவல்ல நம்பிக்கை என்ற உண்மையான அடிப்படையில், தொடர்ந்து நிலைபேறுள்ள விதத்தில் சமாதான முயற்சிகளை விரிவாக்குவதற்கான இந்த எத்தனிப்பை நான் மெச்சிப் பாராட்டுகிறேன். நமது சமூகத்தில் எவ்வளவொரு சிறு பகுதியினராயிருப்பினும், தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் அவர்களுடைய உணர்வையும் வாழ்வையும் சுதந்திரத்தையும் நமது பிரஜைகள் அனைவருக்கும் உத்தரவாதம் செய்யும் விதத்தில் அரசியல் யாப்பையமைப்பை முன்னேற்றுவதில், ஈடுபடுத்தச் செய்வதற்கு ஏறக்குறைய கால் நூற்றாண்டாக முயற்சி செய்து வந்திருக்கிறீர்கள்."

## பிரிவினையா அல்லது ஒற்றுமையா?

எனவே, இப்பொழுது நாம் ஓர் அரசியல் தீர்வை கருத்திற் கொண்டுள்ளோம். இது வரை காலமும் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வுகள் யாவும் அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்டவையாகும். **அதன் உண்மையான கருத்தைப் புரிந்து கொள்ளாமையினாலேயே அதிகாரப் பகிர்வு தமக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று எண்ணுவதனால் அதை எதிர்ப்போர், புரிந்து கொள்ளாமைக்குத் தூபம் போட்டு அதை வளர்க்கிறார்கள்.**

உதாரணமாக, வெகுசனத் தொடர்புச் சாதனங்களுள் சில, அதிகாரப் பகிர்வை நிலையாக எதிர்த்தே வந்துள்ளன. 'அதிகாரப் பகிர்வுத் தொகுதி' பற்றி, இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் செய்தித் தாள்களில் பிரசுரித்த அன்றே, அதாவது, 1995 ஆகஸ்ட் 3ஆந் திகதி 'தி ஐலன்ட்' என்ற செய்தித் தாள், இதைக் கேலி செய்து, ஒரு கேலிச் சித்திரத்தைப் பிரசுரித்தது. அரசியல் யாப்பு விவகார அமைச்சர் திரு.ஜி.எல்.பீரிஸ் பொரிக்கும் தாச்சிக்கருகில், தன் கையில் ஒரு முட்டையை வைத்துக்கொண்டு, "நான் உன்னைப் பயன்படுத்தி ஒரு முட்டைப் பொரியல் செய்யப் போகிறேன்" என்கிறார். "ஒரு நிமிடம். நான் விரும்பினால், மீண்டும் முட்டையாக உருமாற முடியுமா?" என்று முட்டை பதிலளிப்பதாக அக்கேலிச் சித்திரம் அமைந்திருந்தது. எனவே, 'தொகுதி' வெளிவந்தவுடனேயே அது தாக்கப்பட்டது! சிந்திக்க நேரமில்லை! சிந்திக்க நேரமே இல்லை! கலந்துரையாட நேரமில்லை! முற்றுமுழுதான கண்டனம் மட்டுமே!

இக்கேலிச் சித்திரம் 1997, ஜுலை 14ஆம் திகதி மீண்டும் பிரசுரிக்கப்பட்டது. இத்தகைய வெட்கக் கேடான போதனையிலிருந்து மக்கள் உஷார் நிலைக்குக் கொண்டு வரப்பட வேண்டும். சுதந்திரம் பெற்ற நாள் முதல், இவ்வளவு ஆண்டுகளிலும், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை எதிர்ப்போர், பிளவு, அல்லது பிரிவினை என்ற பூச்சாண்டியைக் கிளப்பி விட்டிருக்கின்றனர். இலங்கையின் நிலப்பரப்பு கூறுபடுவது எக்காரணங்கொண்டும் தடுக்கப்பட வேண்டும். இந்த விவாதம், தற்பொழுது ஒற்றுமையாக இருக்கும் நாடு, அதிகாரப் பகிர்வினால் பிரிவினைக்குள்ளாகி விடும் என்ற தவறான எடுகோளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால், இன்று இலங்கை ஒரு பிளவுபட்ட நாடென்பதும், இப்பிளவு பிரதேசரீதியானது மட்டுமன்றி தனிப்பட்டவர்களுக்கிடையேயும் சமுதாயங்களுக்கிடையேயுமான தொடர்புகளைப் பொறுத்தளவிலும் கூட உண்மையே என்பது தான் நாம் யாவரும் எதிர்நோக்க வேண்டிய யதார்த்தமாகும். சந்தேகம், நம்பிக்கையீனம், பகைமை என்பன உண்டு.

எத்தரப்பாயிருப்பினும், மக்கள் நகர்ந்து கொடுக்கத் தயாராக இல்லாது, அகழிக்குள் இருப்பது போன்ற நிலைமை நிலவுகின்றது என்பது இதன் கருத்தல்ல. ஒரு புறம் பார்த்தால், சில **சமயங்களில் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் போலியான தீவிரவாதித் தலைவர்கள், மக்களை வன்செயல்களில் இறங்கத் தூண்டுவது சாத்தியமாகின்றது.** இத்தகைய நிலைமைகள் கடந்த காலத்தில் இடம்பெற்றிருக்கின்றன. எனினும், அனுபவம் காரணமாக மக்கள் விவேகிகளாக இருப்பதனால், இத்தகைய நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவு. 1983இற்குப் பின்னர், அத்தகையதொரு மட்டத்தில் எந்தவொரு கலவரமும் ஏற்பட்டதில்லை. மறு புறம், உண்மையான சமநிலையான தலைமைத்துவம் இருக்கும் பட்சத்தில், பொது மக்கள் சாதகமாகவே துலங்குகின்றனர். உரிமை பாராட்டும் சில கும்பல்களும், அவற்றைப் பின்பற்றுவோரும் எதிர்க்கின்றனர். அத்தகைய எதிர்ப்பை நாம் சட்டை செய்யாமல் இருக்கவும் முடியாது. **ஆனால், எல்லா சமுதாயங்களிலும் தீர்வுக்கு அவசியமான உரையாடலுக்கும், கொடுத்து வாங்குவதற்கும், விட்டுக் கொடுப்பதற்கும் மக்கள் பரவலாகத் தயாராக இருக்கின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, போரை முடிவுக்குக் கொண்டு வரும் அவாவும், சமாதானத் தாகமும் பெருமளவில் இருக்கின்றன.** போரின் பயனாக அன்றாட வாழ்விலேற்படும் பல்வேறு வேதனைகளே இதற்குக் காரணம். நாடு முழுவதிலும் எல்லா சமுதாயங்களுக்கிடையிலும், எல்லா மட்டங்களிலும் எண்ணிறந்த கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. உ.ஒ.ம./இ.கு. இவற்றிற்கான ஆதாரங்களைக் கண்டுள்ளது. சில சமயங்களில், நாளின் ஆரம்பத்தில், அல்லது சற்றுத் தாமதமாக ஆவேசமாகக் கேள்விகள் கேட்கப்பட்டு, பலமான ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டு, வெளிப்படையான கலந்துரையாடலில் பின்னரும், கருத்துப் பரிமாற்றத்தின் பின்னரும் நாள் முடிவில் ஓர் உடன்பாட்டை நோக்கி நகரக்கூடியதாகவும் இருக்கின்றது. அவர்கள் மேலும்

தகவல்களை வேண்டி நிற்கின்றார்கள்; சமாதானத்திற்காக உழைப்பதற்குச் சந்தர்ப்பங்களையும் கோருகின்றனர். எனவே, அதிகாரப் பரவலாக்கம் ஒரு பிரிவினைச் சக்தியாக நோக்கப்படவில்லை. ஒருமைப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் வழிவகுக்கக்கூடிய பரஸ்பர நம்பிக்கையை உருவாக்கும் பெரும் சக்தியை இது கொண்டிருக்கின்றது.

அதிகாரப் பகிர்வு காரணமாகப் பல நாடுகளும் தாம் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளன என்று நாம் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டோம். எனவே, அதிகாரப் பகிர்வு இந்நாடுகளில் பிளவை ஏற்படுத்தவில்லையென்றால், இந்நாட்டில் அது பிளவை ஏற்படுத்துமென்று நாம் பயப்படத் தேவையில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்.

# 4
# வரலாற்றுப்பின்னணி

## வரலாற்றுப் பின்னணி

அதிகாரப் பகிர்வு அவசியம் என்பது பற்றியும் அதிகாரப் பகிர்வின் இயல்பு பற்றியும் விரிவாக ஆராய்வதற்கு முற்படுவதற்கு முன்னர், வரலாற்றுப் பின்னணியை ஆராய்வது அவசியம். சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்குமிடையேயான பகைமை, வரலாற்றில் ஆழமாக வேரூன்றியிருப்பதனால் அவர்கள் ஒரு நாட்டில் என்றுமே ஒற்றுமையாக வாழ இயலாதென்றும், பிரிவினை தவிர்க்க முடியாததொன்றென்றும் சில சமயங்களில் கூறப்படுவதே இதற்கும் காரணமாகும்.

## பொதுவானதொரு மனித குலம்

**நாம் பொதுவானதொரு மனித குலத்திற்கு உரித்தானவர்கள் என்பதை முதலில் ஞாபகத்திலிருத்த வேண்டியது இச்சந்தர்ப்பத்தில் முக்கியமாகும். பிரதான சமயங்கள் எல்லாவற்றிலும் இது வலியுறுத்தப்படுகின்றது**. கல்யாணிவங்ஸ பிரிவைச் சேர்ந்தவரும் இலங்கையின் சமாதான இயக்கத்தின் பெருந் தலைவர்களுள் ஒருவருமான வண. பட்டபொல அனோமதாஸி மகாநாயக்க தேரர், "போரா சமாதானமா?" என்ற தலைப்பில் எண்பதுகளில் சிங்களத்திலும், உ.ஒ.ம./இ.குழுவுடன் (WSF/SL) தொடர்பு கொண்ட விமுக்தி தர்ம கேந்ர என்ற நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்ட, இன மோதல் பற்றிய நூலை மெச்சி எழுதிய சில பகுதிகளை நினைவு கூருவோம். அவர் எழுதுகிறார்:

"வஸெத்த, அஸலாயன, மதுர சூத்திரங்கள் என்பன போன்ற சூத்திரங்களில் புத்த பகவானின் மிகச் சிறந்த சமூகத் தத்துவம், மனித குலத்தின் ஒற்றுமையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுவதுடன், இன, மத, சாதி வேறுபாடுகளும் அவை போன்ற ஏனைய வேறுபாடுகளும் எவ்வித அர்த்தமுமற்றவை என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன".

நமது பணியின் போது மிகப் பரவலாக விநியோகிக்கப்பட்ட, "இனவாதம் - பௌத்த கருத்தும் நமது சொந்த அனுபவமும்" என்ற கட்டுரையில் உ.ஒ.ம./இ.கு. (WSF/SL) இணைப்பாளர்களுள் ஒருவராகிய வண. மொரகொல்லகம ரத்னசார தேரர் புத்த பகவான் எடுத்துக் காட்டிய பல உதாரணங்களைத் தருகிறார்:

> "துறவிகளே! கங்கை, யமுனை, அச்சிராவதி, சரபு, மஹி போன்ற மாபெரும் நதிகள் யாவும் கடலினுள் பாய்ந்து, உவர் நீராக மாறுகின்றன. அதன் பின்னர், எந்தத் தண்ணீர் எந்த நதியினுடையது என்பதை எவராலும் பிரித்துக்காட்ட முடியாது. இதே போல, பல்வேறு சமூகங்களையும் சேர்ந்தவர்கள், சாஸனத்தில் சேரும் போது, இனம், சாதி, கோத்திரம் என்ற வித்தியாசமோ, வேறு வித்தியாசங்களோ கிடையாது" என்றார் (உபோஸத்த சூத்திரம்). இது, மானிட வர்க்கத்தின் சமத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. பிறப்பினால் மக்கள் எவ்விதப் பாகுபாட்டையும் கொண்டவர்களல்லர் என்பதையும் இது தனி ஆட்களினால் புகுத்தப்பட்ட ஒரு வகுதியேயாகும் என்பதையும் இது விளக்குகின்றது.
>
> "பல்வேறுபட்ட வகுதிகள் உள்ளன. உதாரணமாக, மரங்களையும் புற்களையும் எடுத்துக் கொள்வோம். இவற்றிற்கு வெவ்வேறான இயல்புகள் உண்டு. பல்வேறு வகையான புழுக்களும், எறும்புகளும், பூச்சிகளும இருக்கின்றன. இவற்றிற்கும் தனித்தனி இயல்புகள் உண்டு. ஊர்வனவற்றிற்கிடையிலும் அவையவைக்கே உரித்தான விசேட இயல்புகள் உண்டு. நீர்வாழ் உயிரினங்களும் இருக்கின்றன.

அவ்வவ்வகைக்குரிய இயல்புகள் உண்டு. பறவைகளை எடுத்துக் கொள்வோம். அவற்றிற்கும், அவற்றிற்கே உரித்தான இயல்புகள் உண்டு.

ஆனால், இவ்வினங்களைப் போலன்றி, மனிதர்களுக்கோ குறிப்பான இன இயல்புகள் எதுவுமில்லை. தலைமயிர், தலை, காது, கண், வாய், மூக்கு, உதடு, புருவம் என்பன இன அடிப்படையில் வேறுபடுகின்றவையா? நிச்சயமாக இல்லை; அல்லது கழுத்து, வயிறு, முதுகு, நெஞ்சு என்பவற்றைப் பாருங்கள்; அல்லது, அவர்களுடைய பாலியற் செயற்பாடுகளை அவதானியுங்கள். ஏதாவது வேறுபாடுகள் உண்டா? இல்லை. எனவே, இளைஞர்களே! மனிதர்களிடையே வேறுபாடுகள் இல்லை. அவர்கள் யாவரும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்களே. அவர்கள் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களே. எந்த வேறுபாடுகள் இருப்பினும் அவை யாவும் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட வேறுபாடுகளே. அவை ஒருபோதும் உண்மையான வேறுபாடுகளல்ல." (வஸ்ஸெத்த சூத்திரம்)

**எனவே, பொதுவானதொரு மனித குலம் என்பது அசைக்க முடியாததோர் அடிப்படையாகும். இது ஆண்டாண்டு காலமாகக் கூட்டு வாழ்க்கை, சமாதானம் என்பவற்றிற்கு ஆதரவாக அமைந்துள்ளதுடன், இன்றும் நமது மிகச் சிறந்த வளமாகவும் இருக்கின்றது.**

## பகைமையா, அல்லது இணக்கமா?

வரலாற்று நிகழ்வுகள் காரணமாகவும் புவியியல், காலநிலை நிலைமைகள் காரணமாகவும் ஏற்பட்டுள்ள பிரிவுகளைப் பார்த்தாலும் கூட சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையே, சாதாரணமாக உணரப்படுவதை விட அதிக அளவில் இணக்கமான தன்மைகள் உண்டு. சில சமயங்களில் ஆரிய, திராவிட வேறுபாடுகள் பெரிதுபடுத்தப்படுகின்றன. மானிடம், அல்லது இனம் என்பதன் அடிப்படையான நான்கு வகுதிகளையும் எடுத்துக் கொண்டாலும் கூட, அதாவது, கோகேஸியன், நிக்ரொயிட், மொங்களொயிட், ஒஸ்றளொயிட் - ஆரியரும் திராவிடரும் இறுதி வகுதியான ஒஸ்றளொயிட் வகுதியைச் சேர்ந்தவர்களாவர். சிங்கள் மக்களா, தமிழ் மக்களா முதன்முதலில் இலங்கைக்கு வந்தார்கள் என்பது பற்றியும், அவர்கள் இந்தியாவின் எப்பகுதியிலிருந்து வந்தார்கள் என்பது பற்றியும் பெரும் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. மிகப் பண்டைய காலத்திலிருந்தே இரு பகுதியினரும் வந்தனரென்பதும் இவ்விரு இனங்களுக்குமிடையிலும் இங்கு வாழ்ந்த ஆதிவாசிகளான பூர்வீகக் குடிகளுக்கிடையிலும் குறிப்பிடத்தக்களவு கலப்பு ஏற்பட்டதென்பதும் நிச்சயம்.

## ஒன்றிணைப்பு

இனங்களுக்கிடையிலேற்பட்ட கலப்பையும், ஒன்றிணைப்பையும் நிரூபிப்பதற்கு எண்ணற்ற உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். வட இந்தியாவிலிருந்து வந்த அரசகுமாரன் விஜயனின் வருகையே வரலாற்றுரீதியாக நிறுவப்பட்டுள்ள இடப்பெயர்வு பற்றிய காலத்தால் முந்திய சிங்களப் பதிவாகும். அவன் முதலில் இலங்கையின் பூர்வீகக் குடிமக்களுள் ஒருத்தியாகிய குவேனியை மணந்தான். ஆனால், இலங்கையின் முதலாவது மன்னனாக முடிசூடப்படுவதற்கு முன்னர், தென் இந்தியாவில் மதுரையைச் சேர்ந்த ஓர் இளவரசி, அவனுடைய மகிஷியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். அவனுடன் வந்த எழுநூறு பேரும், அவன் செய்தது போலவே தென் இந்தியாவிலுள்ள மதுரையைச் சேர்ந்த பெண்களை விவாகஞ் செய்தார்கள் என்று பதிவாகியுள்ளது. துட்டகைமுனு - எல்லாளன் (கி.மு.161) தொடர்பான, தமிழ் - சிங்கள மோதல பற்றிய கதையை

விபரமாகச் பரிசீலித்துப் பார்த்தால், சில குறிப்பிடத்தக்க அம்சங்களை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. வெறுமனே அந்த மோதலுக்கும் மேலாக, சிக்கார்ந்ததொரு விளக்கம் இவற்றிற்கு அவசியப்படுகின்றது. இலங்கையை 44 ஆண்டுகளாக ஆட்சி புரிந்த எல்லாளன் 'நீதி தவறாத ஓர் அரசன்' என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. சிங்கள பௌத்தர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களை நீதியான முறையில் அவன் கையாண்டமை பற்றிக் குறிப்பிடத்தக்க உதாரணங்களுண்டு. இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் அவன் தனது மகனையே தண்டித்தமை அவற்றுள் ஒன்றாகும். மற்றொரு தருணத்தில், தானே தண்டனையைப் பெறுவதற்கு அவன் முன்வந்தமை மற்றொன்றாகும். மேலும், எல்லாளனின் படையில் சிங்களப் போர் வீரர்கள் இருந்தது போல, துட்டகைமுனுவின் படையில் தமிழ்ப் போர் வீரர்கள் இருந்தார்கள். இருவரும் நேருக்கு நேர் போர் செய்து பிரச்சினைக்கு முடிவு காண்பதெனத் தீர்மானித்தனர். இரண்டு படைகளுக்குமிடையில் போர் நிகழ்ந்தால், தம்முடையவர்களையே எதிர்த்தரப்பில் கொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கலாம் என்பதே அத்தீர்மானத்திற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கலாம். போரில் வெற்றியடைந்த பின்னர், எல்லாளன் உயிரிழந்த இடத்தில், ஒரு நினைவுச்சின்னம் தாபிக்கப்பட வேண்டுமென்றும், அவ்விடத்தில் வழிபாடு செய்யப்பட வேண்டுமென்றும் துட்டகைமுனு கட்டளையிட்டான். வழிபாடு செலுத்தும் இவ்வழக்கம் ஏறத்தாழ இருபது நூற்றாண்டுகளாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இது துட்டகைமுனுவினதும், சிங்கள மக்களினதும் விவேகத்திற்கும், தாராள மனப்பான்மைக்கும் குறிப்பிடத்தக்கதோர் எடுத்துக் காட்டாக மட்டுமன்றி, இத்தமிழ் மன்னன் மீது பொதுமக்கள் செலுத்திய அளப்பெரும் மரியாதைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

இலங்கையை ஆட்சி புரிந்த மற்றொரு தமிழ் அரசனுக்குச் சிறந்ததோர் உதாரணமாகக் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (1747 - 1782) திகழ்கின்றான். இம்மன்னனின் அனுசரணை தீவிர ஊக்குவிப்பு என்பவற்றின் பலனாக, இதுகாறும் கைவிடப்பட்டிருந்த உயர் தீட்சை (உபசம்பதாவ), சயம் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு, மீண்டும் நிறுவப்பட்டது. இவனுடைய ஆட்சிக் காலத்திலும், இவனையடுத்து ஆண்ட மன்னன் இராஜாதி இராஜசிங்கனின் காலத்திலுமே (1782 - 1798) மாபெரும் சமய கலாசார மறுமலர்ச்சி ஏற்பட்டது. அறிஞரும், புனிதருமான சிங்கள பிக்கு, வண. வல்விட்ட அஸரண சரண ஸ்ரீ சரணங்கர தேரர் தனது ஆக்கபூர்வமான முன்னோடிப் பணியை இக்காலத்திலேயே பூர்த்தி செய்தார்.

அத்துடன் திரிபிட்டக்க மீதான தரம்வாய்ந்த உரை நூல்கள் (அட்டுவா, அட்டுவா டீக்கா என்பன), தென் இந்தியாவைச் சேர்ந்த தமிழ் சிரேஷ்டர்களால் (ஆச்சாரின் வஹன்ஸேலா) பாளி மொழியில் எழுதப்பட்டமையையும் மறத்தலாகாது. சிறப்பு மிக்க உதாரணங்களாக மகாதம்மபால மகா தேரரையும், புத்தகோஷ மகா தேரரையும் (கி.பி. 5ஆம் நூற்றாண்டு) குறிப்பிடலாம். மலேஷியாவைச் சேர்ந்த கலிங்க மாகனினால் அழிக்கப்பட்ட புத்த சாசனத்தை மீண்டும் நிலை நிறுத்துவதற்காக, தம்பதேனிய காலப்பகுதியில் (கி.பி. 13ஆம் நூற்றாண்டு) 2ஆம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில், கற்றறிந்த புனித மகாதேரர்கள் (உகத் சில்வத் மகா தேரர்) வருவிக்கப்பட்டனரென்றும், விலைமதிப்பற்ற நூல்கள் (வட்டினா பொத்) தென் இந்தியாவிலுள்ள சோழ நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டனவென்றும் பூஜாவலி என்ற நூலில் குறிப்பிடப்படுகின்றது.

இவை தவிர, இலங்கைச் சிங்கள் மன்னர்கள், தென் இந்தியாவைச் சேர்ந்த தமிழ் அரசிளங்குமாரிகளை மணஞ் செய்துள்ளனர். தென் இந்தியக் கைவினைஞர்களும், தொழினுட்பவியலாளர்களும், சாதாரண மக்களும் புராதன இலங்கையின் தாதுகோபங்கள், சிலைகள், மாளிகைகள், குளங்கள், கால்வாய்கள், வயல்கள் என்பனவற்றை அமைப்பதற்குத்

தமது பங்களிப்பைச் செய்துள்ளனர். மேலும், இந்து சமயமும் அதன் தெய்வங்களும் பௌத்த சமய வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. பௌத்த மதக் கோவில்களிலுள்ள தேவாலயங்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும். அடுத்ததாக, உடை, ஆபரணங்கள், மொழி, இலக்கியம் என்பனவற்றிலும் பொதுமைத்தன்மைகள் பெருமளவில் உண்டு. பொது மக்களிடையேயும், அரச குடும்பங்களிடையேயும் கலப்புத் திருமணங்கள் தாராளமாக இடம் பெற்றன. எனினும், அதே வேளை, எந்தவொரு கலாசாரமும் மற்றையதை விழுங்கி விடவில்லை. சிங்கள பௌத்த கலாசாரமும் இந்து தமிழ்க் கலாசாரமும் தத்தமது தனித்தன்மையான இயல்புகளைப் பேணி வந்திருப்பதுடன், இவ்விரு கலாசாரங்களுக்குமிடையே நிலவிய தொடர்பின் விளைவாக இரண்டுமே ஆக்கபூர்வமான அபிவிருத்தியை எய்தின.

**மோதல்**

இப்பின்னணியை மனத்திற் கொண்டே இக்காலப்பகுதியின் மோதல்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். சமயச் சின்னங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், இவை போன்ற ஏனைய தேசியச் செல்வங்கள் என்பவற்றிற்கும் பாரிய இழப்புக்களையும், அழிவையும் ஏற்படுத்திய போர்கள் நிகழ்ந்துள்ளன என்பதில் சந்தேகமில்லை. இது அந்த யுகத்தின் வரலாற்றின் ஒரு பகுதியாகும். **எனினும், அந்த மோதல்கள் இன்றைய மோதல்களைப் போல இனவாதத்தை அடிப்படையாக் கொண்டிருக்கவில்லை.** எல்லாள மன்னனின் ஆட்சியில் கீழ், சிங்களவர்கள் என்ற காரணத்திற்காகச் சிங்கள மக்கள் துன்புறுத்தப்படவோ, பாரபட்சமாக நடத்தப்படவோ இல்லை. இதே போன்று, சிங்கள மன்னன் துட்டகைமுனு எல்லாளனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த போது தமிழர்கள் என்ற காரணத்திற்காகத் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படவோ, பாரபட்சமாக நடத்தப்படவோ இல்லை. **இது உண்மையில் வம்சப் போராகும். எனவே, அது வகுப்பு சார்ந்ததொன்றாகும்.** இலங்கையில், பகைமை கொண்ட வம்சங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும் தரப்புக்களுள் ஒரு தரப்பு, தென் இந்திய அரச வம்சம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்து கொள்ளும். மற்றைய தரப்பு, தென்னிந்தியாவிலுள்ள மற்றொரு வம்சத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளும். சிங்கள மக்கள், தமிழர் என்பதற்காகத் தமிழருடன் போராடவில்லை. அதே போல, தமிழ் மக்கள் சிங்களவர் என்பதற்காகச் சிங்களவருடன் போராடவில்லை. இன உணர்வுகள் நிலவவில்லை. இவை அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குப் பகைமை கொண்ட அரச வம்சங்களுக்கிடையிலான தொடர்ச்சியான போராட்டங்களாகவே இருந்தன. இன்று, இனவாதச் சக்திகள் உண்மைகளைத் திரித்து, அவற்றின் அடிப்படையில் இனத் துவேஷத்தைத் தூண்டுவதால், மேலே கூறப்பட்டதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியது அவசியம். ஆகவே, அடிப்படைக் காரணங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் அத்தியாவசியமாகும்.

**ஏகாதிபத்திய ஆட்சிக் காலம்**

ஏகாதிபத்திய ஆட்சிக காலத்திலேயே, நாட்டில் சில பிரிவினைக் காரணிகள் உத்வேகம் பெற்றதுடன், சீழ் நிறைந்த புண்போல இனவாதம் நிலைபெறலாயிற்று. மக்களுக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்து, பலம் மிக்கதொரு தன்னிறைவடிப்படையை வழங்கிய விவசாயப் பொருளாதாரம், தேயிலை, இறப்பர், தெங்கு என்பனவற்றை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யும் பெருந்தோட்டப் பொருளாதாரமாக மாற்றப்பட்டதுடன், உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படலாயின. ஆரம்பத்தில், இது ஓரளவு துரித அபிவிருத்தியை ஏற்படுத்திய போதிலும் காலப்போக்கில் உலகத்தில் உணவின் விலைகள் ஏறத்தொடங்கிய போதிலும் ஏற்றுமதிகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் அதற்குச் சமமாக அதிகரிக்கவில்லை. இதன் விளைவாகப் பாரதூரமான கொடுப்பனவு (வியாபார) நிலுவைப் பிரச்சினைகள் தோன்றலாயின. ஆயிரத்துத் தொளாயிரத்து

அறுபதுகள் முதல் இலங்கை கடனில் மூழ்க ஆரம்பித்தது. இந்நிலைமையுடன், தெற்கிலும் வடக்கிலும் எழுச்சிகளும் புரட்சிகளும் தோன்றலாயின. கட்டாயத்தின் கீழான மதக்குழுக்களின் செயற்பாடுகளின் விரிவாக்கமும் போட்டியடிப்படையிலான முதலாளித்துவம் ஏகாதிபத்திய சுரண்டலும் பிரித்தாளும் கொள்கையுடன் சேர்ந்து, அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் இலங்கை தன் மீது ஆதிக்கம் செலுத்திய மேற்கு நாடுகளில் தங்கியிருக்கும் நிலைமையையும், அவற்றினால் நசுக்கப்படும் நிலைமையையும் உருவாக்கிற்று. எனினும், எதிர்ப்பியக்கங்களும், கலகங்களும் இடம்பெற்றுப் பெரும் பலவீனத்திற்குள்ளாகிய போதிலும், தேசியப் பாரம்பரியங்களும், உணர்வுகளும் இறந்தொழியாமல் பேணப்பட்டன. ஆரம்பத்தில் இரண்டு இனங்களும் இவ்வெதிர்ப்பியக்கங்களில் சேர்ந்து கொண்டன. காலத்திற்குக் காலம் இத்தகைய ஒருமித்த எதிர்ப்பு இடம்பெற்ற போதிலும், அதிகரித்து வந்த சீர்கேட்டினாலும், பிளவினாலும் இனங்கள், மேன்மேலும் ஒன்றுக்கொன்று எதிராக மாறியதனால் ஏகாதிபத்திய நெருக்குதல்களுக்கும் அண்மைக் காலத்தில் நவீன குடியேற்றவாத நெருக்குதல்களுக்கும் சுரண்டல்களுக்குமான எதிர்ப்பு பெருமளவில் பலவீனப்பட்டு விட்டது.

## போர்த்துக்கேயர் காலமும், ஒல்லாந்தர் காலமும்

அடக்குமுறைச் செயற்பாடுகளும், அடிமைப்பாட்டுச் செயற்பாடுகளும் போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சிகளுடன் ஆரம்பமாயின. இவற்றுடன் இவர்களது ஆட்சி தாக்கம்மிக்க வன்முறைகளையும் கொடூரச் செயல்களையும் கொண்டிருந்தன. மிளகு, கறுவா, பாக்கு என்பன போன்ற ஏற்றுமதிப் பயிர்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. முதலில் போர்த்துக்கேயரும், பின்னர் ஒல்லாந்தரும் இவ்வியாபாரத்தில் தனியுரிமையைத் தம் வசமாக்கிக்கொண்டு, ஒழுங்கானதொரு முறையில் மக்களைச் சுரண்டினர்.

முதலில் போர்த்துக்கேயரும், பின்னர் ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் தமது கட்டுப்பாட்டை நிலை நிறுத்திய இக்காலப்பகுதியில் மலை நாடு தன் சுதந்திரத்தைத் தொடர்ந்து பேணக்கூடியதாக இருந்தது. இதனால், ஒரே இனத்தவரிடையே (சிங்கள இனத்தவர்) கீழ் நாட்டுச் சிங்களவர், மலைநாட்டுச் சிங்களவர் (கண்டிச் சிங்களவர்) என்ற பிரிவினை இக்காலகட்டத்தில் தோன்றியது.

## பிரித்தானியர் காலம்

நசுக்கற் செயற்பாடும், சுரண்டற் செயற்பாடும் ஆங்கிலேயர் காலத்தில் மேலும் சீராகத் தொடர்ந்து இடம்பெற்றதுடன், பிரித்தாளும் கொள்கை, ஒரு நுண்கலை என்று சொல்லக்கூடிய அளவிற்கு விருத்தி செய்யப்பட்டது.

இவர்கள் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றி, நாடு முழுவதையும் தமதாட்சிக்குட்படுத்தினார்கள். ஒரே விதமான நிர்வாகத்தை அறிமுகப்படுத்தினார்கள்; போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தினார்கள்; தமது கல்வி முறையைப் பரப்பினார்கள். மேலும் பயனுறுதி வாய்ந்த முறையில் நாட்டின் வளங்களைச் சூறையாடுவதற்காகவே இவற்றைச் செய்தார்களேயன்றி, மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கோ, முன்னேற்றுவதற்கோ அல்ல.

## நில அபகரிப்பு

1840களில் இயற்றப்பட்ட சதுப்பு நிலச் சட்டம், அல்லது முடிக்குரிய நிலச் சட்டம் மக்களைப் பொருளாதார ரீதியில் அடிமைப்படுத்துதல் தொடர்பான பிரதான மைல்கல்லாகும். இச்சட்டத்தின்

கீழ் விவசாயிகளின் நிலங்களும், பொதுவான மேய்ச்சல் நிலங்களும், காடுகளும், கோப்பித் தோட்டங்களுக்காகவும், கோப்பிச் செடிகள் நோய்வாய்ப்பட்டு கோப்பிச் செய்கை தோல்வியுற்றதும், தேயிலை, இறப்பர் செய்கைகளுக்காகவும் வெளி நாட்டுக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன. சமுதாயத்தின் உயர் மட்ட மக்களின் உள்ளூாக் கம்பனிகளும் பின்னர், இத்தகைய கொள்ளையில் ஈடுபட்டன. இதனால் விவசாயப் பொருளாதாரம் வெளி நாடுகளில் தங்கியிருக்கும் பெருந்தோட்டப் பொருளாதாரமாகப் படிப்படியாக மாற்றமடையலாயிற்று.

பிரதானமாக, தேயிலைப் பயிர்ச்செய்கைக்கும், இறப்பர் பயிர்ச்செய்கைக்கும் இந்நிலம் பொருத்தமாக அமையாததனால், தமிழரின் விவசாய நிலங்கள் சதுப்பு நிலச் சட்டத்தினால் பாதிக்கப்படவில்லை என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். எனவே, சிங்கள விவசாயிகள் பட்ட அளவு அல்லலுக்குத் தமிழ் விவசாயிகள் ஆளாகவில்லை. சிங்கள விவசாயிகளுள் மலை நாட்டு (கண்டி) சிங்களவர்களே அதிக அளவு இன்னலுக்குட்பட்டனர்.

## இனவாதம்

பொருளாதாரத்தின் ஏகாதிபத்திய சகாப்தத்தில் சீவனோபாயம், விவசாய வீழ்ச்சியுடனும் பொருளாதாரமானது சார்ந்து வாழும் பெருந்தோட்டப் பொருளாதாரத்திற்கு மாற்றப்பட்டதுடனும் நாட்டில் பிரிவினைச் சக்திகள் தோன்றலாயின என்பது ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. மறு புறம், ஒப்பீட்டளவில் ஒரு மேலோட்டமான விதத்தில் குறிப்பிட்டதொரு அபிவிருத்தி ஏற்பட்டது. உதாரணமாக தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் முதலியவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானத்தைக் கொண்டு, நாடளாவியரீதியில் தெருக்களும், புகையிரத வீதிகளும் அமைக்கப்பட்டன. ஆனால், இவை பிரதானமாக ஏகாதிபத்திய அரசுகளுக்கும் நன்மை பயப்பனவாக அமைந்தன. மறு புறம், ஆழமாகப் பார்த்தால் மக்களை அடிப்படையாகக் கொண்ட நாட்டின் முழுமையான சமய, சமூக, கலாசார அமைப்பு சீரழிவுக்குட்பட்டதுடன், முக்கியமான சமுதாய அடிப்படை விழுமியங்கள் படிப்படியாக அருகிப்போயின. அடிப்படை மனிதப் பண்புகள் நம் நாட்டவரின் கலாசாரத்தில் ஆழ்ந்து பதிந்திருப்பதாலும், அவை இன்னமும் உயிர்த் துடிப்புடன் இருப்பதாலும் சமாதானத்தை உருவாக்குவதற்குத் தலைவர்கள் அவற்றைப் பயன்படுத்தலாமென்ற போதிலும், மேன்மேலும் நாட்டை ஆக்கிரமித்து வரும் வன்செயல்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் இவ்வாறு களம் அமைக்கப்பட்டது.

பிரிவினைச் சக்திகள் உருவாகிய போது, இறுதியில் சிறுபான்மையினர், தாம் சிறுபான்மையினர் என்ற ஒரே காரணத்திற்காக, ஆகக்கூடிய அளவில் அல்லலுற்ற போதிலும் சிறுபான்மையினர் மட்டுமே அவதிக்குள்ளாகவில்லை. பெரும்பான்மையினருக்கெதிராகச் செயற்பட்ட காரணிகளும் உண்டு. இறுதித் தீர்வுகள் பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் நியாயமானவையாக அமைய வேண்டுமென்பதனால், இவற்றையும் கணிப்பிற்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

ஏகாதிபத்திய யுகத்தில், பிரித்தாளும் கொள்கை, பெரும்பான்மையினருக்கு எதிராகச் செயற்பட்டது. அதிக ஆபத்தாக அமையக்கூடிய பெரும்பான்மையினருக்கெதிராக, ஆட்சியாளர்கள், சிறுபான்மையினரைப் பலப்படுத்தினர். சில சமயங்களில் சிறுபான்மையினர் இதனை எதிர்த்து, பெரும்பான்மையினருடன் சேர்ந்து, தமது பொது எதிரிக்கெதிராக ஒன்றுபட்டனர். ஆனால், பிளவுபட்டதொரு போட்டிமயமான உலகில் (அவ்வாறு பயன்படுத்தலும் அதனால் நன்மையடைதலும்) அத்தகைய எதிர்ப்பு ஒரு விதிவிலக்காகும். கல்வி, வியாபாரம், நிலம், அரசாங்கத் தொழில், இராஜதந்திரவுபாயங்கள், ஆயுதப் படைச் சேவைகள் என்பவற்றில் அவர்களுடைய தொகையினடிப்படையில் பார்க்கையில் தமிழர்கள் அதிகளவு பதவிகளை

வகித்தனர். இது தற்செயல் நிகழ்ச்சியாக இருக்க முடியாது. சில சமயங்களிற் கூறப்படுவது போலக் கூடிய திறமை, அல்லது கடின உழைப்பு என்பவையே இதற்குக் காரணமென்று சொல்வது மேலோட்டமானதாகவே இருக்கும். நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டிய ஆழமான பொருளாதாரக் காரணங்களும், சமூகக் காரணங்களும் எப்பொழுதுமே இருக்கும். பிரித்தாளும் கொள்கை, ஓரளவிற்கேனும் இதற்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். பல்வேறு துறைகளிலும் பிரத்தியேகமான பதவிகளைப் பெற்ற போட்டிச் சமூகத்தில் இடம்பெறும் தமிழரும், முஸ்லிம்களும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அல்லது சில சமயங்களில் பொது நன்மையையோ, தேசிய நன்மையையோ கருதாமல், தம்மவர்களின் நன்மைகளைப் பேணினர் என்பதையும் குறிப்பிட வேண்டும். ஆனால், இதற்குக் குறிப்பிட்டத்தக்க விதிவிலக்காக அமைந்தவர்களுமுண்டு. ஆனந்தகுமாரசுவாமி சிறந்ததொரு விதிவிலக்காவார். இவரைப் போன்ற தன்மையினர் வேறு பலரும் இருந்தனர்.

பெரும்பான்மையினரின் மதமாகிய பௌத்தமும், மொழியாகிய சிங்களமும், கலாசாரமும் நீண்ட காலமாகச் சமயரீதியான துன்புறுத்தல்களையும், அடக்குமுறைகளையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. 1948ஆம் ஆண்டில் எய்தப்பட்ட சுதந்திரம் பல வழிகளில் நன்மைகளைக் கொண்டு வந்த போதிலும், அதாவது பௌத்தத்திற்கும், சிங்கள மொழிக்கும் பிரத்தியேகமான கணிப்பும், நன்மைகளும் வழங்கப்பட்ட போதிலும், நவீன குடியேற்றவாதத்தின் கீழும் தற்போதைய பகிரங்கச் சந்தைப் பொருளாதாரத்தின் கீழும் மக்களின் பொருளாதார, சமூக, கலாசார வாழ்வு அபாயமான நிலையிலுள்ளது. இந்நிலைமை, சிறுபான்மையோருக்கும் பொருந்தும். இது மிகச் சிக்கலானது. சிங்களப் பெரும்பான்மைக் கட்டுப்பாட்டின் கீழிருந்த அரசாங்கத்திலும் கூட, தெற்கைச் சேர்ந்த சிங்கள இளைஞர்கள் 1971ஆம் ஆண்டு, 1987ஆம் ஆண்டுக் கிளர்ச்சிகளின் போது அழிக்கப்பட்டனர் என்பதை மறக்கலாகாது.

தாம் எண்ணிக்கையில் கூடுதலாக இருந்த போதிலும், உண்மையில் பொருளாதார, சமூக, கலாசாரரீதியில், சில சமயங்களில் ஒரு சிறுபான்மையினரைப் போன்ற தடைகளைக் கொண்டிருந்தனரென்று கருதிய சிங்கள மக்கள், வாழ்வின் பல துறைகளிலும் காணப்படும் சமமின்மையையும், பாரபட்சத்தையும் எதிர்க்கின்றனர். மேலும், உலகில் தாம் மட்டுமே சிங்கள மக்கள் என்றும், தென் இந்தியாவில் பல மில்லியன் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்றும் சில சிங்கள மக்கள் பெரும்பாலும் வாதாடுகிறார்கள். எனவே, ஈழப் பிரிவினை என்ற பயத்தைக் கொண்ட பின்னணியில், தமிழரை முழுமையாக எடுத்துப் பார்த்தால் அவர்கள் பெரும்பான்மையினராக உள்ளனர் என்றும், அவர்கள் சிங்களவரை விஞ்சிவிடுவர் என்றும் சிங்களவர்கள் எண்ணுகின்றனர். இது நியாயப்படுத்த முடியாத பயம் என்று சிலர் நினைக்கலாம். உண்மையில் இது நியாயப்படுத்த முடியாததொன்றாக இருக்கலாம். ஆனால், இப்பயம் ஒரு விதப் பாதுகாப்பின்மையைக் குறிக்கின்றது. இதை விளங்கிக் கொள்ள வேண்டும். ஆதிக்கம் செலுத்தும் சிறுபான்மை வர்த்தகச் சக்திகளுடன் (தமிழ், முஸ்லிம்) போட்டியிட்டு அவர்களை வெல்ல முயலும், எழுச்சி பெற்றுக் கொண்டிருக்கும் சிங்கள வர்த்தகச் சக்திகள் இக்கருத்திற்குத் தூபமிடுகின்றன.

சட்டவாக்கச் சபையில், சிங்கள மக்கள் பெரும்பான்மையைப் பெற்று அதன் மூலம் நாட்டில் ஓர் ஆதிக்க நிலையை எய்திய போது, சக்திகளின் சமநிலையை அவர்கள் மாற்ற முயற்சி செய்வர் என்பது இயல்பே. தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளையும் கருத்திற் கொண்டு, அவர்கள் அவ்வாறு செய்திருந்தால், அச்செயல் நியாயப்படுத்தப்பட்டதாக அமைந்திருக்கும். ஆனால், தமிழ் சிறுபான்மையினருக்கெதிரான சிங்கள அடக்குமுறையும், பாரபட்சமுமே இதைத் தொடர்ந்து வந்த சோகக் கதையாகும். எல்லாவற்றிற்கும் மேலாக நியாயமான ஒரு தீர்வை

முன்வைத்து, அதைச் செயற்படுத்துவதில் சிங்களவர் மீண்டும் மீண்டும் தவறி விட்டனர். பயங்கரவாதமும், பயங்கரவாதத்திற்கான காரணங்களும் என்ற தலைப்பில் இக்கதை ஏற்கனவே கூறப்பட்டு ஆராயப்பட்டுள்ளது. இது, இரு தரப்பிலும் மேன்மேலும் வன்செயல்களுக்கு வழிவகுத்துள்ளதென்பதும் பரஸ்பர அழிவைத் தடுப்பதற்காக இரு தரப்பினரும் ஒன்று சேர்வதற்கு ஓர் அறைகூவலாக இது அமைந்திருக்கின்றது என்பதும் ஏற்கெனவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பாரபட்சம், அடக்குமுறை, வன்செயல் என்பவற்றில் எத்தரப்பினர் ஈடுபட்டாலும், பரவலான பொது மக்களையும் தலைவர்களையும் வேறுபடுத்திப் பார்த்தலில் நாம் கவனமாக இருக்க வேண்டும். **பரவலான பொது மக்களைக் குற்றஞ் சொல்ல முடியாது. இவர்கள் அடிப்படையில் இனவாதிகள் என்று கூற இயலாது.** தொடர்ச்சியான, தவறான பிரச்சாரத்தினாலும் கொள்கைத் திணிப்பினாலும் சில சமயங்களில், இவர்களுட் சிலர், ஓரளவு தூரத்திற்கு, வன்செயல்களில் ஈடுபடுவதற்குத் தூண்டப்பட்டுள்ளார்கள்; தூண்டப்பட்டு வருகிறார்கள். எனவே, இவர்கள் இந்நிலைக்கு ஓரளவிற்குப் பொறுப்பேற்க வேண்டும். ஆனால், சகல தரப்புக்களையும் சேர்ந்த தலைவர்களும் பல்வேறு சமய மட்டங்களிலும், மதச் சார்பற்ற மட்டங்களிலும் திறந்த போட்டிச் சந்தை நிலவும் சமூகத்தில் அதிகாரத்தைக் கைப்பற்ற பறக்கிறார்கள். இவர்களே பிரதானமாகப் பொறுப்பேற்க வேண்டியவர்கள். சுதந்திரத்தின் பின் அதிகளவு அதிகாரம் பெற்றவர்களாகத் திகழ்ந்தமையால், குறிப்பாகப் பெரும்பான்மைச் சிங்களத் தலைவர்களே இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். **ஒரு புறம் தம்மைப் பற்றிய உண்மைகளையும், மற்றவர்களைப் பற்றிய உண்மைகளையும் தம்மைப் பின்பற்றுவோருக்குச் சொல்லக்கூடிய உண்மையான சிங்கள பௌத்தத் தலைவர்களும் மறு புறம் உண்மையான இந்து மதத் தமிழ்த் தலைவர்களும் உண்மையான இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத் தலைவர்களும், மதச்சார்பற்ற மட்டத்தில் உண்மையான தலைவர்களும் அவசரமாகத் தேவைப்படுகிறார்கள். மற்றவர்களால் மேற்கொள்ளப்படும் பாரபட்சமான நடவடிக்கைகள், அடக்குமுறைகள், வன்முறைகள் என்பவை பற்றிய உண்மைகளை மட்டுமன்றி, இவை தொடர்பாக நாம் செய்பவற்றையும், தனிப்பட்டவர்கள் என்ற முறையிலும், சமுதாயங்கள் என்ற முறையிலும் நாம் மேற்கொள்ளும் செயல்களையும் நாம் எல்லோருமே உணர்ந்து கொள்ள வேண்டும்.**

### முன்னைய யாப்புச் சீர்திருத்தங்கள்

யாப்புச் சீர்திருத்த இயக்கத்தின் சில அம்சங்களைப் பற்றியதொரு வரலாற்றுரீதியான ஆய்வு, இன்று யாப்புச் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும், அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் நாம் விளங்கிக் கொள்வதற்கு நமக்குதவும்.

### கோல்புறூக் ஆணைக்குழு - 1833

1833ஆம் ஆண்டில், கோல்புறூக் சீர்திருத்தங்களின் கீழ், சட்டசபை நிறுவப்பட்ட போது தான், இனரீதியான பிரதிநிதித்துவ முறை முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. ஆளுநரால் தெரிவு செய்யப்பட்ட ஆறு உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களுள், மூவர் ஐரோப்பியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும், ஏனைய மூவரும் முறையே சிங்களவர், தமிழர், பறங்கியர் என்போரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் நியமிக்கப்பட்டனர்.

இன அடிப்படையில் பிரதிநிதிகளை நியமித்தமை, பிரிவினைப் போக்குகளை மக்களிடையே ஊக்குவிக்கும் தன்மையை அறிமுகப்படுத்தியதுடன், துரதிர்ஷ்டவசமானதொரு முன்

உதாரணத்தையும் உருவாக்கியதென்று கூறலாம். மறு புறம், இத்தகைய நியமனம் பிரிவு பற்றிய உண்மைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றிற்கொரு தீர்வைக் காண்பதற்கு முற்பட்டதென்றும் கூறலாம்.

## இடைவிடாத இழுபறி

இனங்களுக்கிடையேயான அதிகாரப் போட்டியில் இடையறாத இழுபறியையும், பின்னர் நீதித் தராசாகி எப்பக்கத்திற்குச் சார்பாக அமைந்ததென்பதையும் பிற்பட்ட வரலாறு காட்டி நிற்கின்றது.

## யாப்புச் சீர்திருத்தங்களின் மீதான விஞ்ஞாபனம் - 1908

குடியேற்றச் செயலாளரின் கோரிக்கையின் பேரில், இலங்கைத் தேசியச் சபையைச் சேர்ந்த ஜேம்ஸ் பீரிஸ், 1908இல் யாப்புச் சீர்திருத்தங்களின் மீதான சிறப்பு மிக்கதொரு விஞ்ஞாபனத்தைச் சமர்ப்பித்தார். இனரீதியான பிரதிநிதித்துவ முறை ஒழிக்கப்பட வேண்டுமென்பதும், அதற்குப் பதிலாக தேர்தலின் மூலம் நியமனம் இடம்பெற வேண்டுமென்பதும் இதில் அடங்கிய ஆலோசனைகளில் சேர்க்கப்பட்டிருந்தன.

## கற்ற இலங்கை உறுப்பினருக்கான தேர்தல் - 1912

பொன்னம்பலம் இராமநாதன், மார்கஸ் பர்னான்டோவைத் தோற்கடித்ததன் விளைவாக, கற்ற இலங்கை உறுப்பினருக்கான தேர்தலில், 1912இல், ஒரு தமிழர் தெரிவு செய்யப்பட்டார். சிங்கள கொவிகம சாதியினரும் தமிழ் வேளாள சாதியினரும் கரையாரையும், ஏனைய கரையோரச் சாதியினரையும் தோற்கடிப்பதற்காக ஒருமித்துக் கருமமாற்றியமையினால், சாதியே தீர்மானிக்கும் காரணியாக அமைந்ததென ஒரு சிலர் கூறுகிறார்கள். ஆனால், அரசாங்கச் சேவையில், பொன்னம்பலம் இராமநாதன் மிகக் குறிப்பிடத்தக்க சேவையை ஆற்றினார் என்பதும், அந்நூற்றாண்டில் வாழ்ந்த இலங்கையருள் அவர் ஒரு தனி இடத்தை வகித்தார் என்பதும் குறிப்பிடப்பட வேண்டும். இவர் மிகப் பெரிய தொகையான மேலதிக வாக்குகளினால் வெற்றி பெற்றார். எனவே, சாதி ஒரு காரணியாக இருந்திருக்கக் கூடுமெனினும் திறமையே வெற்றி பெற்றதென்று கூறலாம். இக்கால கட்டத்தில், ஏனைய குறுகிய காரணிகளுக்கு மேலாகத் திறமையே மேலோங்கி நிற்கக்கூடியதாக இருந்ததென்று கூற முடியும். எனினும், வெகு விரைவில், காலம் மாறும் நிலை ஏற்பட்டது.

## சிங்கள - முஸ்லிம் கலவரம் - 1915

1915ஆம் ஆண்டு மே மாதத்தில் பாரதூரமானதும் மிகப் பரவலானதுமான சிங்கள - முஸ்லிம் கலவரம் இடம்பெற்றது. இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. பெருந்தொகையான மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஏனையோர் விசாரிக்கப்பட்டு, பின்னர் தூக்கிலிடப்பட்டனர். இது, ஆங்கிலேயருக்கெதிராக நடத்தப்பட்டதொரு புரட்சி என்று தவறாக அர்த்தம் செய்து கொண்ட அரசாங்கம், பல சிங்கள பௌத்த முக்கியஸ்தர்களைச் சிறையிலடைத்தது. இந்த அடக்குமுறையின் கடுமைத் தன்மையை எதிர்க்குமுகமாக, ஒரு பொதுக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. சிங்களச் சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமென்று இக்கூட்டத்தில் கோரப்பட்டது. கிறிஸ்தவ கரையாரச் சாதியைச் சேர்ந்த ஜேம்ஸ் பீரிஸ் சொலமன் பர்னான்டோ என்போர் இக்கூட்டத்தில் உரையாற்றினர். பிரித்தானியக் குடியேற்றச் செயலாளருக்கு ஒரு விஞ்ஞாபனம் அனுப்பப்பட்டது. போர்க் காலத்தில் டோப்பிடோ நிறைந்த கடல்களினூடாகப் பயணத்தை மேற்கொண்டு, இவ்வபாயகரமான பணியிலீடுபட்டார். ஏகாதிபத்திய ஆட்சியாளர்களிடமிருந்து வரக் கூடிய

பொதுவான அபாயங்களைச் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் உணர்வதற்கும் தம்மைப் பாதுகாத்துத் தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கும் ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய இயக்கமொன்று அவசியம் என்பதை உணர்வதற்கும் இக்கலகம் உதவியது.

## இலங்கைத் தேசியக் காங்கிரஸ், 1919

இலங்கைத் தேசியச் சபை, இளைய இலங்கை, யாழ்ப்பாணக் காங்கிரஸ், சிலாபக் காங்கிரஸ், கண்டி மகாஜன சபை, இலங்கை முஸ்லிம் லீக் என்பன உட்பட்ட பல அமையங்கள் ஒன்றிணைந்து, 1919இல் இலங்கைத் தேசியக் காங்கிரஸை நிறுவின. விசேடமாக, தலைவரும், செயலாளருமாக முறையே பொன்னம்பலம் அருணாச்சலமும், எம்.ஏ. அருளானந்தனும் இடம்பெற்றமையால், இது குறிப்பிடத்தக்கதொரு நிகழ்வாகும். ஈ.டி.டி சில்வா இதன் பொருளாளராக இருந்தார். யாப்புச் சீர்திருத்தங்களுக்கான ஆலோசனைகளைச் சமர்ப்பிப்பதற்காக இங்கிலாந்திற்கு தூதுக் குழுவொன்றை அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## பிளவு, 1921

இவ்வொற்றுமை சொற்ப காலத்திற்கே நீடித்தது. மேற்கு மாகாணத்தில் தமிழர்களுக்கென ஓர் ஆசனத்தை ஒதுக்குவதற்கான வாக்குறுதி நிறைவேற்றப்படாததால், பொன்னம்பலம் அருணாச்சலமும் ஏனைய தமிழ் பிரதிநிதிகளும் இலங்கைத் தேசியக் காங்கிரஸிலிருந்து விலகினர். அவர்கள் தமிழ் மகாஜன சபையை நிறுவினர். அருணாச்சலத்தின் மகன், அருணாச்சலம் மகாதேவா தொடர்ந்தும் காங்கிரஸில் இருந்தார். இலங்கைத் தேசியக் காங்கிரஸின் சார்பாக, ஜேம்ஸ் பீரிஸ், 45 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்டசபைக்கான கோரிக்கையை விடுத்தபோது, சிங்களத் தலைவர்களுக்கும் சிறுபான்மையினருக்குமிடையில் நிலவிய ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி, தமிழ், முஸ்லிம், பறங்கிப் பிரதிநிதிகளினூடாக, தீவிரம் குறைந்த ஆலோசனைகளுக்கு ஆதரவு வழங்கும் யுக்தியை ஆளுநர் மனிங் கையாண்டார்.

## டொனமோர் ஆணைக்குழு - 1931

சர்வஜன வாக்குரிமையை (21 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை) வழங்க வேண்டுமென்றும், இலங்கையர் தமது விவகாரங்களைத் தாமே நடத்திச் செல்வதற்கு வழிவகுக்கக்கூடிய சட்ட சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்றும் 1931இல் டொனமோர் ஆணைக்குழு விதப்புரை வழங்கியது.

1936ஆம் ஆண்டின் இரண்டாவது சட்டசபை முழுச் சிங்கள அமைச்சரவையைக் கொண்டிருந்தது. இது இக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நம்ப முடியாத, பிற்போக்கான நடவடிக்கையாகும்.

## முப்பதுகளைக் கொண்ட தசாப்தம்

முப்பதுகள், அக்கால கட்டத்தைக் குறிப்பதான சில அறிகுறிகளையும், எதிர்காலத்தில் நிகழக் கூடியனவற்றைக் குறிக்கும் சில முன் அறிகுறிகளையும் காட்டும் காலப்பகுதியாக அமைந்தது.

## தமிழ் காங்கிரஸ்

கேம்பிரிஜ் பட்டதாரியான ஜி.ஜி.பொன்னம்பலம், 1934இல் தமிழ் காங்கிரஸை நிறுவினார்.

### சிங்கள மகா சபை

ஒக்ஸ்போர்ட் பட்டதாரியான எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, 1937இல் சிங்கள மகா சபையை நிறுவினார்.

### யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்

ஆளுமை மிக்க தலைவர் ஹன்டி பேரின்பநாயகத்தின் கீழ், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் செயற்பாடுகள், முப்பதுகளில் உச்ச நிலையை அடைந்தன. இக்காலப்பகுதியில் பெரும்பாலான சிங்கள, தமிழ் தேசியத் தலைவர்கள், ஒப்பீட்டளவில் மெதுவான முன்னேற்றத்தில் திருப்தி கொண்டவர்களாகக் காணப்பட்டனர். ஆனால், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், தாம் வாழ்ந்த காலத்தையும் விஞ்சிய, தைரியம் மிக்க முன்னோடியாகத் திகழ்ந்தது. டொனமோர் சீர்திருத்தங்கள் போதியதாக அமையவில்லையென்று, அது இச்சீர்திருத்தங்களை வன்மையாக எதிர்த்தது. ஏகாதிபத்திய நிலையைத் திடமாக எதிர்த்து நின்று முழுமையான சுதந்திரத்தைக் கோரினர். மேலும் இவர்கள், இனவாத அரசியலில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. கலாநிதி பி.டி.எஸ்.குலரத்ன, எல்.எச்.மெத்தானந்த போன்ற பௌத்த மறுமலர்ச்சித் தலைவர்களுடன் வலுவான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். யாழ்ப்பாணத்தில் அவர்கள் நடத்திய வருடாந்த மகா நாட்டில், குலரத்ன பிரதான அதிதியாக கௌரவிக்கப்பட்டார். அத்துடன், பிலிப் குணவர்தன போன்ற இடது சாரித் தலைவர்களுடனும் சாதகமான தொடர்புகளைக் கொண்டிருந்தனர். எனினும், அக்காலத் தமிழ் போக்குகளுக்கெதிராக இவர்களால் நிற்க முடியவில்லை.

**எப்படியிருப்பினும், எதிர்காலத்தைச் சுட்டும் வகையில் ஆக்கபூர்வமாகச் செயற்பட்டவர்கள் என்ற விதத்தில், பிரகாசமானதோர் உதாரணமாக இவர்களை இங்கு குறிப்பிட வேண்டும்.**

### இடதுசாரி இயக்கம்

முப்பதுகளளவில், இடதுசாரி இயக்கம் வலுப்பெற்றுக் காணப்பட்டதுடன் தாக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. சில தசாப்தங்களுக்கு முன்னர், குறிப்பிடத்தக்க வேலை நிறுத்தங்களும் பெரிதும் உணரப்பட்ட தேவைகளும் பிரச்சினைகளும் தொடர்பான தொழிலாள வர்க்கச் செயற்பாடுகளும் இடம்பெற்றிருந்தன. இதிலிருந்து வளர்ந்து, இலங்கையில் தொழிற்சங்க இயக்கம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதும், பலம் பொருந்தியதுமான இயக்கமாகியது. அத்துடன், வேறும் பல நாடுகளைப் போன்று, உலகப் போக்குகளின் தாக்கத்தைப் பெற்றது. சோவியத் ஒன்றியத்தில் இடம்பெற்ற அக்டோபர் புரட்சி (1916), எதிர்காலத்திற்கான ஓர் ஒளியாகத் திகழ்ந்தது. மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் என்போரும் பின்னர், மாஓ சே துங்கும் வரலாற்றில் தமது பதிவை விட்டுச் சென்றுள்ளனர். இத்துடன் சீன எழுச்சியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். லங்கா சமசமாஜ கட்சி (எல்.எல்.எஸ்.பி), இலங்கை கொம்யூனிஸக் கட்சி (சி.பி.எஸ்எட்) என்பனவும், ஏனைய இடதுசாரிக் கட்சிகளும் தாபிக்கப்பட்டு, இலங்கையின் அரசியல் அரங்கில் முக்கிய இடத்தைப் பெற்றன. **முற்போக்கானது அல்லது தீவிரமானது என்று சொல்லக்கூடிய இவர்களது கொள்கைகள் சமூக அபிவிருத்தியிலும் (மக்களின் கல்வி, சுகாதாரம், பொருளாதார மேம்பாட்டுத் துறைகள்) யாப்புச் சீர்திருத்தத்திலும் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தின.** இலங்கையின் அரசியல் அரங்கில், பிலிப் குணவர்த்தன, கலாநிதி எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹ, கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.

டி சில்வா, லெஸ்லி குணவர்தன, விவியன் குணவர்தன, பீட்டர் கெனமன், பாலா தம்பு, எட்மன்ட் சமரக்கொடி, எஸ்.சண்முகதாசன் என்போரும், ஏனையோரும் பிரபல்யம் பெற்றுத் திகழ்கின்றனர். இடதுசாரி இயக்கத்தின் ஆரம்ப காலத்தின் இரண்டு பிரமுகர்களான விக்டர் கொரியாவையும், இலங்கைத் தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த ஏ.ஈ.குணசிங்ஹவையும் இங்கு குறிப்பிட வேண்டும். எனினும், இடதுசாரிகள் ஒரு போதும் தமதென ஓர் அரசாங்கத்தை அமைத்ததில்லை. சில விரகுசார் தவறுகள், அல்லது வேறு பலவீனங்கள் (இவற்றை இங்கு ஆராய வேண்டிய அவசியமில்லை) இத்தோல்விக்குக் காரணமாக அமைந்திருக்கலாம். இத்தோல்வி, மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி), தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கமும் எழுச்சி பெறுவதற்குக் காரணமாக அமைந்ததென்பதில் சந்தேகமில்லை. உள்ளூர் அரங்கிலும், சர்வதேச அரங்கிலும், நவீன குடியேற்றவாதத்திலிருந்தும், திறந்த சந்தைச் சமூகத்திலிருந்தும் எழுந்த சில பொருளாதார, அரசியல் போக்குகளின் அளப்பரிய ஆதிக்கமும் சந்தேகத்திற்கிடமின்றி, இதற்குப் பிரதான காரணங்களாக அமைந்தன. **இருந்தபோதிலும், இடதுசாரி இயக்கத்தின் சாதகமான இயல்புகள், இலங்கையில், நீதியும் சமாதானமும் கமழும் ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கு உதவும் வகையில் எதிர்காலத்திலும் முன்னெடுத்துச் செல்லப்படும் என்று எதிர்பார்க்க முடியும்.**

இடம் போதாத காரணத்தினால் இடதுசாரி இயக்கத்தை உருவாக்கி, எழுப்புவதற்குதவிய, தொழிலாளர் வர்க்கங்களைச் சேர்ந்த தனிப்பட்டவர்கள் பலரினதும் பெயர்களைக் குறிப்பிட முடியாதிருக்கின்றதென்பதை இங்கு கூற வேண்டியுள்ளது. இவர்களது பங்களிப்பு விலைமதிப்பற்ற பெறுமதி மிக்கதாகும். மிக அண்மைக் காலத்தில் இடம்பெற்ற, 1971, 1988 - 1990 கிளர்ச்சிகளின் போது அரசாங்கத்தின் நடவடிக்கைகளினாலும், ஜே.வி.பி.இன் செயல்களினாலும் உயிரிழந்த இடதுசாரியினரை, இடதுசாரி இயக்கத் தியாகிகளெனலாம். இடம் போதாமையினால், இவர்களின் பெயர்களையும் குறிப்பிட முடியாதுள்ளது. நூல் விபரப் பட்டியலைப் பார்த்து விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். முற்போக்கு இயக்கத்திற்கென அவர்கள் விட்டுச் சென்றுள்ள அர்ப்பணிப்பும் தியாக சிந்தையும் மதிப்பிட முடியாத பெறுமதி வாய்ந்தவையாகும். மக்கள் விடுதலை முன்னணியும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தத்தமது தியாகிகள் பட்டியல்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் பற்றிய, நமது நிலைப்பாட்டை நாம் ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருப்பதால், இவ்விடயத்தை நாம் இங்கு ஆராயவில்லை (4 - 11 பக்கங்களைப் பார்க்கவும்).

### சோல்பரி ஆணைக்குழுவும், ஐக்கிய தேசியக் கட்சியும்

1948இல் சோல்பரி சீர்திருத்தங்களின் கீழ், இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது.

டி.எஸ்.சேனாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியை (யு.என்.பி.) தாபித்தார். சகல இனக்குழுக்களையும் இக்கட்சியின் கீழ் ஒன்றிணைக்க வேண்டுமென்று எண்ணப்பட்டது. எனினும், இது நடைபெறவில்லை. இது அந்நியத் தொடர்புடைய மத்தியதர வகுப்பினரின் கட்சியாக அமைந்தது. பெரும்பான்மைச் சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு பிரதான கட்சிகளுள் இது ஒன்றாகும். ஏனைய இனத்தைச் சேர்ந்தவர்களும் இக்கட்சியிலுள்ளனர்.

### தமிழரசுக் கட்சி (சமஷ்டி கட்சி)

1948இல் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தினால் தழிழரசுக் கட்சி தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில், தமிழர்களுக்கிடையே கூட, இக்கட்சி முழுமையான அங்கீகாரத்தைப் பெறவில்லை. தொடர்ந்து

வந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சியைச் சார்ந்த எஸ்.நடேசன், செல்வநாயகத்தைப் பெருந்தோல்விக்குட்படுத்தினார். எனினும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஏற்பட்ட தொடர்ச்சியான தோல்வி காரணமாக, இறுதியில், பெரும்பாலான தமிழர் தமிழரசுக் கட்சியை நாடினர். சமஷ்டி முறை (1.6.1960) பற்றிக் குறிப்பிடத்தக்கதொரு கூற்றைச் செல்வநாயகம் வெளியிட்டார் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும். அதிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட இரண்டு பகுதிகள் பின்வருமாறு:

> **"சமஷ்டி ஆட்சியின் கீழ், ஐக்கிய இலங்கை அரசொன்றையே, தமிழரசுக் கட்சி எதிர்பார்க்கின்றது. எனவே, சிங்களம் பேசும் மக்களிடையேயும் தமிழ் பேசும் மக்களிடையேயும் முழுமையான ஒற்றுமை, சக வாழ்வு, ஐக்கியம் என்பவற்றையே எதிர்பார்க்கின்றது."**

> "தமிழரின் பாரம்பரியமான தாயகத்தின் நியாயமானதொரு பகுதியைத் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதையே தமிழரசுக் கட்சி கூறுகின்றது. இதிற் கூட இப்பிரதேசங்களுக்கு முக்கியமான கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, நில அபிவிருத்தி, நீர்ப்பாசனம் போன்றவற்றின் தேவைகளுக்காக மட்டுமே."

**இதுவே தமிழரசுக் கட்சியின் திட்டம். இதன் தொலை நோக்கு ஐக்கிய இலங்கையே. இது, ஆட்சி சார்ந்த உயர் தரமான கருத்தாகும். எனினும், சிங்களத் தலைமைத்துவத்திற் காணப்பட்ட இனவாதக் கூறுகளும் தேசிய அச்சூலகின் சில பலம் பொருந்திய பகுதிகளும் தமது உரிமை நோக்கங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக எண்ணி, பிளவையும் பிரிவினையையும் கோரும் கட்சியென, பிடிவாதமாகத் தொடர்ந்து இக்கட்சிக்குப் பெயர் சூட்டி வந்தன. எனவே, சமாதானத்தை நோக்கியதான எத்தகைய முன்னேற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லையென்பதுடன் 'சமஷ்டி' என்ற சொல்லைப் பல சிங்களவர்கள் ஒரு தீய சொல் என்பது போல நோக்கலாயினர்.** எனினும், வெற்றிகரமான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்குகந்த விதத்தில் நிலைமைகள் சீரடைந்த பின்னர், என்றோ எதிர்காலத்தில் ஓர் உடன்பாட்டை எய்துவதற்கான நம்பிக்கை ஏற்படும் என்பதைத் தமிழரசுக் கட்சியின் நியாயமான அணுகுமுறை காட்டி நிற்கின்றது என்று கூறலாம். பின்னர், உரத்த போர் ஆவேசம் கொண்ட ஜே.ஆர்.ஜெயவர்தனவும் அவரது ஆதரவாளர்களும் தமிழரசுக் கட்சியின் இளைஞர்கள் ஏற்படுத்திய நெருக்குதலின் பேரில், 1976ஆம் ஆண்டு ஈழம் பற்றிய பிரேரணையை மேற்கொள்ளும்படி தமிழரசுக் கட்சியைத் தள்ளியது. இக்கட்சியைச் சேர்ந்த சிலர், இதை இன்றும் கூட மிகப் பாரியதொரு தவறாகக் கருதுகின்றனர்.

## ஐம்பது - ஐம்பது கோரிக்கை

தமிழரசுக் கட்சியின் நியாயமான அணுகுமுறைக்கு எதிர்மாறாக, ஜி.ஜி.பொன்னம்பலத்தினதும் அவரது தமிழ்க் காங்கிரஸினதும் ஐம்பது ஐம்பது கோரிக்கையை ஓரளவு தீவிரமானதென வர்ணிக்கலாம். ஜி.ஜி.பொன்னம்பலம், சோல்பரி ஆணைக்குழுவின் முன்னிலையில், சட்டப் பேரவையில் 50 சதவீதமான ஆசனங்கள் சிங்கள மக்களுக்கும் எஞ்சிய 50 சதவீதமான ஆசனங்கள் சிறுபான்மையினருக்கும் ஒதுக்கப்பட வேண்டும் என்ற தன் கோரிக்கைகயைச் சமர்ப்பித்தார். சோல்பரி ஆணைக் குழுவினர் இக்கோரிக்கைக்கிணங்கவில்லை. எனவே, இது வழங்கப்படாதது ஒரு நல்ல விடயமே என்று கூறலாம். ஆனால், சிங்களப் பெரும்பான்மைத் தலைமைத்துவம், தனது பெரும்பான்மைப் பலத்தை, சிறுபான்மையினருக்கெதிராக வேறுபாடு காட்டுவதற்கும் அவர்களை நசுக்குவதற்குமாகத் துஷ்பிரயோகஞ் செய்யும் என்ற தமிழ்க் காங்கிரஸின் பயம் நியாயமானது தான் என்பதை, இதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள் காட்டின.

**ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி**

பிரதமர் பதவிக்குத் தன்னைக் கவனத்திற்கெடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பது தெளிவாகியதும் 1958இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஐ.தே.கட்சியிலிருந்து விலகி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை (எஸ்.எல்.எ.ஃ.ப்.பி.) நிறுவினார். அந்நியத் தொடர்புடைய மத்திய வகுப்புக் கட்சிக்கெதிராக, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எழுச்சி பெறும் தேசிய நடுத்தர வகுப்பின் காட்சியாகியது. ஆனால், இக்கட்சிகள் மாறி மாறி அதிகாரத்திற்கு வந்த போது, இவ்வேறுபாடு குறையலாயிற்று. இவையிரண்டும் இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் உயர்ந்தோர் குழாத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைந்தன. எனினும், பெருந்தொகையான மக்களின் ஆதரவையும் இவை பெறத் தொடங்கின.

**முஸ்லிம்கள்**

மாறி மாறி ஆட்சி அதிகாரத்தைப் பெற்ற இரண்டு பிரதான கட்சிகளிடமிருந்தும், அரசியல் மட்டத்தில், தாம் பெறக்கூடியவற்றைப் பெற்றதுடன், பெரும்பாலும் முஸ்லிம்கள் திருப்தியடைந்தனர்; அல்லது திருப்தியடைய வேண்டியிருந்தது. குறிப்பிடத்தக்களவு வர்த்தகச் செல்வாக்கு அவர்களிடமிருந்தது. இதன் பயனாக, பேரம் பேசும் வலிமை அவர்களிடம் குறிப்பிடத்தக்க அளவில் காணப்பட்டது. தாம் அரசியல்ரீதியாகத் தம்மை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைத் தற்பொழுது மேன்மேலும் உணர்ந்து வருகின்றனர். தற்பொழுது மூன்று முஸ்லிம் கட்சிகளிருக்கின்றன. இவை, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் கட்சி, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி என்பவையாகும்.

இனி இப்பொழுது நாம் குறிப்பிடப்போவது, இப்பகுதியில் ஆராயப்படும் காலத்திற்கப்பால் செல்கின்றதெனினும் (முற்பட்ட யாப்புச் சீர்திருத்தங்கள்), சரியாகச் சொல்லப்போனால், இப்பகுதியுடன் தொடர்புடையதல்லவெனினும், நாம் முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து கொண்டிருப்பதால், **நம்ப முடியாதளவு அனர்த்தத்தையும், மிகப் பாரதூரமான அளவில் நம் நாட்டு முஸ்லிம் மக்களுக்குச் சேதத்தையும் ஏற்படுத்திய பிரளயம் போன்றதொரு சம்பவத்தை இங்கு குறிப்பிட வேண்டுமென்று நமக்குத் தோன்றுகிறது. இது பற்றிப் பொதுவாக இலங்கையர்களுக்கு சற்றுத் தெரியுமெனலாம்; அல்லது முற்றாகவே தெரியாதெனலாம்; அல்லது போதிய அளவு அக்கறைகொள்ளவில்லை எனலாம்.** 1990ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாத இறுதியில், பருவப் பெயர்ச்சி மழை, அதன் உத்வேகத்துடன் அண்மித்துக் கொண்டிருந்த போது, வடக்கிலிருந்து சற்றேறக்குறைய 75,000 முஸ்லிம் மக்கள், அதாவது, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்து தமது உறைவிடங்களை விட்டு, தமது பணம், ஆபரணங்கள், வீட்டுப் பொருட்கள் என்பவற்றை விட்டுத் தென்புலம் நோக்கிச் செல்ல வேண்டுமென தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் கட்டளையிட்டது. தற்பொழுது இவர்கள் முக்கியமாக, புத்தளம் மாவட்டத்திலும் வேறு சில பிரதேசங்களிலும் ஓலைக் குடிசைகளில் அகதிகளாக வாழ்கிறார்கள்.

அகதி நிவாரணம், மீள் குடியேற்றம், புனர் வாழ்வு என்பன தொடர்பாக அரசாங்கத்தினாலும், உள் நாட்டு, வெளி நாட்டு அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களினாலும் கால தாமதமாகச் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை, இப்பிரச்சினைக்கு எவ்வகையிலும் தீர்வாக அமையவில்லை. இவற்றை ஒரு தற்காலிகமான நடவடிக்கையாகவே அகதிகள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அவரவர்கள் வீடுகளுக்குத் திரும்புவதே அவர்களுடைய அடிப்படைத் தேவையாகவுள்ளது.

“நாம் வீட்டிற்குச் செல்ல வேண்டும்” என்பதே அவர்களுடைய ஓலமாகும். அரசாங்கமோ, எந்தவொரு சர்வதேச நிவாரண முகவரகமோ இவ்வடிப்படை உரிமையைக் கவனத்திற்குக் கொள்ளவுமில்லை; இவர்களுடைய இவ்வுரிமை இவர்களிடமிருந்து எவ்வாறு அபகரிக்கப்பட்டதென்பது பற்றிய பூர்வாங்க விசாரணையைச் செய்வதற்கோ, இவ்வுரிமையை மீண்டும் வழங்குவதற்குதவும் வழிமுறைகளை விதந்துரைப்பதற்கோ எவ்விதமான விசாரணை மேற்கொள்ளப்படவுமில்லை; ஆணைக்குழு நிறுவப்படவுமில்லை. பொதுவாக இலங்கை மக்கள் இது பற்றி அறியாதவர்களாக இருக்கிறார்கள்; இது பற்றிக் கவலை கொள்ளாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

முஸ்லிம் மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பும் உரிமையுடையவர்கள் என்பது பற்றி எந்த வித சந்தேகமும் இருக்க முடியாது. **இவர்களுடைய பிரச்சினைக்கான தீர்வு, தேசிய இன்பபிரச்சினையின் முழுமையான தீர்வின் ஒரு பகுதியாக இருத்தல் வேண்டும்.** ஏனைய பிரதான இனப்பிரச்சனைகளைப் போன்று, இது தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாகுமென்று கூறிமுடியாது. இலங்கை அரசாங்கமும் சகல கட்சிகளும் மக்களும் இதற்கான பொறுப்பைப் பகிர்ந்து கொண்டு இதற்கான தீர்வு பற்றிய பணியையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

## சமாதானத்திற்கான வளங்கள்

ஜூலை மாதம் 3ஆம், 4ஆம் திகதிகளில் புத்தளத்தில் இடம்பெற்ற, இலங்கை ஒத்துழைப்பு மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், ஆண்டு வைபவம், பொது மக்களைக் கொண்ட சமாதான யாத்திரை என்பவற்றின் போது, இவர்களுடைய பிரச்சினை சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டதுடன், முஸ்லிம் அகதிகளைப் பற்றிய விசேட சுலோகங்களும் இடம்பெற்றன. புத்தளத்தில் இருக்கும் அகதி முகாங்களுக்கு நாம் விஜயங்களை மேற்கொண்ட போது, நாம் கற்ற முக்கியமானதொரு பாடத்தை இங்கு குறிப்பட விரும்புகிறோம். **தாங்கொணாத் துயரத்தை அனுபவிக்கும் இம்மக்கள் தொடர்பாக சமூகத்திற்கு ஒரு கடமை இருப்பதுடன், சமூகம் கொடுப்பதுடன் நின்றுவிடாது பெற்றுக் கொள்ளவும் வேண்டும். இன மோதலின் விளைவாக இன்னலுக்காளாகிய போதும், தளர்வுறாத மன வலிமையுடன் காணப்படும் பலரிடமிருந்து சமூகம் கற்றுக் கொள்ள வேண்டும். இத்துயரங்களிலிருந்து கட்டாயமாகத் தோன்ற வேண்டிய சமாதானத்தை உருவாக்குவதற்கு இம்மக்கள் மாபெரும் வளமாக இருப்பார்கள்.** நுரைச்சோலை முகாமில், வட முஸ்லிம்களின் உரிமைகள் அமையத்தின் தலைவரின் தாயாரை நாம் சந்தித்த கதையை இங்கு கூற விரும்புகிறோம். இவர் 90 வயதையெட்டிய ஒரு முதியவர். ஐந்து அடி உயரமான, வேயப்பட்ட குடிசையிலிருந்து வெளியே வந்த இவர், ஒரு பாயில் அமர்ந்தார். இலங்கை உலக ஒத்துழைப்பு மன்றத்தின் நமது சிறு குழுவினரும் (ஒரு புத்த பிக்கு, ஒரு கிறிஸ்தவ குரு, ஒரு பெண்மணி உட்பட மூன்று குடிமக்கள் இதில் அடங்கியிருந்தனர்) பாயில் அமர்ந்தோம். தனது மகனுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சகல வசதிகளுடனும் வாழ்வதற்கு அழைக்கப்பட்ட போதிலும், அவர் இவ்வழைப்பை ஏற்றுக் கொள்ளாது, வடக்கில் தன் வீட்டிற்குப் போகும் வரை சக அகதிகளுடன் வாழ்வதென்றும் முடியாவிட்டால் அங்கேயே இறப்பதென்றும் தீர்மானித்தார். நாம் அவரைச் சந்தித்த சில மாதங்களின் பின் அகதிகள் மத்தியில் அவர் இறந்தார். இத்தகையதொரு மனத்திடம், சிறந்ததொரு பொக்கிஷமாகும்; சமாதானத்திற்கானதொரு மாபெரும் வளமுமாகும். நாம் சந்தித்துப் பேசிய அகதிகள் அத்தனை பேரும், தமது தலைவரின் கூற்றை அங்கீகரித்தார்கள். “நாம் திரும்பிப் போய், வடக்கில், தமிழ் மக்களுடனும் சிங்கள மக்களுடனும் சமாதானமாக வாழத் தயாராக இருக்கிறோம். நம்மை இடம் பெயரச் செய்தமை பற்றிய மனத்தாங்கலை நாம் மறந்து விட

முடியும். நமது கரிசனையெல்லாம் எதிர்காலத்தைப் பற்றியதே. எனவே, பல நூற்றாண்டுகளாகச சமாதானமாக வாழ்ந்தது போல, நம் இல்லங்களுக்குத் திரும்பி ஒன்று சேர்ந்து வாழ்வோம்". உண்மையில், '**அகதிகள**' என்று குறிப்பிடப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. இது அவர்களுடைய சுய கௌரவத்திற்கும் அவர்களுடைய மரியாதைக்கும் அமைவாக இல்லை; தாம் **மக்கள்** என்றே அவர்கள் தம்மைக் கருதுகின்றனர். வட **முஸ்லிம்களின உரிமைகள் அமையம்** என்பதே இவர்களின் அமையத்தின் பெயராகும்.

**உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக் குழு, சிங்கள, தமிழ் மக்களின் இது போன்ற பிரச்சினைகளுக்கு ஆதரவு வழங்குவது போல, முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கும் தொடர்ந்தும் ஆதரவு வழங்கும்.** சமாதானத்திற்கான ஒற்றுமையான ஒரு சக்தியை உருவாக்கும் இத்தகைய பணிகளில் ஈடுபட்டுள்ள ஏனைய அமையங்களுடனும் தனிப்பட்டவர்களுடனும் நாம் தொடர்ந்து பணியாற்றுவோம்.

**போரின் காரணமாக மேலே குறிப்பிட்டவாறு பெருந்துயரங்களுக்காளாகி, புதிய நுண்ணிய விசாரணைகளையும் தூரநோக்குகளையும் சமாதானத்திற்கான பெரு வளமாகக் கூடிய மனப்பான்மையையும் கொண்ட முஸ்லிம்களை மட்டுமன்றி, தமிழர்களையும் சிங்களவர்களையும் சந்தித்திருக்கிறோம் என்பதை நாம் இங்கு குறிப்பிட வேண்டும்**. மோதல்களின் போது, சகலதையும் (உடைமைகளை மட்டுமன்றிச் சில சமயங்களில் தமது அன்புக்குரியவர்களையும்) இழந்த, தமிழர்களை நாம் சந்தித்துப் பேசியுள்ளோம். தம்மைத் தாமே விமர்சனரீதியாகப் பார்ப்பதற்குத் தாம் கற்றுக்கொண்டுள்ளதாகவும் தனிப்பட்டவர்கள் என்ற விதத்திலும் ஒரு சமுதாயம் (இங்கு உயர்ந்தோர் குழாத்தையே குறிப்பிடுகின்றோம்) என்ற விதத்திலும் தாம் தமது அதிகாரங்களையும் சலுகைகளையும் பல சந்தர்ப்பங்களில் தமது சுயநல நோக்கங்களுக்காகப் துஷ்பிரயோகஞ் செய்திருப்பதையும், மற்றவர்களைப் பாரபட்சமாக நடத்தியுள்ளமையையும் தாம் உணர்ந்துள்ளதாகவும் இவை, தமக்கெதிரான உணர்ச்சிகளைத் தூண்டியுள்ளதைத் தாம் விளங்கிக் கொண்டுள்ளதாகவும் இவர்கள் நம்மிடம் தெரிவித்துள்ளார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களினால் தமது அவயங்களை இழந்த, அல்லது தம் அன்புக்குரியவர்களை இழந்த சிங்கள மக்களை நாம் சந்தித்திருக்கிறோம். ஆனால், வெறுப்போ, மனக்கசப்போ இன்றித் தமது அனுபவங்களை நியாயமான விதத்தில் ஆராய்ந்து பேச இவர்கள் கற்றிருக்கிறார்கள். பொலன்னறுவை மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமங்களில் ஒன்றாகிய சுசிரிகமத்திலுள்ள ஒரு வீட்டில் 30 அல்லது 40 பேரைக் கொண்ட ஒரு கூட்டத்தில், அன்று மாலை நடந்த ஒரு மறக்க முடியாத கலந்துரையாடல் ஞாபகத்திற்கு வருகின்றது. 1995 ஒக்டோபர் மாதம் 21ஆந் திகதி, பக்கத்துக் கிராமமாகிய போஅத்தவைத் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கியதனால், 27 சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர். வெளியிலிருந்து வந்த சிங்கள மக்கள் குழுவொன்று நடத்திய பதில் தாக்குதலினால் 9 தமிழ் மக்கள் இறந்தனர். இவ்விடயம் பற்றியே கலந்துரையாடினோம். இடம்பெயர்ந்த சிங்கள, தமிழ் மக்களுக்கு உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக் குழு உலருணவும், அவசர உதவிப் பொருட்களும் எடுத்துச் சென்றது. மாலையில், கரிசனை மிக்க பல அமையங்களின் பிரதிநிதிகள் விஷயத்தைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காகக் கிராம மக்கள் சிலரை அங்கத்தினர் சந்தித்தனர். 30, 40 பேர் வருகை தந்திருந்தனர். ஏறத்தாழ 35 வயது மதிக்கக்கூடிய ஒரு விவசாயி சிங்களத்தில் நடந்த கலந்துரையாடலில் மறக்க முடியாத ஒரு கருத்தை முன் வைத்தார். "ஆம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்களின் செயல்கள் கண்டனத்திற்குரியவை என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை. இருந்த போதிலும் நமது சொந்த மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த இளைஞர்களின் (பொலன்னறுவை மாவட்டத்தில் இவர்கள் பெருந்தொகையில காணப்பட்டனர்) செய்கைகளும் கண்டனத்திற்குரியவையே. இவ்விரு

சாராரும் மனக்குறைகளையும் நிறைவேற்றப்படாத எதிர்பார்ப்புக்களையும் கொண்டிருந்தனர். ஏனெனில், தீர்க்கப்படக்கூடிய பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. சுதந்திரம் பெற்ற நாள் முதல், ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் விவசாயியைக் கொல்லாமல் கொல்கின்றது." இது, விவசாயியின் நிலை தொடர்பாகக் கூறப்பட்ட போதிலும், இது இனப் பிரச்சினையையும் குறித்து நிற்பதாகவே கொள்ள வேண்டும். எனவே, அடிமட்டத்தில், சமாதானத்திற்கான ஆழ்ந்த வளங்கள் உள்ளன. அவர்கள் கொண்டுள்ள விளக்கமும், மனப்பாங்குகளும் என்றோவொரு நாள் சமாதானச் செயன்முறையில் தாக்கத்தை ஏற்படுத்தும். இத்தகையோர் கணக்கற்றவர்கள் என்றே துணிந்து கூறலாம். இவர்களே உண்மையில் கணிக்கப்பட வேண்டியவர்கள். இவர்கள், இறுதியில் சில ஊடகங்கள் பெரிதுபடுத்திக்காட்டும் உயர்ந்தோர் குழாத்தைச் சேர்ந்த வீணர்களான, உரத்த கடுங்குரல் கொண்ட, ஒடுங்கிய பார்வை கொண்ட வெறியர்களை வென்று நிற்பார்களென நாம் நம்புகின்றோம்.
இத்தகையதொரு உள் நோக்கை 'உயர்ந்தோர் குழாத்தின் அறிவீனம்', அல்லது 'வெல்ல முடியாத அறிவீன'த்துடன் நாம் ஒப்பிடலாம். வான் படைத் துணை மார்ஷல் ஹரி குணதிலக்க, ஒரு முறை, உயர்ந்த பதவியிலிருந்த ஓர் அரசாங்க உத்தியோகத்தரைப் பற்றிய ஒரு கதை சொன்னார். 1996 ஜூலை 9ஆந் திகதி இடம்பெற்ற முல்லைத்தீவு இராணுவ முகாமின் படு வீழ்ச்சியின் போது, சுமார் ஆயிரம் சிங்களத் துருப்பினர், ஒரே இரவில், தமிழீழ விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்ட நிகழ்ச்சியின் பின்னர், இவ்வனர்த்தத்தின் பாரிய தன்மையை நினைத்து, குணதிலக்க புலம்பிக் கொண்டிருந்த தருணத்தில் இவ்வதிகாரி, துடுக்காக, "நீங்கள் எதைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள், ஹரி? எங்கள் பக்கத்தில் தொகைப் பலம் இருக்கின்றது. இறுதியில் நாங்கள் வெற்றி பெறுவோம்." என்றார். வான் படையிலிருந்த தன் ஒரு மைந்தனை இழந்தவர் ஹரி குணதிலக்க. இவருடைய மற்றொரு மகன் இன்னமும் சேவையில் இருக்கிறார். போர் பற்றிய பகுத்தறிவுரீதியான கருத்துக்களை மக்கள் மனத்தில் பதியச் செய்வதற்காக இவர், நாளும் முயன்றுகொண்டிருந்தார். தனக்கு அபாயம் ஏற்படக்கூடுமென்ற ஆபத்து இருப்பினும் நாட்டின் அதி உயர்ந்தவருக்கும் கூட, தான் கூற வேண்டியதை நேரடியாகக் கூறும் தைரியம் இவருக்குண்டு. இதனால், இங்கும், வெளி நாடுகளிலுமுள்ள உயர்ந்தோர் குழாம் வட்டங்கள் சில, தவறாக வழிநடத்தப்பட்ட ஒரு கிறுக்கர் என்று இவரைக் கருதின. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பிரசுரிக்கப்படும் 'சண்டே எக்ஸ்பிரஸ்' என்ற தின ஆங்கில வார இதழில் இவருடைய கட்டுரைகள் இடம்பெறுகின்றன. ஆனால், இவை மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டுப் பரவலாக விநியோகிக்கப்பட வேண்டிய திறன் கொண்டவையாகும். உயர்ந்தோர் குழாத்தைச் சேர்ந்த சிலருக்கு அறிவூட்டும் செயன்முறையின் ஒரு பகுதியாக இது அமையலாம். எனினும், இக்கருமம் சுலபமானதொன்றல்ல!

முஸ்லிம்களின் பிரச்சினைகள், திருப்திகரமான விதத்தில் அணுகப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும். கிழக்கில் வாழும் முஸ்லிம்களினதும், தெற்கில் வாழும் முஸ்லிம்களினதும் பிரச்சினைகள், வடக்கில் வாழும் முஸ்லிம்களினது பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டவையாகும். எனவே, இவை மிகச் சிக்கார்ந்தவையாகும். பலம் பொருந்திய வர்த்தகச் செல்வாக்குடன் கூடிய சிங்களவர்களும் தமிழர்களும் இருப்பது போலவே வர்த்தகச் செல்வாக்கு நிரம்பிய முஸ்லிம்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கிடையே பெரும் போட்டி நிலவுகின்றது. இது தொடர்பான விடயங்களை, எல்லோருக்கும் நியாயம் வழங்கும் விதத்தில் கையாள்வது இலகுவான விடயமல்ல. 'கொடுத்தல், வாங்குதல்' என்ற அடிப்படையில், பரஸ்பர நம்பிக்கையை உருவாக்க முடியுமானால், இது தொடர்பாகச் சில முன்னேற்றங்களை ஏற்படுத்துவது அசாத்தியமல்ல. மூன்று சமுதாயங்களிலும் வறிய மக்கள் உள்ளனர். இம்மூன்று சமுதாயங்களிலும் இம்மக்களே பெரும்பான்மையினராவர். இம்மக்களே, தம்மை முன்னேற்றிக் கொள்வதற்காக அரசியல் அதிகாரத்தைப் பெற வேண்டும்.

## பெருந்தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள்

பெருந்தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள், அதாவது, தேயிலை கொய்வோர், பெருந்தோட்டங்களில் கடமையாற்றும் ஏனைய தொழிலாளர்கள், சிற்றூழியர் என்போர், இலங்கை மக்களின் வேறெந்தவொரு பிரிவினரைப் போன்று, சமமான முக்கியத்துவம் பெற்றவர்களாவர். உழைப்பைப் பொறுத்தளவில், இம்மக்கட் பிரிவினர் எதிர்நோக்கும் அல்லல்கள், இவர்கள் அடக்கியொடுக்கப்படும் நிலை என்பன போன்றவற்றை எடுத்து நோக்கினால், தெற்கிலும், வடக்கிலும், கிழக்கிலும் உள்ள கிராமங்களில் விவசாயத்திலீடுபட்டுள்ள நிலமற்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுடனும் பட்டணங்களிலுள்ள சேரி வாழ் மக்களுடனும் இவர்களை ஒப்பிடலாம். இவர்களுள் யார் அனுபவிக்கும் இன்னல்கள் மிகக் தீவிரமாகவுள்ளன என்பதைத் தீர்மானித்தல் கடினமாகும். எப்படியிருப்பினும், இத்தகைய இன்னல்களினால், சமூக நிலைமைகளிலும் மனித வாழ்வுசார் நிலைமைகளிலும் ஏற்பட்ட நாசங்களையும் பொருட்படுத்தாமல், அவற்றைத் தாங்கிக் கொண்டு செயலாற்றும் உள வலிமை வளர்ச்சியையும், எதிர்த்து நின்று சமாளிக்கும் அடிப்படையான உறுதிப்பாட்டையும் மனிதாபிமான அடிப்படையிலமைந்ததுமான ஓர் இலங்கையை இலங்கையர் அனைவருக்குமாகப் புனரமைப்பதற்கும் உருவாக்குவதற்கும் இறைவனின் அருளினால் வழங்கப்பட்ட விலை மதிப்பற்ற வளங்களாகும் என்று கொள்ள வேண்டும்.

தமிழ் பெருந்தோட்டத் தொழிலாளி, கடுமையான சுரண்டலுக்காளாக்கப்பட்ட போதிலும் தேயிலை உற்பத்தியினூடாக, இடைவிடாமல் நீண்ட காலமாக, பெறுமதி மிக்க அந்நியச் செலாவணியை உழைத்துத் தருவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு உறுதுணையாகவும் அது சரிந்து விழுவதைத் தடுப்பதற்குக் காரணமாகவும் இருந்து வருவதை நாம் ஒரு போதும் மறக்கலாகாது. இது ஒரு பாரிய சாதனையாகும். அபிவிருத்தியை எய்துவதற்குத் தேயிலைப் பயிர்ச் செய்கையை விட, விரும்பத்தக்க வேறு வழிகள் இருந்திருக்கலாமென்று வாதிக்க முடியுமெனினும், இது தொடர்பாக விட்ட பிழைகளுக்குத் தோட்டத் தொழிலாளி எவ்வகையிலும் பொறுப்பாளியல்ல.

இந்திய வம்சாவழியினரைத் தவிர்ந்த ஏனைய தமிழரும் பெருந்தோட்டப் பிரதேசங்களில் வாழ்கிறார்கள். இவ்விரு சாராருக்கிடையே காணப்படும் பொதுவான பலவீனங்கள், குறைந்தபட்சம், சிலரிடமேனும், தமது வேறுபாடுகளை மறந்து, தமக்கெனவுள்ள பொதுவான பண்பாட்டுப் பாரம்பரியங்கள் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்தியுள்ளது.

இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட சிறப்புமிக்கதொரு சமயப் பாரம்பரியம் தமிழ் மக்களிடம் உண்டு. வரலாற்றுரீதியாகவும் சமூகரீதியாகவும் அவரவர்களது ஆர்வங்கள், குறிக்கோள்கள் என்பன தொடர்பாகவும் பெருந்தோட்டத் தமிழர்களுக்கும் ஏனைய தமிழர்களுக்குமிடையில் கணிசமான வேறுபாடுகள் இருந்தபோதிலும் தமது மொத்த அனுபவங்களினூடாகவும் தாம் அனுபவிக்கும் இன்னல்களுடாகவும் தமது பொருளாதார, சமூக முன்னேற்றம் என்பவற்றினூடாகவும் இப்பாரம்பரியத்தையும், தமிழர் என்ற வகையில் தமது தனித்துவத்தையும் இவர்கள் பேணி வந்துள்ளனர்.

சுதந்திரத்திற்குப் பின்னர், சிறுபான்மையினருக்கெதிராகப் பாகுபாடு காட்டுவதை வெளிப்படுத்தும் முதலாவது பேரடி, பெருந்தோட்ட மக்களின் மீது விழுந்தது. 1948ஆம், 1949ஆம் ஆண்டுகளின் பிரஜா உரிமையும் தேர்தல் திருத்தமும் பற்றிய சட்டங்கள், பெருந்தோட்ட மக்களின் பிரஜா உரிமையையும் வாக்களிக்கும் உரிமையையும் பறித்தன. 700,000 மக்கள் நாடற்றோராயினர். அப்பிரதேசங்களில் வாழும் சிங்கள மக்களின் எதிர்கால வாய்ப்புக்களுக்கு இடர் ஏற்படுத்தக்

கூடியவர்களாக இவர்கள் கருதப்பட்டார்கள். மேலும், இடதுசாரி இயக்கத்திற்கு ஆதரவு வழங்கும் இவர்களுடைய போக்கு, அடிப்படையில் பழமை பேணும் நிலைப்பாட்டைக் கொண்ட ஐ.தே.கட்சிக்கு ஓர் அச்சுறுத்தலாகும் எனப் பிரதம மந்திரி டி.எஸ்.சேனநாயக்க நினைத்தார். இலங்கை அரசியல் அரங்கில், இது சற்றேனும் எதிர்ப்பைத் தூண்டியது என்று சொல்வதற்கில்லை. பழைய பாணிப் பிரமுகர்களின் ஆதிக்கம் இவ்வாறிருந்தது. புனித தோமஸ் பாடசாலையின் பழைய மாணவரான டி.எஸ்.சேனநாயக்க, தனியார் பாடசாலைக்குரித்தான சீரிய பண்புகளையும் நியாயம் பேணும் பண்புகளையும் கொண்டிருப்பார் என்ற சோல்பரி பிரபுவின் நம்பிக்கை தவறானதென்பதும், உண்மையில் டி.எஸ்.சேனநாயக்க, வஞ்சகத் தன்மைகளையே கொண்டிருந்தார் என்பதும் இன்னமும் வெளிச்சத்திற்கு வரவில்லை.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில், 1964ஆம் ஆண்டு இடம்பெற்ற சிரிமா - சாஸ்திரி உடன்படிக்கை, இம்மக்களுட் பெரும்பாலானோரை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்புவதற்கான ஒழுங்குகளைச் செய்தது. சற்றேனும் மனிதாபினமானமற்ற செயலான கட்டாயத் திருப்பி அனுப்புதலும் இதிலடங்கும். மேலும், இலங்கை இந்தியப் பிரதமர்களினால் கைச்சாத்திடப்பட்ட, பெருந்தோட்டத் தமிழர்களைப் பற்றிய இவ்வுடன்படிக்கை தொடர்பான சமரசப் பேச்சுவார்த்தைகளில் பெருந்தோட்டத் தமிழர்களின் பிரதிநிதிகள் எவருமே இடம்பெறவில்லை. ஓர் அடிப்படை உரிமையை முற்றுமுழுதாகப் புறக்கணிப்பதாக இது அமைந்த போதிலும் பொதுமக்களின் ஆழ்ந்த கவனம் இதன் மீது ஈர்க்கப்படவில்லை.

பெருந்தோட்டங்களில் தொழிற்சங்கங்களை நிறுவுவதற்குப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எஸ். தொண்டமானின் தலைமையிலமைந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா), இவற்றுள் மிகப் பலம் பொருந்தியதாக இருந்தது. இது, ஏனைய முயற்சிகளை மழுங்கடித்துவிட்டது. பெருந்தோட்டத் தொழிலாளர்களைச் சுரண்டுவதில் உன்னத இடம் வகிக்கும் நிலச் சுவாந்தார்/வேலை வழங்குவோர் வகுப்பின் பிரதிநிதியான தொண்டமான், அம்மக்களின் ஆதரவாளனும் பாதுகாவலனும் என்ற தோரணையில் நடித்தமை மட்டமான ஹாசியமாகவும் கேலிக்கூத்தாகவும் இருந்ததுடன் உயர்ரக சோக நாடகமுமாகும்! ஆனால், பலனுறுதி வாய்ந்த மாற்றுத் தலைமைத்துவம் எதுவும் காணப்படாதவிடத்து, பெருந்தோட்டச் சமுதாயத்தினருக்காகத் தமது பேரம்பேசும் வல்லமையை இவர் யதார்த்தமான விதத்தில் பயன்படுத்தியமை, பெருந்தோட்டத் தமிழர், நாட்டின் அரசியலில் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் சில நன்மைகளை வென்றெடுக்கக்கூடியதாகவும் இருந்ததென்று சிலர் கூறுவர். எனவே, இவர் பெருந்தோட்டச் சமுதாயத்தினரின், கணிசமான வலுவுடன் கூடிய தலைவரென்றும் பெருந்தோட்ட மக்களின் தேவைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர் என்றும் இன்னமும் பலரால் கணிக்கப்படுகிறார்.

சில நல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பயனுறுதிவாய்ந்த மாற்றுத் தலைமைத்துவம் ஒன்றை, அல்லது சக்தியை உருவாக்கும் முயற்சிகள் இது வரை தோல்வியையே தழுவியுள்ளன. ஏ.அஸீஸின் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் (ஜ.தொ.கா), லங்கா சமசமாஜக் கட்சியின் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம், (இ.தோ.தொ.ச.), சி.பி.எஸ்.எல்., சி.பி.டபிள்யூ.யூ என்பவற்றின் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் (இ.தோ.தொ.ச.), கம்யுனிஸ்ட் கட்சியின் ஒரு பிளவுபட்ட குழுவாகிய செங்கொடி என்பன இவற்றுட் சிலவாகும். அண்மையில் சி.சந்திரசேகரனின் தலைமையில் ஒரு குழு உருவாகியுள்ளது. இக்குழு, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் சேர்ந்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நீண்ட போராட்ட வரலாற்றில், அவர்கள் அனுபவித்த பாரிய சுரண்டல்களுடன் ஒப்பிடுகையில், அவர்கள் வென்றெடுத்துள்ள நன்மைகள்

அற்பமானவையே. ஆனால், பெருந்தோட்டத் தொழிலாளர்களை என்றென்றுமே அடக்கி வைத்திருக்கலாம் என்று நினைத்துப் பார்க்க முடியவில்லை. இலங்கையின் அரசியல் அரங்கில், அவர்கள் தமக்குரிய இடத்தைப் பிடிக்க வேண்டும். இலங்கையிலுள்ள ஏனைய சமுதாயங்கள், இம்முயற்சிக்கு ஆதரவு வழங்குதல் வேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினையின் நியாயமான தீர்வு, பெருந்தோட்டச் சமுதாயத்தின் உரிமைகளையும் கவனத்திற் கொண்டு, அவற்றையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம்/ இலங்கைக் குழுவின் மிகச் சுறுசுறுப்பான சமாதானப் பணி, தாழ் பிரதேச (இறப்பரும் தெங்கும்) பெருந்தோட்டத் தொழிலாளர்களையும் மலை நாட்டு (தேயிலை) பெருந்தோட்டத் தொழிலாளர்களையும் அவற்றின் அயலில் வாழும் சிங்கள, முஸ்லிம் மக்களையும் உள்ளடக்கியதாக அமைந்தது. இவர்கள், சமாதானச் செயற்பாடுகளில் செயலூக்கம் மிக்கவர்களாக இருக்கிறார்கள். ஆனால், இவர்களின் மொத்தச் சனத்தொகையின் ஒரு சிறு பகுதியினரையும் அவர்களுடைய பிரச்சினைகளின் மிகச் சிலவற்றையுமே நாம் தொட்டுள்ளோம். இலங்கையின் அரசியலில், பெருந்தோட்டப் பகுதித் தமிழர்கள் ஒரு பகுதியினராவர்; எந்தவொரு சமாதானப் பேச்சுவார்த்தையிலும், சமாதானத் தீர்விலும் இவர்களுடைய தேவைகளில் உகந்த கவனஞ் செலுத்தப்பட வேண்டும்.

## கிறிஸ்தவர்கள்

இலங்கைச் சனத்தொகையில் கிட்டத்தட்ட 7.5 சதவீதத்தினராகவுள்ள கிறிஸ்தவர்களும் இதே அளவினராகவுள்ள முஸ்லிம்களும் தத்தம் விகிதாசாரங்களுக்கு ஒவ்வாத விதத்தில் இலங்கையில் செல்வாக்குப் பெற்றுள்ளனர். குறிப்பிடத்தக்க அளவு வர்த்தக ஆதிக்கமும், சொத்துக்களும் அவர்கள் வசம் இருத்தலும் வலிதான சர்வதேசத் தொடர்புகளை அவர்கள் கொண்டிருத்தலும் இதற்குக் காரணங்களாகும். இன்றைய நாளேடு கிறிஸ்து நாதரின் பிறப்பை அடியொற்றியதொன்றாகும் (கி.மு./கி.பி). தாம், ஏறத்தாழ கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கைக்கு வர ஆரம்பித்துவிட்டதாக இவர்கள் உரிமை கோருகிறார்கள். அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்டு, இன்று அனுராதபுர அரும்பொருட்காட்சிச்சாலையிலுள்ள கி.பி. 6ஆம் நூற்றாண்டைச் சார்ந்த, பாரசீகப் பாணியில் அமைந்துள்ள சிலுவை, இதற்கான சான்றின் ஒரு பகுதியாக எடுத்துக் காட்டப்படுகின்றது. கிறிஸ்த சமயத்தின் கீழைத்தேய மரபு வழியான மரபுவழுவாத (Orthodox), நெஸ்டாரியஸ் என்பவருக்குரிய (Nestorian) அமைப்புக்கள், ஐரோப்பாவிலிருந்து கிறிஸ்தவர்கள் வருவதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே, சீனா, ஜப்பான் போன்ற தூர ஆசிய நாடுகள் உட்பட, ஆசிய நாடுகள் பலவற்றிலும் நிலைநிறுத்தப்பட்டிருந்தன என்பதைக் காட்டுவதற்கு நன்கு ஆராயப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்ட ஆதாரங்கள் பரந்த அளவில் உண்டு. எனினும், 1505இல் போர்த்துக்கேயரின் வருகையுடன் தான் கிறிஸ்தவர்கள் வந்தார்கள் என்று இன்னமும் பலர் குறிப்பிட்டு வருகிறார்கள். இஸ்லாமிய மதம், 7ஆம் நூற்றாண்டில் அரேபியாவில் தோன்றியது. முஸ்லிம்கள், ஏறத்தாழ 9ஆம் அல்லது 10ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்தார்கள்.

## தகவு நோக்கு

கீழே குறிப்பிடப்படும் உயர் கீழைத்தேய மதங்கள், கி.மு. 6ஆம் நூற்றாண்டில் தோன்றின, அல்லது உன்னத நிலையை எய்தின என்பதைத் தகவு நோக்குக் கருதி, இங்கு குறிப்பிடலாம். அவையாவன: இந்து மதம் (எல்லாவற்றுள்ளும் காலத்தால் முந்தியது; மேலே குறிப்பிடப்பட்ட காலத்திற்கும் முந்தியது), கொன்.்பியூஸிய மதம், டாவோ மதம், பௌத்த மதம், (பாரசீகம்

சார்ந்த) ஸோராஷ்றிய மதம் கிறிஸ்த மதத்தின் முன்னோடியான, (மத்திய கிழக்கு சார்ந்த) யூத மதம்.

இலங்கையில், பிரதான, புராதன மதங்கள் நான்கு உண்டு. இவை யாவும், திடமான, விலைமதிப்பற்ற வரலாற்று மரபையும் பாரம்பரியத்தையும் கொண்டவை. இலங்கையிலுள்ள புகழ் பெற்ற புராதன சமய முக்கியத்துவம் பெற்ற இடங்களை அளவாய்வு செய்யும் ஒருவர், பௌத்த மதமே தலையான இடத்தைப் பெற்றிருந்தது என்பதை அறிவார். எனினும், ஏனைய மதங்கள் யாவும் தத்தமது பங்கைச் செலுத்தியுள்ளன. இவற்றினிடையே கவனத்திற் கொள்ள வேண்டிய அளவு வாதப்பிரதிவாதங்களும் பரிமாற்றங்களும் கூடிக்கலத்தலும் இடம்பெற்றுள்ளன. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், இலங்கையின் சமூக, அரசியல் வாழ்வில், சகல மதங்களையும் சேர்ந்த பிரமுகர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர். முதலில், பெரும்பான்மை பௌத்த மரபிலிருந்து நீண்டதொரு பெயர்ப்பட்டியலைக் குறிப்பிடுகின்றோம். அவர்களுடைய போற்றத்தக்க பங்களிப்பும் சாதனைகளும் யாவரும் அறிந்தவையே: அநகாரிக்க தர்மபால, வலிசிங்ஹ ஹரிஷ்சந்திர, குமாரதுங்க முனிதாஸ, பியதாஸ சிரிசேன, டபிள்யூ.ஏ.சில்வா, ஜி.எச்.பெரேரா, ஜோன் டி சில்வா, டி.பி.ஜயதிலக்க, எச்.ஸ்ரீ நிஸ்ஸங்க, ஹேவாவிதாரண சகோதரர்கள், கலாநிதி டபிள்யூ.ஏ.டி சில்வா, ஆர்த்தர் வி.டயஸ், போல் பீரிஸ், ஏ.ஈ.புல்ஜென்ஸ், பி.டி.எஸ்.குலரத்ன குணபால மலலசேகர, ஈ.டபிள்யூ.அதிகாரம், ஜோர்ஜ் கீட், மார்ட்டின் விக்ரமசிங்ஹ, ஈ.ஆர்.சரத்சந்திர, வணகத்திற்குரிய தேரர்களான எஸ்.மகிந்த, உடகந்தவெல சிரி சரணங்கர, பம்பரண்தே சிரி சீவலி, கொட்டாஞ்சேனை பன்னசிஹ, வலிவிட்டிய சோரத, களுகொண்டயாவே பன்னசேகர, நாரவில தர்மரத்தன, அரசியல் அரங்கில் ஆதிக்கம் செலுத்திய சேனாநாயக்காக்களையும் ஜயவர்தனாக்களையும் பண்டாரநாயக்காக்களையும் போன்றோரையும் இதிற் சேர்த்துக் கொள்ளலாம். இந்து பாரம்பரியத்திற்கு உரித்தானவர்களை உள்ளடக்கிய, புகழ் பெற்ற பெரியோரின் பெயர்ப்பட்டியல் பின்வருமாறு: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர் முத்துக்குமாரசுவாமி, கலாநிதி இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாச்சலம், எம்.ஏ.அருளானந்தன், ஹண்டி பேரின்பநாயகம், எஸ்.நடேசன், சி.டபிள்யூ.தாமோதரம்பிள்ளை, ஜி.ஜி.பொன்னம்பலம், ஏ.அமிர்தலிங்கம், சத்தியவாகீஸ்வர ஐயர், நடேச ஐயர், ஜீ.வி.சுவாமிநாத ஐயர், சுவாமி விபுலாநந்தர், ஜேம்ஸ் டி.ரத்னம், பேராசிரியர் கே.கைலாசபதி, பேராசிரியர் கே.சிவத்தம்பி. தமிழராகிய ஆனந்தகுமரசுவாமி, 'மத்திய கால சிங்கள ஓவியக் கலை' என்ற நூலை எழுதியிருப்பதை இங்கு குறிப்பிடலாம். இவர் சர்வதேசப் புகழ் பெற்ற ஓர் இலங்கையிராவார். இவர் பொஸ்டன் (ஐக்கிய அமெரிக்கா) நுண்கலை அரும்பொருட்சாலையின் மேற்பார்வையாளராகவும் பணியாற்றினார். புகழ் பெற்ற ஆங்கில ஓவியரும், கலை விமர்சகருமான எரிக் கில், மற்றவர்களால் பெருமளவில் மேற்கோளாகக் காட்டப்படும் ஆனந்த குமாரசுவாமி பற்றிய புகழுரையில் சமய ஞானி, தத்துவ ஞானி, அறிஞர் என்போரிடம் இருக்க வேண்டிய பல்வேறுபட்ட இயல்புகளையும் பண்புகளையும் தன்னுட் கொண்டவராக இருந்த, தான் அறிந்த, ஒரேயொரு மனிதர் கலாநிதி ஆனந்த குமாரசுவாமி என்று விரிவாக வர்ணித்துள்ளார்.

இஸ்லாத்தையும் கிறிஸ்தவத்தையும் எடுத்துக்கொண்டால் இச்சமயங்கள் ஏறத்தாழ முற்றுமுழுதாக பிரச்சார செயற்பாடுகளுக்கே தம்மை அர்ப்பணித்துள்ளனவென்றும் ஆழ்ந்த சிந்தனையுடன் கூடிய ஆன்மீகத் தன்மை இல்லையென்றும் பெரும்பாலும் எண்ணப்படுகின்றது. எனினும், உண்மையில், வளமிக்க, பரந்த, ஆழ்ந்த பண்பாடும் ஆன்மீகமும் இம்மதங்களில் உண்டு. வேறெந்த மதத்திற்கும் சளைக்காத, இஸ்லாத்துடன் தொடர்புற்ற இறை நிலை பற்றிய சூ.ஃபி மரபையும், கிறிஸ்தவ மதத்தின் மெய்ஸ்டர் எக்கார்ட், அஸிஸியைச் சேர்ந்த அர்ச். ஃபிரன்ஸிஸ் என்போருடைய ஆழ்ந்த ஆன்மீகத்தையும் க்ளெயவோவைச் சேர்ந்த அர்ச். பேர்னாட்டின் சந்நியாச, ஆன்மீக, தியான மரபுகளையும் பழமையான மரபுச் சட்டம் மீறாத ரஷ்யத் திருச்சபையையும் குறிப்பிட்டாலே போதும்.

மீளாய்வுக்குட்பட்ட காலத்தில், நாட்டின் சமூக, அரசியல் வாழ்விற்குக் கணிசமான பங்களிப்புச் செய்த புகழ் பெற்ற முஸ்லிம்கள் இருந்தார்கள்: சித்தி லெப்பே, வாபிச்சி மரிக்கார், ஏ.எச்.மாகான் மார்க்கார், டி.பி.ஜாயா, சேர் ரஸீக் பரீத், முகமது காஸிம், எம்.முஸ்தா.்.பா, பத்தியுத்தின் முகமது (இவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் நெருங்கிய சகாவும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முதலாவது செயலாளருமாவார்.)

நாட்டின் வாழ்விற்குப் பங்களிப்புச் செய்துள்ள புகழ்பெற்ற பெரியார்களுள் பின்வருபவர்களும் அடங்குவர்: ஆரம்பத் தொழிலாளர் போராட்டங்களுள் ஒன்றிற்கு (சலவை செய்வோரின் வேலை நிறுத்தம்) உதவி வழங்கியவரான ஜீ.பீ.ஏகநாயக்க, தேசிய வாழ்வில் ஆழமாக ஈடுபட்டிருந்த லெஸ்வோலா பின்டோ, மாபெரும் ஜனோபகாரியான சி.எச்.டி சொய்ஸா, நாட்டின் நன்மை கருதி நீர் மூழ்கிக் கப்பல்கள் நிறைந்திருந்த சமுத்திரத்தையும் பொருட்படுத்தாது மிக முக்கியமான இரகசிய ஆவணமொன்றைச் சப்பாத்தின் தோலுக்கிடையில் வைத்து எடுத்துச் சென்றவரும் ‘சிங்களக் கொடிகளும் தரங்களும்’ என்ற, ஆழ்ந்த புலமையைக் காட்டும் நூலை எழுதியவருமான ஈ.டபிள்யூ.பெரேரா, கேம்பிரிஜ் பல்கலைக்கழகச் சங்கத்தின் முதலாவது ஆசியத் தலைவரும் சட்டத்துறையிலும் ஒழுக்க நெறித் துறையிலும் ‘இரட்டை முதல் வகுப்புச் சித்தி’ பெற்றவரும் 1925இல் சட்ட சபையின் முதலாவது உப தலைவரும் சபாநாயகருமாக (பிரித்தானிய ஆளுநருக்கு அடுத்த பதவி நிலை) இருந்த ஜேம்ஸ் பீரிஸ், இலங்கையின் பண்பாட்டு மரபுரிமையைப் பெரிதும் நேசித்தவர்களும் அத்துறையில் புலமைபெற்றவர்களுமான அன்றியஸ் நெல், ஆர்.எல்.ஸ்பிட்டில், ஆர்.எச்.புறோஹியர் என்போர், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், பிஷப் சபாபதி குலேந்திரன், சேவக் செல்வரத்னம், கலாநிதி டி.டி.நைல்ஸ், சேவியர் எஸ்.தனிநாயகம் அடிகள், பிஷப் லக்தாஸ டி மெல், லBமண் விக்கிரமசிங்ஹ, லியோ நாணயக்கார, வண.எஸ்.ஜே.டி எஸ்.வீரசிங்ஹ, கலாநிதி பிரயன் டி கிரெட்ஸர் சிரில் ஜான்ஸ், எல்.ஈ.பிளேஸ், கலாநிதி லூஷியன் டி சில்வா, கலாநிதி ஈ.எ.்.ப்.சி.லுடொவைக், லயனல் லெண்ட், ஜோர்ஜ் கீட் என்ற இவர்களுட் பெரும்பாலானோர், சுதேசமயமாக்கம், சமூக மாற்றம், ஆன்மீகப் புத்துணர்வு என்பன சம்பந்தமாகத் தீவிர தரிசன நோக்குக் கொண்ட தலைவர்களாவர்.

இவை முழுமையான பட்டியல்களல்ல. இட வசதி இருந்திருப்பின் மேலும் பல பெயர்களைப் பதிவு செய்யலாம். இவர்களைப் பற்றிப் பதிவு செய்யப்பட்டுள்ள விபரங்களும் தேர்வுக்குட்பட்வையாகும். இவை முழுமையான வரலாறல்ல. விபரங்களுக்குக் குறிப்பாக, இங்கு குறிப்பிடப்பட்டவர்களின் வாழ்க்கை பற்றிய விபரங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட நூற்பட்டியலைப் பார்க்கலாம். **எத்தகைய செழிப்புமிக்க வளங்கள் பல்வேறு மூலங்களிலிருந்தும் பெறப்பட்டு, இலங்கைத் தேசிய இனம் உருவாக்கப்பட்டது என்பதை எடுத்தக் காட்டுவதற்கே பெயர்களும் அவை பற்றிய விபரங்களும் குறிப்பிடப்பட்டன. அது, பழைமையான மதங்கள், இனங்கள், நவீன சித்தாந்தங்கள் அல்லது மெய்யியல் என்பவற்றின் செழுமை மிக்கதும், சிக்கார்ந்ததுமான இணைப்பாகும். அத்துடன், தற்பொழுது, சிதறிப் பிளவுபட்டுக் காணப்படும் இலங்கையை, மேலும் திடமானதோர் அத்திவாரத்தின் மீது, மீண்டும் விருத்தி செய்வதற்கு இத்தகையதோர் இணைப்பும் அவசியமானதாகும்.**

## பெண்கள்

இக்கதையில், பெரும்பாலும் கணிக்கப்படாமல் விடப்படுகின்ற ஒரு மிக முக்கியமான வளம், பெண்களாவர். மேலும், குறிப்பிடத்தக்க பெண்களுள், இங்கு குறிப்பிடப்படுவோரில் கணிசமானவர்கள், நாம் பட்டியற்படுத்திய குறிப்பிடத்தக்க ஆண்கள் பலருள்ளும் மேலாக,

ஒரு குறிப்பிட்ட மதத்தைச சார்ந்தோர் என்றோ, ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தோரென்றோ கருதப்பட முடியாது. இவர்கள், வழமையான பிரிவுகளையும் எல்லைகளையும் மீறி நிற்கிறார்கள். எனவே, நாம், பெண்களுக்கெனத் தனியாக ஒரு பகுதியை ஒதுக்குகின்றோம்.

**பண்டைய காலத்திற் போன்று, நவீன காலத்திலும், இலங்கையை உருவாக்குவதிற் பெண்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர்.** இலங்கைப் பெண்கள் பல்வேறுபட்ட துறைகளில் தனித்துவம் பெற்று விளங்குகின்றனர். மனித நேயமும் உயர்ச்சியுமுள்ள இலங்கைப் பெண்களுட் பலர் உலகின் வேறெந்தப் பகுதியிலும் வாழும் பெண்களுக்கு இணையாகவேயுள்ளனர். தேசிய விடுதலைக்கும் சர்வஜன வாக்குரிமைக்குமான இயக்கத்திலும் போராட்டத்திலும் அவர்கள் பங்குபற்றியுள்ளனர். அவர்கள் பெண்களின் உரிமைகளுக்காகவும் சலுகை குறைந்தோர், உழைக்கும் வகுப்பினர் என்போரின் நிலைமைகளை மேம்படுத்துவதற்காகவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். கல்வியிலும் பொதுவாக இடதுசாரி இயக்கத்திலும் அவர்களுடைய ஈடுபாட்டை விசேஷமாகக் கவனிக்கக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன், அண்மைக் காலங்களில் சமாதானம், மனித உரிமைகள் என்ற பரப்புக்களில் அவர்களுடைய பணி சில சமயங்களில் இறுதி உயிர்த் தியாகத்திலும் முடிந்துள்ளது.

கீழே தரப்பட்டுள்ள பெயர்ப்பட்டியல், மேல் வர்க்கம், நடுத்தர வர்க்கம், பாட்டாளி வர்க்கம் என்போரின் பெயர்களையும் உள்ளடக்குகின்றது. இவர்களுடைய முக்கியத்துவம் தொடர்பான விபரங்களையும் இவர்களுடைய பணிகள், அடைவுகள் என்பன பற்றிய விபரங்களையும் குமாரி ஜயவர்தனவின், 'மூன்றாம் உலக நாடுகளில் பெண் நிலைவாதமும் தேசியவாதமும்' என்ற நூலிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். சரியானதொரு நோக்கு வாய்ப்பை வழங்கும் பொருட்டு, (பிரதானமாக இம்மூலத்திலிருந்து) நாம், ஏறத்தாழ முழுமையானதொரு பட்டியலை வழங்குகின்றோம். **இலங்கையின் விருத்திப்பாதையில் பெண்களின் பங்குபற்றலின் முக்கியத்தவத்தை வலியுறுத்த வேண்டியது அவசியம். கடந்த காலத்திலிருந்தது போன்று, நிகழ்காலத்திலும் சமாதானமான இலங்கையை உருவாக்குவதில் அவர்கள் பங்குபற்றலாம்.**

**அடிமட்ட நடவடிக்கைகளில், நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம்/ இலங்கைக் குழு பெண்கள் பங்குபற்றுதல், சமாதான இயக்கத்தில், மிக முக்கிய காரணிகளுள் ஒன்றாகத் திகழ்வதை உணர்ந்துள்ளது.** போரின் விளைவாக, சமூகத்தின் வேறெந்தவொரு பிரிவினரையும் விட, இவர்களே மிகப் பாரதூரமான அல்லல்களுக்காளாகியுள்ளனர் என்று கூடக் கூறலாமெனத் தோன்றுகின்றது. சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் அவர்கள் கொண்டுள்ள அவாவும் சமாதானத்திற்காகப் பணி செய்வதில் அவர்கள் காட்டும் ஊக்கமும் மிக வலிமை வாய்ந்தனவாகும். சமாதானத்தை ஏற்படுத்துவதில் இவர்கள், பலமுள்ள ஒரு சக்தியாக அமையலாம். பெண்கள் பங்கேற்க வேண்டியதன் அத்தியாவசியத்தையும் அடிமட்ட யதார்த்தங்களுடன் அவர்களுக்குள்ள நெருக்கத்தையும் குறிப்பிடும் வகையில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம்/ இலங்கைக் குழு நடத்திய, தளத்திற் செயலாற்றும் பெண் தொண்டர்களுக்கான செயலமர்வின் முடிவுகளை ஒரு பின்னிணைப்பாகச் சேர்த்துக் கொண்டுள்ளோம். நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து வந்த 80இற்கும் மேற்பட்டோர் இச்செயலமர்விற் பங்குபற்றினர். இச்செயலமர்வின் குழு வேலையின் போது, போர் காரணமாகப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கணித்ததுடன், இப்பிரச்சினைகளுக்குக் குறுகிய கால, நீண்ட காலத் தீர்வுகளாகத் தாம் கருதியவற்றையும் பட்டியற்படுத்தினர்.

நமது நாட்டின் வாழ்வில், உண்மையில் குறிப்பிடத்தக்களவில் பங்களிப்புச் செய்த பெண்களின் பட்டியல் பின்வருமாறு: டோனா கோர்னீலியா பெருமாள் (கஜமன் நோனா), டோனா அர்னோலியா பெருமாள், டோனா கத்தரீனா, அத்தரகம குமாரிஹாமி, திஸ்ஸாநாயக்க லமத்தானி, ருனா ஹாமினே, ரஞ்சகொட லமயா, ஹில்டா பீரிஸ், அலிஸ் டி போர், வினி∴பிரட் நெல், வயலட் முத்துகிருஷ்ணா, கத்தரீன் டி அல்விஸ், ஸிசீலியா இலங்கக்கோன், விராஜினி குமாரசிங்ஹ, ஹெலனா பிளவட்ஸ்கி, அனி பெஸன்ட், மாரி மியூஸியஸ் ஹிக்கிங்ஸ், எல்ஸி டி சில்வா, லூஸி டி ஆப்ரூ, ஹில்டா கருணாரத்ன, டொரீன் விக்கிரமசிங்ஹ, கிளேரா மொட்வானி, லூ வின்ஸன், எலிநோர் டி ஸொய்ஸா, நன்ஸி விஜேகோன், கலாநிதி நல்லம்மா முருகேசன், மகேஸ்வரி செகராஜசிங்கம், அஸிலின் தொமஸ், அக்னஸ் டி சில்வா, நேசம் சரவணமுத்து, அட்லீன் மொலமொறே, வைத்திய கலாநிதி மேரி ரத்னம், ஸிஸி குறே, அன்னம்மா முத்தையா, மகேஸ்வரி நவரத்னம், மங்களநாயகம் தம்பையா, எஸ்.செல்லம்மாள், எஸ்லின் தெரனியகல, க்ளடிஸ் லொஸ், கொன்ஸ்டன்ஸ் பிளக்கர், ஸில்வியா பர்னாண்டோ, லீலா பஸ்நாயக்க, எமலியா ஹாமி, பவிஸ்டீனா ஹாமி, எமி நோனா, இஸபெலா ஹாமி, நல்லம்மா சத்தியவாகீஸ்வர ஐயர், கோதண்டராம நடேச ஐயர், கோகிலம் சுப்பையா, ஆன் பிரெஸ்டன், கரலீன் குணசிங்ஹ, திருமதி ரிச்சர்ட் டி சில்வா, ஈவா ∴போர்டினன்டோ, ஜெனி ∴போர்டினன்டோ, மட்லின் ஜயவர்தன, லிலியன் பண்டாரநாயக்க, ஈவா டி மெல், ஹெலன் டி அல்விஸ், ஷிரானி கமகே, செலீனா பெரேரா, சுஸன் டீ சில்வா, விவியன் குணவர்தன, சீதா விக்ரமசூரிய, கரலீன் குணவர்தன, குசுமா குணவர்தன, ஈடித் லுடவைக், விமலா விஜேவர்தன, ஹெலன் குணசேகர, பரமேஸ்வரி கந்தையா, நோபிள் ராஜசிங்கம், பொன்சினஹாமி, தேஜா குணவர்தன, சூரியா விக்ரமசிங்ஹ, கலாநிதி குமாரி ஜயவர்தன, கலாநிதி ரஞ்சினி திரணகம, சிறிமாவோ பண்டாரநாயக்க, சந்திரிகா பண்டாரநாயக்க, சரோஜினி யோகேஸ்வரன், சர்வம் கைலாசபதி, கலாநிதி ராதிகா குமாரசுவாமி, சுனிலா அபேசேகர, டல்ஸி டி சில்வா.

நவீன காலத்தில் இலங்கைப் பெண்களின் பங்களிப்பை மதிப்பீடு செய்யும் போது, கலாநிதி குமாரி ஜயவர்தன பின்வருமாறு கூறுகிறார்: "படிப்படியான சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம், இலங்கையில் முன்னேற்றத்திற்கான சாத்தியப்பாடு இருப்பது விளங்குகின்றது. இவ்வாற்றலே இயக்கத்தின் மீது சில மட்டுப்பாடுகளையும் சுமத்துகின்றது. மத்திய தர, உயர் மத்திய தர வர்க்க (பூஷுவா) பெண்களுக்கு அல்லது மத்திய தர, உயர் மத்திய தரத்தைச் சேர்ந்த குறுகிய மனப்பான்மையுள்ள பெண்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இது இருந்தது; சமூகப் பாரமானிகளுக்கிடையேயிருந்து செயற்பட்டதனால், இது, ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப்பையிட்டு வினா எழுப்பவோ, பெண்ணைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளுவதில் குடும்பத்தின் கடமைப் பங்கையிட்டு வினா எழுப்பவோ இல்லை........... பெண்கள் குரூரமான, வெளிப்படையான கொடுமைகளுக்குட்படுத்தப்படாததொரு சமூகத்திற்கு, இலங்கை ஒரு சுவாரசியமான உதாரணமாகும். எனவே, அடிமைத் தளையிலிருந்து பெண்களை விடுவிக்கும் நோக்கத்துடன் நிலவி வந்த சமூகப் பாரமானிகளுக்கப்பாற்பட்டதோர் இயக்கம் இலங்கையில் விருத்தியடையவில்லை. இப்பின்னணியில் தான், பெண்களை அடக்கியாளும் பொதுவான கோலங்களைக் கலைக்காது, இலங்கை ஒரு பெண் பிரதம மந்திரியை உருவாக்குவதற்கும், உயர் தொழில்களில் பல பெண்கள் அமர்வதற்கும் உதவியது.

"இலங்கையிற் பெண்கள், குறிப்பாக, மேற்கத்திய நாகரிகத்திற்காட்பட்ட பிரமுக வர்க்கத்துப் பெண்கள் போராடி, வேறு பல நாடுகளைச் சேர்ந்த பெண்கள் வென்றெடுப்பதற்கு முன்னதாகவே, வாக்குரிமையை வென்றெடுத்தபோதிலும் அரசியற் கட்டமைப்புக்களில் அவர்கள் இடம் பெற்றுள்ளமை மிகக் குறைவாகவேயுள்ளது: தேசியச் சட்ட மன்றங்களில் இவர்களுடைய பிரதிநிதித்துவம் ஒரு போதும், ஏறத்தாழ நான்கு சதவீதத்திற்கு மேற்படவில்லை. அத்துடன்,

உள்ளூராட்சி மட்டங்களிலும் அவர்களின் பங்குபற்றுகை அற்ப அளவிலேயே இருந்தது. அரசியற் செயன்முறையில், தமக்கென ஒரு பெயரை நிலைநிறுத்திக் கொள்வதில், வெற்றி கண்ட ஒரு சில பெண்கள், பொதுவாக, ஒன்றில், தந்தையாரின் இறப்பின் பயனாக, அல்லது கணவனின் மறைவின் விளைவாக, உரிமை வழியாகப் பெறுவது போன்று, ஆணினால் விட்டுச் செல்லப்பட்ட அதிகாரத்தைச் சுவீகரித்து, அரசியல் வாழ்வில் நுழைந்தோரேயாவர். அத்தருணத்திற் பிரதம மந்திரியாகவிருந்த கணவன் கொலை செய்யப்பட்ட பின்னர், அரசியலிற் காலடியெடுத்து வைத்த சிறிமாவோ பண்டாரநாயக்க இதற்கோர் எடுத்துக்காட்டாவார்". (மூன்றாம் உலகத்திற் பெண்நிலைவாதமும், தேசியவாதமும். 1986, பக்கங்கள் 136, 129)

எனவே, கடந்த காலங்களில் இலங்கைப் பெண்மணிகளின் பங்களிப்பை நயக்கும் அதே வேளை, இம்மதிப்பீட்டைப் பற்றி நாம் சிந்திக்கவும் வேண்டும். பெண்கள் எதிர் காலத்தில் அளிக்க வேண்டிய பங்களிப்பை வழங்க வேண்டுமேயானால், அவர்கள் முன்னேறுவதற்கான சில புதிய வழிவகைகளைத் தேட வேண்டியதுடன், அவர்களுடைய முயற்சிகளுக்கு ஆண்கள் தகுந்த ஆதரவு வழங்கவும் வேண்டும். உதாரணமாக, இந்தியப் பாராளுமன்றத்தில், ஆண் அங்கத்தவர்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில், மூன்றிலொரு பங்கு ஆசனங்கள் பெண்களுக்காக ஒதுக்கப்பட வேண்டுமென அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட மூலத்தை நாம் கவனத்திற்கெடுத்துக் கொள்ள வேண்டும். அதி சிரேஷ்ட பாராளுமன்றப் பெண் அங்கத்தவரும், இப்பிரேரணையின் பிரதான கர்த்தாக்களுள் ஒருவருமான, கீதா முகர்ஜி, தன்னை அடி பணிய வைக்க முடியாதெனக் கூறியுள்ளார். பெண்கள் உரிமைகளுக்காகப் பெருமளவில் பாடுபட்டு உழைக்கும், இந்தியாவில் மிகப் பிரபல்யம்வாய்ந்த பிரிந்தா கரத், இவ்வொதுக்கீடு, இடைத்தரமானவர்களுக்கு இடமளித்துவிடும் என்ற ஆண்களின் கருத்தை வன்மையாக நிராகரித்துப் பின்வருமாறு கூறுகின்றார். "பாராளுமன்ற அங்கத்துவம் எந்தவொரு பாலைச் சேர்ந்தோரினதும் தனியுரிமையல்ல. ஆண்கள், அதே அளவிற்கு இடைத்தரமானவர்களாகவோ, அதை விட மோசமானவர்களாகவோ இருக்கலாம். ஒன்று மட்டும் தெளிவு. இந்தியப் பெண்களைப் பொறுத்த மட்டில் வழி எவ்வளவு தான் சேறாகவோ, சறுக்கலாகவோ இருந்தாலும் இவ்விடயம் நின்று நிலைக்கும்; பலமோ பணமோ அதைத் தூக்கி எறிய முடியாது".

## எதிரான இயல்புகளும், சார்பான இயல்புகளும்

இங்கு நாம், இப்பிரச்சினையின் எதிரான இயல்புகளையும் சார்பான இயல்புகளையும் எடுத்து நோக்க வேண்டும். **பண்டைய சமயங்கள், இனச் சமுதாயங்கள், நவீன சித்தாந்தங்களும் தத்துவங்களும் என்ற யாவும், கடந்த காலங்களில், வளங்களை உசிதமான முறையிற் பகிர்ந்து கொண்டு, இயைபுற்று, ஒன்று சேர்ந்து, கணிசமான அளவில் ஆக்கபூர்வமான முன்னேற்றத்திற்கு வழிவகுத்துள்ளனவெனின், நம் எல்லோருக்கும் தேவைப்படும் சமாதானத்தை உருவாக்குவதற்கு, எதிர் காலத்தில், இதைவிட மேலான விதத்திற் செயற்படலாமென்பதைச் சார்பான இயல்புகள் காட்டி நிற்கின்றன. ஆனால், என்னென்ன குறைபாடுகள் உள்ளன என்பதைத் தெளிவாகக் கண்டறிந்து, நீதியையும், சமாதானத்தையும் நிலை நாட்டுவதற்குத் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துவதற்குப் பயனுறுதிவாய்ந்த விதத்திற் பணியாற்றும் பொருட்டு, எதிரான இயல்புகளையும் விளங்கிக்கொண்டு, பகுப்பாய்வு செய்தல், அதே அளவு அவசியமாகும்.**

வித்தியாசமான சமயங்களைச் சேர்ந்தோரும் வித்தியாசமான இனச் சமூகங்களைச் சேர்ந்தோரும் அண்மைக் காலம் வரை, இலங்கையில், ஒருமித்து, அமைதியாக - குறிப்பாகச் சில பிரதேசங்களில் இவர்கள் ஒன்று சேர்ந்து, பக்கம் பக்கமாக - வாழ்ந்தனரென்றும் சுய முன்னேற்றத்தையே

நோக்கமாகக் கொண்ட அரசியல்வாதிகளும் இன்றையக் கட்சி அரசியல் முறைமையும் தேர்தல் முறைமையுமே விஷயங்களைப் பாழ்படுத்தி, ஒற்றுமையின்மையையும் ஏற்படுத்தியுள்ளன என்றும் சொல்லப்படுவதை நாம் அடிக்கடி கேட்கின்றோம். எனினும், இது மிக மிக மேலோட்டமான கருத்தாகும். பிளவுகளும், முரண்பாடுகளும் கூட ஓரளவு காலமாக நம் அரசியலில் இருந்து வந்துள்ளதெனினும், இவை மிக அண்மைக்காலத்திலேயே அழுத்தம் பெற்றுள்ளனவென்பது, மேலே இடம்பெற்ற பகுப்பாய்வின் போது, எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையிற் குறிப்பிடத்தக்க அளவிற் பொதுச் சேவையாற்றியுள்ள பிரதான சமயங்களையும், இனச் சமுதாயங்களையும் சேர்ந்த 'புகழ் பெற்ற' பிரமுகர்களின் பட்டியல்களை நாம் தந்துள்ளோம். எனினும், இவர்களுடைய சில மட்டுப்பாடுகளையும் - அவை பாரதூரமான மட்டுப்பாடுகளாகக் கூட இருக்கலாம் - கவனிக்க வேண்டும். அவரவர்கள் பின்பற்றிய சமயங்களிலுள்ள - அதாவது, அவர்கள் நடைமுறையிற் பின்பற்றிய - மட்டுப்பாடுகளை, ஏன், பாரதூரமான மட்டுப்பாடுகளை நாம் கவனிக்க வேண்டும். இச்சமயங்களின் தத்துவங்கள், எவ்வளவுதான் உதாரணமானவையாக இருந்த போதிலும் அவை எவ்வளவு தான், ஆழமான மட்டத்திற் பேண்தகு தன்மையைப் பெற்றிருந்த போதிலும் மக்கள் வாழ்க்கை, பெருமளவில் நிறுவனரீதியான பாதிப்புக்களுக்குட்பட்டதுடன், ஊழலும் மூட நம்பிக்கைகளும் புகுந்து கொண்டதனால், அவர்கள், பெரும்பாலும் மரபு நிலைமைகளின் அரண்களாக மாறியதுடன், மக்கள், முன்னேற்றப் பாதையிற் செல்வதற்கும், அவர்களுடைய உண்மையான விடுதலைக்கும் தடையாக இருந்தனர்.

மேலே குறிப்பிடப்பட்ட 'புகழ் பெற்ற' பிரமுகர்களுள் பெரும்பாலானவர்கள், உயர் வகுப்பை அல்லது உயர் மத்திய தர வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். தமது வகுப்பு வரையறைகளைத் தாண்டிச் செயற்படுவதில், இவர்கள், பல்வேறு அளவுகளிற் தோல்வியுற்றனர். **தொழிலாளர்களின் உண்மையான இடுக்கண் நிலைமையை, இவர்கள், உண்மையாகவே உணர்ந்து கொண்வர்களா, அவசியப்படும் மாற்றங்களின் தீவிரத் தன்மையை இவர்கள் உண்மையாகவே விளங்கிக் கொண்டார்களா, இவற்றின் அவசரத் தேவையைப் போதிய அளவில் புரிந்து கொண்டார்களா, உண்மையான விடுதலை என்ற நோக்கம் தொடர்பாகத் தன்னலமற்ற அர்ப்பணிப்பு மனப்பான்மை போதிய அளவில் இவர்களிடம் காணப்பட்டதா என்பனவெல்லாம் நிச்சயமாகத் கேள்விக்குரிய விடயங்களாகும்.** சேனாநாயக்காக்கள், ஜயவர்தனாக்கள், பண்டாரநாயக்காக்கள் என்போர் போன்ற பௌத்தத் தலைவர்கள், அல்லது கோத்திரங்களைச் சேர்ந்தவர்களும் இவர்களுக்கு எதிரிணையான பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாச்சலம், ஜி.ஜி.பொன்னம்பலம், ஏ.அமிர்தலிங்கம் போன்ற இந்துக்களும் இவர்களுக்கு எதிரிணையான டி.பி.ஜாயா, ராஸீக் பரீத், பதியுத்தின் மஹ்முத் போன்ற முஸ்லிம்களும், இவர்களுக்குச் எதிரிணையான, ஈ.டபிள்யூ.பெரேரா, ஜேம்ஸ் பீரிஸ், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்ற கிறிஸ்தவர்களும் இத்தகைய கண்டனத்திற்குள்ளாகக்கூடியவர்களாவர். இந்தியா, பாகிஸ்தான் என்பவற்றின் அரசியல் அரங்கில் இடம்பெற்ற 'உயர்ந்தோங்கிய சூரர்' எனத்தக்க மகாத்மா காந்தி, ஜவாஹர்லால் நேரு, மொகமத் அலி ஜின்னா போன்றோருக்கு எதிராகவும் கூட இத்தகைய கேள்விகள், அல்லது கண்டனங்கள் எழுப்பப்படலாம். நம்மிடையேயுள்ள இளையோரும், அந்தளவிற்கு இளையோரல்லாதவர்களுமான தீவிர முன்னேற்றவாதிகள், இத்தகைய மிதமான கேள்விகள், அல்லது கண்டனங்களுக்குப் பெரிதும் அப்பாற் சென்று கடுமையான கண்டனங்களைத் தெரிவிப்பதுடன், இத்தகைய 'போற்றத்தக்க' பிரமுகர்களைச் சமூக முன்னேற்றப் பாதையின் தடங்கல்களாகவும் தடைகளாகவும் கருதித் தூக்கி எறிந்து விடுகின்றனர்! மறு புறம், **இதே நபர்களை, விடுதலை இயக்கத்தினதும் தேசிய இன உருவாக்கத்தினதும் தாபகத் தந்தையரெனக் கருதுவோரும் நம்மிடையே கணிசமான அளவில் இன்னமும் இருக்கிறார்கள்.** சரியான நோக்கைப் பெற்று, சமநிலையானதொரு தீர்ப்பிற்கு வருவதற்கு

மேலும் நேரகாலம் அவசியப்படலாம். அத்தருணத்தில் நிலவிய, வரலாற்று ரீதியான உள்ளூர் நிலைமைகளையும் சர்வதேச நிலைமைகளையும் இத்தீர்ப்பு கருத்திற்கொள்ள வேண்டும். **இவற்றினூடாக, தனிப்பட்ட மனித இயல்புகளின் பெறுமதியை நயந்து, மதிப்புக் கொடுத்தலும் நாட்டின் வரலாற்றிற்கும் அதன் நாளாந்த வாழ்விற்கும் பங்களிப்புச் செய்துள்ள பல்வேறு சமயங்களையும் பண்பாட்டுக் கோலங்களையும் மதித்துக் கட்டிக்காத்தலும் பகுத்தறிவு மட்டத்திலும் மானிடர் என்ற மட்டத்திலும் சாத்தியப்பட வேண்டும்.**

**எதிர்காலத்தில் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் தொடர்பாக, நாம் எல்லோரும் எவ்வாறு முன்னேறிச் செல்ல வேண்டும் என்பது பற்றி நம்மிடையே ஏகமனதான உடன்பாடு ஏற்பட வேண்டுமென்பதே மிக முக்கியமான விடயமாகும். இதை எய்துவதற்கு, கடந்த கால அடைவுகள் பற்றிய மதிப்பீடு எவ்வாறிருப்பினும் முற்றுப் பெறாத பணிகள் இன்னமும் இருக்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.** மேலேயுள்ள கதையில் இடம்பெற்றுள்ள பிரிவினை முரண்பாடு, ஓரங்கட்டுதல் என்பவற்றிற்குப் பெரும்பான்மையச் சமுதாயமும் சிறுபான்மைச் சமுதாயங்களும் பெற்ற அனுபவங்களிற் காணப்பட்ட அனுகூலங்களும் பிரதிகூலங்களுமே காரணங்களாகும். மேலும், சகல சமுதாயங்களையும் சேர்ந்த உயர்ந்தோர் குழாம் பல்வேறு அளவுகளிற் பெற்ற அனுகூலங்களும், அதேபோன்று சகல சமுதாயங்களையும் சேர்ந்த பொது மக்கள், வெவ்வேறு அளவுகளில் அனுபவித்த பிரதிகூலங்களும் உண்டு. சகல சமுதாயங்களிலும் பாதகமான நிலைமைகளுக்கும் ஓரங்கட்டப்பட்ட நிலைமைகளுக்கும் ஆளான பகுதியினருக்கும் அதிகாரத்தைப் பகிரும் அரசியல் முறைமை ஒன்றை நோக்கி நாம் செயற்பட வேண்டும்.

இதை ஆராய முற்படுவதற்கு முன்னர், தேசிய மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் சர்வதேசப் பரிமாணம், சர்வதேசக் காரணிகள் என்பவற்றின் முக்கியத்துவத்தை நாம் முதலிற் கவனத்திற் கொள்ள வேண்டும். இதனுடன், மிக நெருக்கமாகத் தொடர்புற்ற ஒரு விடயத்தை, அதாவது, அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களையும் எடுத்துக் கொள்வோம்.

# 5

# சர்வதேசப் பரிமாணமும், அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களும்

## சர்வதேசப் பரிமாணம்

இலங்கை, பல நூற்றாண்டுகளாக அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்ததன் பயனாக, அனர்த்தமான விளைவுகள் ஏற்பட்டதால், இலங்கையின் உள் நாட்டு விவகாரங்களிற் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய அந்நியத் தலையீடுகள் பற்றி இலங்கை உஷாராக இருத்தல் வேண்டும். போர்த்துக்கேய, ஒல்லாந்த, பிரித்தானியப் படையெடுப்பாளர்கள் யாவரும் கிறிஸ்தவ நாடுகளைச் சேர்ந்தவர்கள் (1505 முதல் 1948 வரை). கிறிஸ்த சமயம், பல்வேறு அரசியல், சமூக, பொருளாதார நெருக்குதல்களுக்கிடையேயும், கணிசமான அளவு வன்முறைகளுக்கு மத்தியிலும் கொண்டுவரப்பட்டது.

ஏகாதிபத்திய ஆட்சி இடம்பெற்ற காலப்பகுதி முழுவதிலும், நிலமானிய முறை தளர்வடைந்தமை, நாடு ஒரு விதமான ஒருமைப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டமை, ஏற்றுமதிப் பொருளாதார முறையொன்று விருத்தியடைந்தமை, நவீன அரசியல் நிறுவனங்கள் தோன்றியமை என்பன போன்ற சில அரசியல் சமூக, பொருளாதார நன்மைகள் ஏற்பட்டன. ஆனால், இதனால், சுதந்திரம் இழக்கப்பட்டதுடன், மக்கள் வாழ்வில், குறிப்பாக, அவர்களுடைய சமய, கலாசார வாழ்வில், வீழ்ச்சி ஏற்பட்டது.

வெளி நாட்டுப் படையெடுப்பாளர்களின் இறுதி **உத்தியோகபூர்வமான** வெளியேற்றம், 1948இல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதுடன் ஏற்பட்டது. எனினும், மேல் நாட்டவர்களினதும், மேல் நாட்டு முதலீட்டினதும் ஆதிக்கம், உள் நாட்டு உயர்ந்தோர் குழாத்தினூடாக, நவீன குடியேற்றவாதமாகத் தொடரலாயிற்று. பின்னர், ஜப்பான் போன்ற நாடுகளினூடாக, ஐரோப்பியரல்லாதோருடைய அதிகார அதிகரிப்புடனும் உலகமயமாக்கம், கட்டமைப்புச் சீராக்கம் என்பவற்றுடனும் ஒப்பீட்டுரீதியாக உண்மையாகக் குறைந்தபட்ச அபிவிருத்தி நன்மைகள் என்பவற்றுடனும், பகிரங்கச் சந்தை முறையையும் பல்தேசிய நிறுவனங்களும் அந்நிய ஆதிக்கம், சுரண்டல் என்ற முறைமை முழுவதையும் தீவிரப்படுத்தியுள்ளன. சில திருத்தங்களுடன், உலகமயமாக்கலையே ஒரேயொரு யதார்த்தமான மாற்றென்று கருதும் சில 'முற்போக்காளர்'களையும் 'இடதுசாரி'களையும் உள்ளடக்கிய, உலகமயமாக்கலை ஆதரிக்கும் பகுதியினர் இக்கருத்தை எதிர்க்கிறார்கள். சாத்தியமான இரண்டு உலகங்களையும் நன்கு பயன்படுத்திக்கொண்டு, நிறுவனத்தைச் சார்ந்தவாறும் அதே வேளை, அறிவொளியைத் தேடியலையும் பலருக்கு முற்போக்குக் குருமாராக நடித்துக் கொண்டும், இவர்கள், சௌகரியமான நிலையில் இருக்கிறார்கள் என்பது போல் தோன்றுகிறது.

இலங்கையில் வாழும் கிறிஸ்த சமுதாயம், அந்நியத் தொடர்பு, ஆதிக்கம், சுரண்டல் என்பனவற்றின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள கறைகளைச் சமாளிக்க வேண்டிய நிலையுண்டு. அத்துடன், காலத்திற்குக் காலம், இச்சமுதாயத்திற்கெதிராக, மக்களுள் சில பகுதியினரால், இச் சமுதாயத்திற்கெதிராகச் சில எதிர்ப்புக்களும் தூண்டிவிடப்பட்டுள்ளன. எனினும், பிஷப் லக்தாஸ டி மெல், லசஷ்மண் விக்ரமசிங்க, லியோ நாணயக்கார போன்றோரின் தூர நோக்குத் தலைமைத்துவத்தினால், இச்சமுதாயம், சுய விமர்சன நோக்குடனும் உள் நாட்டுத் தொடர்புகளினதும் விழுமியங்களினதும் அடிப்படையில் தனது பங்களிப்பைப் பார்ப்பதற்கு ஓரளவிற்குக் கற்றுக் கொண்டதுடன் பெரும்பான்மை பௌத்த சமுதாயம், இதைச் சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக் கொண்டதால் இச்சமுதாயம், தனக்குரிய இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன்,

பௌத்த, இந்து, முஸ்லிம் சமூகங்களுடன், நாட்டின் வாழ்விற்குத் தனக்கே உரித்தான பங்களிப்பைச் செய்கின்றது. பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சமுதாயங்கள் யாவும் பல்வேறு வெளி நாட்டு முகவரகங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன. இவை, இம்முகவரகங்களினூடாக, பல்வேறு செயற்பாடுகளுக்குமாக நிதிகளைப் பெற்று, நாட்டின் வாழ்விற்குத் தமது பங்களிப்புக்களைச் செய்கின்றன.

## அரசாங்கச் சார்பற்ற அமையங்கள் (அ.சா.அ.)

எப்படியிருப்பினும், வெளி நாட்டு முகவரகங்களினால் நிதியிடப்படும் அ.சா. அமையங்களின் எழுச்சியுடனும் அவற்றின் பெருக்கத்துடனும் வெளி நாட்டுச் செல்வாக்கும் தலையீடும் ஒரு புதிய வடிவில் மீண்டும் தலைதூக்கியுள்ளன. அ.சா.அ., மக்கள் சமூகத்தின் பல்வேறு துறைகளிலும், சிறப்பாக, மனித உரிமைகள், நீதி, சமாதானம், பொருளாதார விருத்தி என்ற துறைகளில் மிக முக்கிய பங்கு வகிப்பதனால், இது, ஒரு முக்கிய விடயமாகின்றது. காலத்திற்குக் காலம், சமூகத்தின் சில பிரிவினர், இவற்றிற்கெதிராகக் கிளர்ந்தெழுகின்றனர்; இவற்றை அடக்கி, ஒழுங்குபடுத்தி, கட்டுப்படுத்தும்படி அரசாங்கத்தைக் கேட்கின்றனர். அரசாங்கங்கள், விடயத்தை, அதன் முழுமையான பின்னணியில் ஆராயமல், அவசரமான, நன்கு சிந்திக்காது சட்டங்களை இயற்றுவதன் மூலம் இக்கோரிக்கைகளுக்குத் துலங்கும் போக்குடன் செயற்படுகின்றன.

## ஒன்று சேரும் சுதந்திரம்

அடிப்படை உண்மைகளிலிருந்து நமது ஆய்வை ஆரம்பித்து, இன்றைய நிலை வரையான விருத்தியைக் கணிப்போம். ஒன்று சேரும் சுதந்திரம், மக்கள் சமூகத்தில் வாழ்வோரின் அடிப்படை உரிமையாகும். மேலும், எந்தவோர் அரசாங்கமும், மக்களின் சகல தேவைகளையும் ஒருபோதும் பூர்த்தி செய்ய முடியாது. ஒரு சமூகம், இடர்ப்பாடுகளின்றிச் செயற்பட வேண்டுமேயானால், அச்சமூகம், அரசாங்கத்தின் பணிகளில் மட்டுமன்றி, தனது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் சுதந்திரமாக ஒன்று கூடுவதற்குள்ள சுதந்திரத்திலும் தங்கியிருக்கும். பொதுப்படையாகப் பார்த்தால் உள்ளூர் மட்டத்திலுள்ள மக்களே, அம்மட்டத்திலுள்ள மக்களின் தேவைகளைக் கணிக்கும் நிலையிலிருப்பதுடன், இத்தேவைகள் தொடர்பாக, மிகப் பொருத்தமான விதத்திலும் மிக விரைவாகவும் செயற்படுவதற்கு மிகச்சிறந்த நிலையிலும் இருப்பார்கள். எனவே, அரசாங்கத்தினால் வழங்கப்படும் சேவைகளும் மக்களினால் வழங்கப்படும் சேவைகளும் ஒன்றையொன்று குறைநிரப்புவதாக அமையும். ஆகவே, உள்ளூர் கிராம, நகர, பெருந்தோட்ட - மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பல்வேறு சேவைகளை மக்களுக்கு வழங்கும் எண்ணற்ற மக்கள் அமையங்கள் எப்பொழுதுமே இருந்து வந்துள்ளன. இச்சேவைகளுட் பெரும்பாலானவை மதச்சார்பற்ற அமையங்களினால் வழங்கப்படுகின்றன. எனினும், இத்தகைய சேவைகளை வழங்குவதில் எல்லாச் சமயங்களும் பெரிதும் ஈடுபட்டுவந்துள்ளன. இத்தகைய அமையங்களுட் பல, விகாரை, கோவில், மசூதி, கிறிஸ்த தேவாலயம் என்பவற்றை மையமாகக் கொண்டுள்ளன; அல்லது, இம்மையங்களிலிருந்து ஊக்கத்தையும் தலைமைத்துவத்தையும் பெறுகின்றன.

## சமூக சேவை

மிகவும் பொதுவான வகை, அல்லது 'மரபு' வகை எனப்படும் சேவை, சமூக சேவை எனக் குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. மக்கட் பணியில் ஈடுபடும் சிந்தையுடன், அல்லது இரக்கச் சிந்தையுடன் ஏழைகளுக்கும் வசதிகுன்றியோருக்கும் பணி செய்து, அவர்களைக் கவனித்தலை இது குறிக்கும்.

அடிக்கடி பயன்படுத்தப்படும் மற்றுமொரு சொல், 'தருமம்' என்பதாகும். இவை, சில சமயங்களில் பெரும் அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் - தியாக சிந்தையுடன் என்று கூடச் சொல்லலாம் - செய்யப்பட்டது. ஆனாலும், சமூகம் பற்றிய, அல்லது சமூகத்தின் சட்டங்கள் பற்றிய, அல்லது சமூகக் கட்டமைப்புக்கள் பற்றிய விமர்சனரீதியான ஆய்வோ, வறுமையின் காரணங்களைக் கண்டறியும் போக்கோ இருக்கவில்லை; அல்லது, அற்ப அளவில் இருந்தது என்றே கூற வேண்டும்.

## சமூகரீதியான செயல்கள், அபிவிருத்தி, மக்கள் இயக்கம்

எப்படியிருப்பினும், வறிய, வசதி குன்றிய ஓரங்கட்டப்பட்ட வகுப்பினர்களின் பிரச்சினைகளும் சுமைகளும் அதிகரிக்க, சமூக அமைதியின்மை வளர்ந்து வர, இவற்றுக்கான காரணங்களை ஆராய்வதற்கு மக்கள் தூண்டப்பட்டதுடன், வெறுமனே வறுமையை அகற்றுவதற்கு மட்டுமன்றி, அதை ஒழித்துக் கட்டுவதற்கான வழிவகைகள் பற்றியும் சமூகத்தில் ஏற்பட வேண்டிய மாற்றங்கள் பற்றியும் மேலும் ஆழமாகச் சிந்திப்பதற்கும் மக்கள் தூண்டப்பட்டனர். அத்துடன், உலகின் பல்வேறு பகுதிகளிலும் சிந்தனைப் போக்கும் நிகழ்வுகளின் போக்கும் இலங்கையின் நிலைமையிலும் செல்வாக்குச் செலுத்தலானது. எனவே, 'சமூகச் செயல்' என்ற சற்று ஆழமான எண்ணக்கரு இடம் பெறலாயிற்று. இத்துடன், படிப்படியாக, 'அபிவிருத்தி, நீதி, சமாதானம் என்பவற்றிற்கான இயக்கம்' பற்றிய புரிந்துணர்வும் ஏற்படலாயிற்று.

## தொழிற்சங்கங்களும், விவசாயிகள் சங்கங்களும்

பாட்டாளி வர்க்கத்தினரின் - தொழிலாளர்களும் விவசாயிகளும் - ஒழுங்கமைப்பும் தொழிற்சங்க இயக்கத்தினதும் இடதுசாரி இயக்கத்தினதும் விருத்தியும் இவ்வியக்கத்தின் பிரதான காரணிகளுள் ஒன்றாகும். 19ஆம் நூற்றாண்டின் இறுதி வாக்கில், தொழிலாளர்களின் முன்னோடி வேலை நிறுத்தங்களினூடாக இவ்வியக்கங்கள் வலிமை பெற்றதுடன், 1930களில், இடதுசாரிக் கட்சிகள் தாபிக்கப்பட்டதுடன், இது உச்ச கட்டத்தை அடைந்தது.

## அபிவிருத்தித் தசாப்தங்கள்

'அபிவிருத்தி' சிந்தனை, செயற்பாடுகள், அமயங்கள் என்பன உலகளாவியரீதியில், அரசாங்க மட்டத்திலும், உள்ளூர் மட்டத்திலும் பெற்ற வளர்ச்சி, ஐக்கிய நாடுகள் அமையம் 1960 முதல் 1970 வரையான காலப் பகுதியை, முதலாவது அபிவிருத்திச் சகாப்தம் என்று பிரகடனப்படுத்தியதன் மூலம், மிக உயர்ந்த மட்டத்திற் கணிப்பைப் பெறுவதற்கு வழிவகுத்தது. உலகம் முழுவதிலும் குறிப்பாக, மூன்றாம் உலக நாடுகளில் மட்டுமன்றி, அபிவிருத்தியடைந்த உலகம் என்று கூறப்படும் சில, ஓரங்கட்டப்பட்ட பிரதேசங்களிலும் கூட அதிகரித்து வரும் வறுமையும் இதன் விளைவாக எழுச்சி பெற்றுக்கொண்டிருக்கும் அமைதியின்மையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிகார நடவடிக்கைகள் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்பட்டது. அபிவிருத்தியடைந்த நாடுகள், தமது பாதீடுகளில் (வரவு செலவுத் திட்டம்) 2%ஐயேனும் அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கு உதவுவதற்காக ஒதுக்க வேண்டும். அபிவிருத்தி குன்றிய நாடுகள், தமது மொத்தத் தேசிய உற்பத்தியை 5%இனாலேனும் அதிகரிப்பதற்கு எத்தனிக்க வேண்டும் என்பன போன்ற சில இலக்குகள் பரிந்துரைக்கப்பட்டன. அச்சகாப்தத்தின் இறுதியில் லெஸ்டர் பியர்ஸன் என்பவரின் தலைமையில் இயங்கிய உயர் மட்ட ஐ.நா.மதிப்பீட்டுக் குழு, பொதுப்படையாகப் பார்த்தால், இலக்குகள் முழுமையாக எய்தப்படவில்லை என்று கண்டது. எந்தவோர் அபிவிருத்தியடைந்த நாடும் தனது பாதீட்டிலிருந்து உதவித் தொகையாக இரண்டு

சதவீதத்தையேனும் கொடுக்கவில்லை. $1^1/_2$ சதவீதத்தை கொடுத்த கனடாவே மிக உயர்ந்த வீதத்தைக் கொடுத்துள்ளது. ஐக்கிய இராச்சியம் 1 சதவீதத்தையும் ஐக்கிய அமெரிக்கா $^1/_2$ சதவீதத்தையும் கொடுத்துள்ளன. **இச்சகாப்தத்தில் செல்வந்தர் மேலும் செல்வந்தராக, ஏழைகள் மேலும் வறியவர்களாயினர். எனவே, செல்வந்தருக்கும், ஏழைகளுக்குமிடையே இருக்கும் இடைவெளி மேலும் அகன்றது. இதன் விளைவாக, உலகம் முழுவதிலும் நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கிடையேயும் முரண்பாட்டு நிலைமைகள் துரிதமாக அதிகரித்ததென்பதே பிரதான முடிவாக அமைந்தது.** எத்தகைய அபிவிருத்தி இடம்பெற்றாலும், அது செல்வந்தருக்கு மட்டுமே நன்மை விளைவிக்கின்றது; ஏழைகள், முன்னர் இருந்ததை விட மோசமான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது. சமூக மாற்றங்கள் ஏற்பட்டாலன்றி, அதாவது அபிவிருத்தியின் மூலம் ஏழைகள் நன்மையடையும் வகையில் சமூகக் கட்டமைப்புக்கள் மாறினாலன்றி, வறிய நாடுகளின் நிலைமை நாளுக்கு நாள் வீழ்ச்சியுறுமென்று மதிப்பீட்டுக் குழு முடிவு செய்தது. **ஆகவே, அத்தகைய கட்டமைப்பு மாற்றங்களின் அவசியம், இப்பொழுது, முதற் தடவையாக, மிக உயர்ந்த மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.**

எப்படியிருப்பினும், வறியோருக்கு எவ்வித நிவாரணமும் கிடைப்பதாக இல்லை. ஐக்கிய நாடுகள் அமையத்தின் முதலாவது அபிவிருத்தித் தசாப்தத்தைத் (1960 - 1970) தொடர்ந்து, இரண்டாவது அபிவிருத்தி தசாப்தம் (1970 - 1980) இடம் பெற்றது. ஆனால், அடிப்படையில் அது வறியவர்களுக்குப் பயனளிக்கவில்லை; அது உயர்ந்தோர் குழாத்திற்கு நன்மை பயக்கியது; அது, சற்றே கீழ் நோக்கிக் கசிந்து செல்லும் போக்கு காணப்பட்டது. சாதகமான தொகைகளில் உற்பத்தி செய்யும் முறைமைக்கு ஆதரவாக வாதாடுவோர் எப்பொழுதுமே காணப்படுவர்; கடைகளில் பொருட்கள் நிறைந்து கிடக்கின்றன. ஆனால், வறியவர்களுக்குத் தேவையானவையோ, அவர்களால் வாங்கக்கூடிய பொருட்களோ இல்லை. அவர்களுடைய அடிப்படைத் தேவைகளான, உணவு, உடனலம், கல்வி, நீர் என்பன மேன்மேலும் அருகிச் செல்வதுடன், அவற்றின் விலைகள் அதிகளவில் உயர்ந்து சென்றவாறிருக்கின்றன. செல்வந்தர் மேலும் செல்வந்தராதலும் வறியோர் மேலும் வறியோராதலும் அவர்களுக்கிடையேயான இடைவெளி அதிகரித்தலும் அதேவிதத்தில் அதிகரித்துச் செல்லலாயிற்று. நாடுகளுக்குள் காணப்படும் இடைவெளி, குறிப்பாக, மூன்றாம் உலக நாடுகளுக்குள்ளேயான இடைவெளியையும் முதலாம் உலக அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் மூன்றாம் உலக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் இடையேயான இடைவெளியையும் பொறுத்தளவில் இது உண்மையாகும்.

### கட்டமைப்பு மாற்றம்

**பரிந்துரைக்கப்பட்டனவும் வறியவர்களின் எதிர்பார்ப்புக்களாகவும் அமைந்த கட்டமைப்பு மாற்றங்கள் செயற்படுத்தப்படவில்லை. உண்மையில், செல்வந்தர்களுக்கு நன்மை விளைவித்த கட்டமைப்பு மாற்றங்கள் இடம்பெற்றன.** ஏகாதிபத்தியத்தைத் தொடர்ந்து வந்த நவீன குடியேற்ற முறைமை உள் நாட்டு, உயர்ந்தோர் குழாங்களினூடாக, வெளி நாட்டு மூலதனத்தைக் கொண்டோர் தொடர்ந்தும் சுரண்டலில் ஈடுபட்டமை பற்றி முன்னர் குறிப்பிட்டோம். காலப்போக்கில், சுரண்டல் முறைமையானது பகிரங்கச் சந்தை முறைமை, பல் தேசியக் கம்பனிகள், கட்டமைப்புச் சீராக்கல் நிகழ்ச்சித் திட்டம் (SAP), என்பற்றினூடாக ஒரு நுண்கலையாக வளரலாயிற்று. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் (IMF), இறுப்பு, வர்த்தகம் பற்றிய பொது உடன்படிக்கை (GATT) 1945, என்பவற்றின் செயற்பாட்டினூடாக, இவை யாவும் மீள வலியுறுத்தப்பட்டன. பின்னர், உலக வர்த்தக அமையம் (1995) GATTஇற்குப் பதிலாக இடம்பெறலாயிற்று. இவ்வமயங்களும் கட்டமைப்புக்களும் உலக விருத்தியை

மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்டவையெனப் பகட்டாகக் கூறப்பட்ட போதிலும் விரிவடைந்து வரும் முதலாளித்துவ முறைமையின் நலனைப் பேணுவதே இவற்றின் பிரதான நோக்கமாக அமைந்தது. 1995இல் உலக வர்த்தக அமையம் (WTO) நிறுவப்பட்டதுடன் நடைமுறைக்கு வந்த உடன்படிக்கைகளுள் ஒன்று அறிவாற்றல்சார் சொத்துரிமையின் வர்த்தகம் தொடர்பான அம்சங்களைப் பற்றிய உடன்படிக்கையாகும் (TRIPS உடன்படிக்கை). ஜெனீவாவைத் தளமாகக் கொண்டு நீண்ட காலமாக இருந்து வரும் உலக, அறிவாற்றல்சார் சொத்து அமையத்தின் (WIPO) பணியை, மேலும் உயர்த்துவதற்கு இவ்வுடன்படிக்கை உதவியது. அறிவாற்றல்சார் உரிமைகள் பற்றிய இவ்வுடன்படிக்கைள், கள்ளங்கபடமற்றவை போல் தோன்றிய போதிலும், அடிப்படையில், அவை விரிவடைந்துவரும் முதலாளித்துவ முறைமையினதும், அம்முறைமையிலிருந்து நன்மைகளைப் பெறும் வலிமை மிக்கோரினதும் ஆர்வங்களையும் கவனிப்பனவாகும். வறியோரின் நிலைமை திகிலூட்டும் விதத்தில் சீரழிந்தது. இது தொடர்பான, உலக வங்கியின் அண்மிய மதிப்பீடும், 'சார்க்' தலைவர்களின் மதிப்பீடும் ஏற்கெனவே, மேலே கவனத்திற்கெடுக்கப்பட்டன.

வறியோரின் நிலை மேலும் மோசமடைந்ததன் காரணமாக நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கிடையேயும் முரண்பாட்டு நிலைமைகளின் வளர்ச்சி என்றுமில்லா அளவிற்குப் பரவலாக இடம்பெறலாயின என்பதை நாம் இங்கு குறிப்பிட வேண்டும். 1990இல் நீ.ச.உ.ஓ.ம. நிறுவப்பட்ட தருணத்தில், 38 உள் நாட்டுப் போர்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன என்பதை நாம் கவனித்தோம். இலங்கையிலேயே, 1971இல், பாரியதோர் உள் நாட்டுக் கிளர்ச்சி ஏற்பட்டது. தெற்கில் இரண்டாவது பாரிய உள் நாட்டுக் கிளர்ச்சி (1988 - 1990) இடம் பெற்றமை, நீ.ச.உ.ஓ.ம. நிறுவப்படுவதற்கான சந்தர்ப்பமாக அமைந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சியினால், ஏற்கெனவே, 1983இல், உள் நாட்டுப் போர் தொடங்கிவிட்டது; சர்வதேச மட்டத்தில், வடக்கு - கிழக்குப் பிளவு, அழுத்தம் பெறத் தொடங்கியது; கடன் பிரச்சினை மேலும் சீர்கெடலாயிற்று. பனிப்போர், நிலைமையைப் பாழாக்கி, 1989இல் கிழக்கு ஐரோப்பிய கொம்யூனிச ஆட்சிகள் வீழ்ச்சியடைந்ததன் விளைவாக, உச்ச கட்டத்தை எய்தியது. இனத்துவம்/ தனித்துவம், தேசியப் பிரச்சினை என்பன பெரும் பிரச்சினையாகி, சமுதாயங்கள் பிளவுபடலாயின. உலகம் முழுவதிலும், பல பிரதேசங்களிலும், மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெறுவது யதார்த்தமாயிற்று. அரசாங்கத்துடன் தொடர்புள்ள சக்திகளும் போர் விருப்புடைய குழுக்களும் தொடர்ந்து நீடிக்கும் விதத்தில் இடம்பெறச் செய்யும் ஆட்கள் காணாமற் போதல், கைது செய்யப்படுதல், தடுப்புக்காவலில் வைக்கப்படுதல், சித்திரவதைக்குள்ளாக்கப்படுதல், பல்வேறு வகையான அச்சுறுத்தல்களிலும் வன்செயல்களிலும் ஈடுபடுதல் என்பன போன்ற பிரச்சினைகள் மேன்மேலும் அதிகரித்தன. 'வன்முறைக் கலாசார'த்தின் பரம்பல், நுகரும் தன்மையின் வளர்ச்சியுடனும் அதனுடன் தொடர்புற்றனவற்றின் வளர்ச்சியுடனும் இணைந்து ஆன்மீக, பண்பாட்டு வீழ்ச்சியையும் குறித்து நிற்கின்றது.

## 'அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்கள் என்ற தேற்றப்பாட்'டின் எழுச்சி

அ.சா.நி.என்ற தோற்றப்பாட்டின் எழுச்சியும் வெளி நாட்டு முகவரகங்களால் பெருமளவில் நிதியிடப்படும் அ.சா.நிறுவனங்களின் பெருக்கமும் வெளி நாட்டுச் செல்வாக்கும் தலையீடும் என்ற இம்முழு விடயமும் இத்தொடர்பிலேயே நோக்கப்பட வேண்டும். இலங்கையில், ஏறத்தாழ ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து, வறியவர்களின் நிலைமைக்குத் துலங்கும் விதத்தில், பல புதிய அமையங்கள் நிறுவப்பட்டு, வறுமை தொடர்பான பிரச்சினைகளைக் கையாளும் வகையில், பல்வேறு வழிகளிற் செயற்படலாயின. 1959இல் நிறுவப்பட்ட தேவசரண, 1958இல் நிறுவப்பட்ட சர்வோதய, 1958இல் நிறுவப்பட்ட கிறிஸ்தப் பணியாளர் தோழமை (கி.ப.தோ) என்பன ஆரம்ப

நிறுவனங்களுட் சிலவாகும்; அத்தருணத்திலிருந்து இன்று வரை இவை தொடர்ந்து இயங்குகின்றன. குடியியல் உரிமைகள் இயக்கம் (CRM) இனங்களிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் (MIRJE), சனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் (MDDR), சமூகத்திற்கும் சமயத்திற்குமான சத்தியோதய மையம் (CSR) என்பன குறிப்பிடக்கூடிய ஏனைய சிலவாகும். இவை, தம்மை, அரசாங்கச்சார்பற்ற நிறுவனங்களாகக் கருதவில்லை. ஆனால், காலப்போக்கில், இத்தகைய அமையங்களின் தொகை மிக அதிக அளவில் பெருக ஆரம்பித்ததும் இவை யாவும் அ.சா.நி. என வழங்கப்படலாயின. இவற்றுட் பல, முழுமையாக அல்லது ஓரளவிற்கு வெளி நாட்டு உதவி முகவரகங்களினால் நிதியிடப்பட்டவையாகும். நாட்டின் வாழ்வில் அ.சா.நிறுவனங்களுக்கென ஒரு கடமைக் கூறு இருக்கின்றதென்பது தெளிவாகத் தொடங்கியது. ஆனால், குறிப்பான கடமைக் கூறு என்னவென்பது அந்தளவிற்குத் தெளிவாக இல்லை.

## அபிவிருத்தி பற்றிய விவாதங்கள் - அபிவிருத்தி மாற்றுக்கள்

அ.சா. நிறுவனங்களின் கணிசமான செயற்பாடுகள், வறுமையை நிவிர்த்திப்பதில், ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தின என்பதில் சந்தேகமில்லை. அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புச் செயற்பாடுகள் பற்றியும் இதையே கூறலாம். ஆனால், அரசாங்கத்தின் செயற்பாடுகளோ, அ.சா. நிறுவனங்களின் செயற்பாடுகளோ நாட்டின் வறியோரின் நிலையில் அடிப்படையான தாக்கத்தை ஏற்படுத்தியதாகத் தோன்றவில்லை. **இது, உண்மையான அபிவிருத்தி என்பது யாது என்ற வினாவை எழுப்புகின்றது. இதற்கு விடை தேடும் போது, நீதி, விடுதலை, சமாதானம் பற்றிய கேள்விகள் எழும்பின.** பேண்தகு விருத்தி, பங்குபற்றுகை தொடர்பான விருத்தி, முழுமையான விருத்தி என்பன போன்ற எண்ணக்கருக்கள் பயன்படுத்தப்பட்டு, ஆராயப்பட்டன. அபிவிருத்தி பற்றிப் பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டன.

## அபிவிருத்தி பற்றிய வரைவிலக்கணம்

அத்தருணத்தில் இது பற்றிய பிரபலமானதென்று கூறக்கூடிய ஆய்வு 'Small is Beautiful' என்ற நூலின் ஆசிரியர் ஈ.எஸ்.ஷுமாக்கரினால் முன்வைக்கப்பட்டது. இது பௌத்தக் கோட்பாடுகளின் செல்வாக்கைக் கொண்டுள்ளது. வறியோரிடையே நம்பிக்கையை உருவாக்கி, பின்னர் அவற்றை நிலத்திலெறிந்து சுக்குநூறாக்கிய பரந்த, பெரும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றி, அது, பலமான கண்டனங்களை எழுப்பியது. அவர், சிறிய மாதிரிகளைப் பற்றி எடுத்துரைத்து, ஒழுக்க, ஆன்மீகப் பரிமாணங்களையும் அறிமுகப்படுத்தினார்.

ஏனைய மூன்று வரைவிலக்கணங்கள் கீழே தரப்படுகின்றன:

> "அபிவிருத்தியை வெறுமனே பொருளாதார அபிவிருத்திக்கு வரையறை செய்துவிட முடியாது. அது நம்பகத்தன்மையுடையதாக இருக்க வேண்டுமேயானால், அது பூரணத்துவம் பெற்றதாகவும் முழுமையானதாகவும், அதாவது, அது, ஒவ்வொரு மனிதனதும் முழுமையான மனிதனதும் நன்மையை மேம்படுத்துவதாக அமைய வேண்டும்."

**Populorum Progressio இல் VI ஆம் பாப்பரசர் போல், 1967**

> "அபிவிருத்தி, சமூக நீதி, தற்சார்பு, பொருளாதார வளர்ச்சி என்பவற்றை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்ட இடைத் தொடர்புடையதொரு செயன்முறையாகும். அத்துடன், கட்டமைப்பு மாற்றத்திற்கு ஆதரவாக, மக்களின் பங்குபற்றுகையை, அது அடிப்படையாகக் கொண்டது. இச்செயன்முறையில், வறியவர்களும் நசுக்கப்பட்டவர்களுமே முதல்

ஆதரவாளர்களாவர். அபிவிருத்தியில் பங்குபற்றல் என்பது, வறியோரினதும் நசுக்கப்பட்டோரினதும் போராட்டங்களையும் எதிர்பார்ப்புக்களையும் பகிர்தலையும் அவர்களுடைய போராட்டங்களில், சகல மட்டங்களிலும் ஒற்றுமையாக இயங்குதலையும் குறிக்கும்."

**தேவாலயங்களின் உலக சபையின் விருத்தியில் தேவாலயங்களின் பங்குபற்றுகை பற்றிய ஆணையம் (CCPD/WCC), 1980**

"மனித வாழ்வை நெரித்து, அடக்கும் பல்வேறு சக்திகளிலிருந்தும் மக்களை விடுவித்து, அவர்கள் முழுமையாக வளர்வதற்கு வேண்டிய சுதந்திரத்தை வழங்குவதே அபிவிருத்தியாகும். இந்தியா போன்ற நாடுகளில், அதிகரித்த உற்பத்தி மிக உயர்ந்த முந்துரிமை பெற வேண்டும். ஆனால், ஒருவர்பாலொருவர் இரக்க சிந்தையுடன் மிகவுகந்த மனிதத் தொடர்புகளையும் உணர்வுகளையும் திறந்த தன்மையையும் வளர்த்துப் பேணும் கட்டமைப்புக்களை உருவாக்குதலையும் மேம்படுத்துதலையும் அபிவிருத்தி உள்ளடக்கும். இவற்றிலுள்ள மக்களின் பொறுப்பு மிக்க பங்குபற்றுகையையும் இக்கட்டமைப்புக்கள் உறுதிப்படுத்த வேண்டும். அறிவும் பண்பாடும் உட்பட வாழ்க்கையின் சகல தேவைகளையும் ஒவ்வொருவரும் பெறச் செய்வதை உறுதிப்படுத்தி இயல்பாகவே ஊற்றெடுக்கும் ஆக்கத்தன்மைக்கு அபிவிருத்தி, சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகப் பார்க்கையில், துரித அபிவிருத்தி காணக்கூடிய வல்லமை பெற்ற நாடுகள் ஏனைய நாடுகளை அசட்டை செய்து, தாமே, தனித்து அபிவிருத்தியடையும் போக்கைக் கொண்டிருப்பின், அவை, உண்மையில், குறை அபிவிருத்தி பெற்ற நாடுகளாகவே காணப்படும். நாடுகளுக்குள்ளேயும் கூட, வகுப்புக்கள், சமுதாயங்கள், பிரதேசங்கள் என்பனவும் தனியாட்களும் இந்நிலைமைக்காளாகலாம். இப்பரந்த அடிப்படையிற் பார்க்கையில், ஒவ்வொரு நாடும் குறை அபிவிருத்தி அடைந்துள்ளது மட்டுமன்றி, ஒவ்வொரு மனிதனும் கூட குறை அபிவிருத்தி யடைந்துள்ளவனாவானென்றும் கொள்ளப்பட வேண்டும். பொருளாதார முன்னேற்றம், அபிவிருத்தி பற்றிய அளவுகோல்களுள் ஒன்றாகும். சகல நாடுகளுக்கிடையேயும், குழுக்களுக்கிடையேயும் இடம்பெற வேண்டிய ஒற்றுமையும் சகோதரத்துவமும் சமமான முக்கியத்துவமும் செல்லுபடித்தன்மையும் வாய்ந்த அளவுகோல்களாகும்."

**அபிவிருத்தி பற்றி, அனைத்து இந்திய கிறிஸ்தவ அமைப்பின் கூற்றிலிருந்து எடுக்கப்பட்டது. பெப்ரவரி, 1970**

இம்மூன்று, வரைவிலக்கணங்களும், கிறிஸ்தவ மூலங்களிலிருந்து பெறப்பட்டவையெனினும் அவற்றில், மதச் சார்பான விடயங்கள் எதுவும் இல்லையென்பதும் எந்தவொரு மதத்தையேனும், தத்துவங்களையேனும், சித்தாந்தங்களையேனும் பின்பற்றுவோருக்கும் ஏற்புடையதாக அமையலாம் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும். இவை, சமய அடிப்படையற்ற, போட்டியற்ற, சார்பான அடிப்படையையும் மனப்போக்கையும் கொண்டு, ஒருமித்துச் செயலாற்றும் சகல மதங்களையும் சித்தாந்தங்களையும் சார்ந்தவர்களிடமிருந்து வெளிப்பட்ட கருத்துக்களாகும்.

### சுற்றுச் சூழல் மாசடைதல்

அபிவிருத்தியின் பெயரில் இடம்பெற்று வரும் சூழல் அழிப்பே, அபிவிருத்தி பற்றிய இவ்வாய்வுக்கும் அபிவிருத்தி தொடர்பான மாற்றுக்களைத் தேடுவதற்கும் விசேடமான, அவசரமான காரணமாக அமைகின்றதென்பதும் குறிப்பிடப்பட வேண்டும். ஒரு சில தசாப்தங்களிலேயே, நமது கைத்தொழிற்

செயன்முறைகள், வளியின் இரசாயன அமைப்பை மாற்றி, பில்லியன் கணக்கான தொன்களைக் கொண்ட நச்சுக் கழிவுகளைச் சமுத்திரத்தினுள் தள்ளிவிட்டிருக்கின்றது. மனிதனால் தயாரிக்கப்பட்ட பல பதார்த்தங்கள், பூமியின் மூலை முடுக்கெங்கும், வாழ்விற்கு அபாயங்களை ஏற்படுத்துகின்றன. புவி, இயல்பாகவே தயாரிக்கும் அதன் சொந்த இரசாயனப் பொருட்கள், மனிதனால் ஆக்கப்பட்ட இத்தகைய சேர்க்கைகளைத் தவிர்க்கின்றன. காடுகள் அழிக்கப்படுகின்றன; பூச்சிக் கொல்லிகள் வளிக்கு நச்சுத்தன்மையையூட்டுகின்றன; நீரும் உணவும் ஏரிகளும் நாடுகளும் அமில மழையினால் அழுக்கடைகின்றன. **எனவே, அபிவிருத்திக் கொள்கைகளிலும், முந்துரிமைகளிலும் மாற்றம் ஏற்பட வேண்டியது அத்தியாவசியமாகும். புவியின் நிலைப்பும் புவியில் உயிரினங்களின் நிலைப்பும் அபாயத்தை எதிர்நோக்குகின்றன.**

## அரசாங்கத்தினதும் சமூகத்தினதும் மனப்பாங்கு

ஏழைகளின் நிலைமை மோசமடைகின்றமையின் பயனாக, அரசாங்கம், சமூகமாகிய இரண்டும் பொதுப்படையாக, அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களின் கடமைப் பங்கைக் கண்டுகொள்ளத் தொடங்கின. வெளி நாட்டுக் கடன்களில், மேன்மேலும் தங்கியிருக்கும் நிலைமையினாலும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் கட்டளைகளுக்கேற்பக் கட்டமைப்புச் சீராக்க நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமையினாலும் இந்நிலைமை மேலும் தெளிவாயிற்று. உணவு, உரம் என்பன போன்றவற்றிற்கான உதவித் தொகைகளை அரசாங்கங்கள் குறைக்க வேண்டியதாயிற்று; நிவாரண வேலைகளுக்குக் கிடைக்கக்கூடிய நிதிகள், சற்றும் போதியதாக அமையவில்லை. செயற்றிட்டப் போக்குச் சார்ந்த அந்நியக் கம்பனிகளின் அதிகரித்த செயற்பாடு, நுகரும் தன்மையை அதிகரிக்கச் செய்தது. இவை யாவும், வறியோர், மேன்மேலும் ஓரங்கட்டப்படுவதிலும் தீர்மானஞ் செய்யும் செயன்முறையில் அவர்கள் பங்குபற்றுவதை மேலும் வரையறுப்பதிலும் முடிந்தன.

**எனவே, இத்தொடர்பில், சமூகத்தின் வறிய, ஓரங்கட்டப்பட்ட பகுதியினர், தமது சீவியத்திற்காக, வரையறுக்கப்பட்ட தற்சார்புச் செயற்பாடுகளில் ஈடுபடுவதையும், அபிவிருத்திச் செயன்முறை தொடர்பான முடிவுகளில் அர்த்தமுள்ள வகையில் பங்குபற்றுவதையும் மேம்படுத்துவதாகவும் அவற்றிற்குதவுவதாகவும் அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களின் கடமைப்பங்கு அமைந்திருந்ததென்பதை நாம் விளங்கிக் கொள்ளலாம்.**

ஜனநாயகச் செயன்முறைகள் உகந்த விதத்திற் செயற்படுத்தப்படுதல் ஆரோக்கியமான சமூகத் தொடர்புகள், சுற்றுச் சூழல், போசாக்கு, வாழ்க்கை நிலைமைகள் என்பன தொடர்பான பேண்தகு அபிவிருத்தி, உறுதியான அரசியற் சூழல்கள், மீள் பகிர்வும் சமூக நீதியும் என்பவை தொடர்பாக, மக்கள் சுயேச்சையாகப் பங்குபற்றும் நிலைமை பலப்படுத்தப்பட வேண்டும் என்ற அனுபவத்தையே, இக்கடமைப் பங்கு பெற்றுள்ள விரிவடைந்துவரும் கணிப்பு அடிப்படையாகக் கொண்டுள்ளது.

## அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களில் ஊழல்?

**எனவே, அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களின் கடமைப் பங்கை நியாயப்படுத்துவதில் எவ்விதமான ஐயப்பாடும் இல்லை. இவற்றிற்கான ஓர் அவசியம் இருக்கின்றது. இத்தேவை, ஓரளவிற்கேனும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.** ஆனால், சிறந்த அ.சா.நிறுவனங்களும் மோசமான அ.சா. நிறுவனங்களும் சிரத்தையற்ற அ.சா.நிறுவனங்களும் காணப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான அ.சா.நி. உண்டு. இவற்றை உள்ளடக்கிய விபரத் திரட்டுக்கள் உண்டு; விபரங்களை இவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அத்துடன், மேலே

குறிப்பிடப்பட்ட, அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருக்களை, அ.சா.நிறுவனங்கள் விளங்கிக் கொள்தலிலும் அவற்றைச் செயற்படுத்துதல் பற்றிய அர்ப்பணிப்புத் தன்மையிலும் பரந்த மாறுபாடுகள் உண்டு.

அ.சா.நி. தொடர்பான ஊழல்கள், அல்லது தீய பாதிப்புக்கள், இவ்விடயங்களை மனத்திற் கொண்டே ஆராயப்பட வேண்டும். அ.சா.நி. பற்றிப் பொதுப்படையாக, தாறுமாறான கண்டனங்களைத் தெரிவிப்பது அர்த்தமற்றதொரு செயலாகும். ஏதாவதொரு விசேட பிரச்சினை, அல்லது நெருக்கடி நிலை காணப்படும் சந்தர்ப்பங்களில் குறிப்பாக, அது இனம், அல்லது சமாதானம் பற்றியதாக அமையும் போது, அ.சா.நிறுவனங்களுக்கெதிராக இடித்துரைக்கும் சில மக்கள் பிரிவினர் இருக்கின்றனர்; இத்தகைய செயன்முறையின் போது, பெரும்பாலும் மதங்களுக்கெதிரான சுலோகங்கள் எழுப்பப்படுகின்றன. இவற்றிற்கான குற்றச்சாட்டுக்கள் அ.சா.நிறுவனங்களின் மீது சுமத்தப்படுகின்றதுடன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், தேசிய நன்மை கருதி, அ.சா.நிறுவனங்களின் நடவடிக்கைகளை மட்டுப்படுத்தும் வகையிலும் சட்டங்களை அறிமுகப்படுத்தும்படி அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன.

**அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களில் பெருமளவு ஊழல் நிலவுகின்றதென்பது, ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.** இது ஒரு பாரதூரமான விஷயம். குறிப்பாக, வெளி நாடுகளிலிருந்து, மிகப்பெருந்தொகையான பணம், இவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ளது. இனி, இன்றைய சமுக நிலையைக் கொண்டு பார்க்கையில், ஊழல் எதிர்பார்க்கப்பட வேண்டியதொன்றென்பது துரதிர்ஷ்டமே. **ஆனால், நம் நாட்டு மக்களின் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் ஊழல் இருக்கின்றதென்பதும், இந்நிலை அ.சா.நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று கொள்வதற்கில்லை என்பதும் நினைவிற் கொள்ள வேண்டியதொன்றாகும்.** அரசாங்கத்தினுள்ளே, அமைச்சர்களுக்கிடையே, பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கிடையே, அரசாங்கத் திணைக்களங்களிலுள்ள அரசாங்க அலுவலர்களுக்கிடையே, பொதுவாக, சகல கட்சிகளையும் சேர்ந்த அரசியல்வாதிகளிடையே, தனியார் துறையிலும், சமய நிறுவனங்களிடையேயும் கூட ஊழல் பெருமளவில் நிலவுகின்றது. இந்நிலை நம் நாட்டிற்கு மட்டுமன்றி, ஏனைய குறை அபிவிருத்தி நாடுகளைப் போல, அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் பொதுவாகும். அண்மை ஆண்டுகளில் ஜப்பானியப் பிரதம மந்திரி மீது ஊழற் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. மிகப் பெருந்தொகையான பணம் இதிற் சம்பந்தப்பட்டிருந்தது. அவர் பதவி விலக வேண்டியேற்பட்டது. அவர் குற்றவாளி என்பது தெளிவாகியது. ஃபிலிப்பீன்ஸ் நாட்டின் ஜனாதிபதி ஃபேர்டினன்ட் மார்க்கோசும் கூட பெருந்தொகையான பணத்தைத் துஷ்பிரயோகஞ் செய்தமை தொடர்பாகக் குற்றவாளியென நிரூபிக்கப்பட்டு, பதவி நீக்கஞ் செய்யப்பட்டார். அடுத்து, ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி பில் கிளின்டனின் வாழ்வில் இடம்பெற்றுள்ள ஊழலின் அளவு, பகிரங்கமாக எடுத்துக்காட்டப்பட்டு, உலகம் முழுவதற்கும் தெரிய வந்துள்ளது. நமது நாட்டிலேயே பல உதாரணங்கள் இருக்கின்றன.

இவ்விஷயத்தைப் பூர்த்தி செய்யும் வகையில், போட்டி, புறங்கூறுதல், ஒற்றுமையீனம் என்றவாறு நமது சமுகத்திற் காணப்படும் காரணிகளினால், அ.சா.நிறுவனங்களில் இடம்பெறும் குறைபாடுகளையும் நாம் குறிப்பிட வேண்டும்! உதவி வழங்கும் முகவரகங்களிலிருந்து சலுகைகளைப் பெறுவதற்கான போட்டியே இதற்குப் பெரும்பாலும் காரணமாகின்றது! அபிவிருத்தி, நீதி, சமாதானம் என்ற பணிகளில், குடியியல் சமூகத்தினர் பங்காளராகவும், பகிர்ந்து கொள்வோராகவும் இருப்பதற்கு ஒற்றுமையும், ஐக்கியமும் அத்தியாவசியமாகவும் முக்கியமானதாகவும் இருப்பதால், மேலே குறிப்பிடப்பட்ட நிலைமை மிக்க துரதிஷ்டமானதொன்றே.

எனினும், மனித உரிமைகளுக்கானதும், சமாதானத்திற்கானதுமான பொதுவான செயல்கள் கருதி, ஒருமித்தியங்க வேண்டியதன் முக்கியத்துவம், நடைமுறையில் மேன்மேலும் உணரப்பட்டு வருகின்றது.

மிகப் பரந்தளவில் ஊழல் இடம்பெறுவதால், நாம் அது பற்றிப் பாராமுகமாக இருக்க வேண்டுமென்று நாம் கூறவில்லை. ஆனால், ஊழலை அழித்தொழிப்பதற்குப் பிரத்தியேகமானதொரு வழி, அல்லது இலகுவானதொரு குறுக்கு வழி இல்லை என்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டும். இத்தேவைகளுக்காக இயற்றப்பட்ட சட்டங்கள் நாட்டில் உண்டு. அ.சா.நிறுவனங்களில் ஊழல், அல்லது நிதித் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகள் இருந்தால், அவை நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, நாட்டின் சட்டங்களுக்கிணங்கக் கையாளப்பட வேண்டும். தற்பொழுதுள்ள ஒரேயொரு நியாயமான வழி இதுவே. பிரத்தியேகமான சட்டங்களும் பிரமாணங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு, இத்தகைய முறைப்பாடுகளை ஆராய்வதற்கு, அரசாங்கத்திற்கு விசேட அதிகாரங்கள் கொடுக்கப்பட்டால், நீதி சிதைந்து போகும் பேராபத்து உண்டு. இதன் பயனாக, அரசியற் காரணங்களினால் தூண்டப்பட்ட தீர்ப்புக்கள் வழங்கப்படுவதற்கும் கட்சி அடிப்படையிலமைந்த பாரபட்சங்கள் இடம்பெறுவதற்கும் வழி திறக்கப்படும். அ.சா.நி. மேற்கொள்ளும் நல்ல சிறப்பான பணிகளுக்கு, இது பாரதூரமான விதத்தில் தடைகளை ஏற்படுத்தும். விசேட சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட சில முயற்சிகளை நாம் குறிப்பிடுவோம். ஆனால், அதற்கு முன்னதாக, மற்றுமொரு முக்கிய அம்சத்தை நாம் கூறாது விடலாகாது. ஏனெனில், நம் எல்லோருக்குமான, மேலும் சிறந்த எதிர்காலம், அதன் மீதே உருவாக்கப்படலாம்.

**நோக்கு, கரிசனை, ஈடுபாடு**

நம்மைச் சுற்றி எங்கும் - அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களிலும் ஏனையவற்றிலும் - ஊழல் தாண்டவமாடுகின்ற போதிலும், நேராக நின்று, பொறுப்புடன் நடந்து கொள்வதற்காகத் துணிவு மிக்க முயற்சிகளில் ஈடுபடும் நோக்கு, கரிசனை, ஈடுபாடு என்பவற்றைக் கொண்டவர்களும் இருக்கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்வது மிக முக்கியமானதும் நியாயமானதுமாகும். அரசாங்க ஊழியர்கள், அல்லது தொழில்வாணர்கள், அல்லது அரசியற் கட்சிகளைச் சார்ந்தோர், அல்லது தொழிலாளர்கள், அல்லது விவசாயிகள், அல்லது வியாபார, அல்லது வர்த்தகத் துறைகளைச் சேர்ந்தோர் என்பவர்களிடையே காணப்படும் தனி ஆட்கள், பாதுகாப்புச்சேவை ஆளணியினர், உயர் நிறைவேற்றுப் பதவியாளர்கள், பணிப்பாளர்கள், ஓவியர்கள், கவிஞர்கள், வெகுசன ஊடகவியலாளர்கள் முதலியோர் தம்மால் இயன்றளவு சிறப்பாகத் தமது கடமைகளைச் செய்து, நாட்டிற்கும் மக்களுக்கும் பணியாற்றுகின்றனர். இத்தகையோர், பெரும்பாலும் பல்வேறு குழுக்கள், அமையங்கள், நிறுவனங்கள் என்பவற்றில் கூட்டாகச் சேர்கின்றனர். இவற்றுட் பல, அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்கள் எனப்படுகின்றன. பெருமளவிலான சீரழிவு, ஊழல், அறியாமை, மூட நம்பிக்கைகள் என்பவற்றின் மத்தியிலும் கூட ஆரோக்கியமான வாழ்க்கை நடத்தும், **பலம் பொருந்திய வளங்களெனக் கணிக்கத்தக்க மக்கள், இன்னமும் நம்மிடையே வாழ்கிறார்கள்.** உலகமயமாக்கம், திறந்த சந்தை, பல் தேசிய நிறுவனங்கள் - குறிப்பாக ஆயுத உற்பத்திக் கைத்தொழிற் கூட்டுத்தொகுதி - என்பவற்றை உள்ளடக்கிய நுகர்ச்சியாக்கத்தினாலும் பரந்துபட்டுள்ள வன்முறைக் கலாசாரத்தினாலும் ஏற்படும் சீரழிவை எதிர்த்து நிற்கும் மக்களிடம் சில ஆழ்ந்த காத்திரமான விழுமியங்கள் இன்னமும் நிலவுகின்றன.

**குறிப்பிட்டதொரு பணியை நேர்மையுடன் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வோர், எவ்விதத் தலையீடுமின்றி, அப்பணியைச் செய்வதற்கான சுதந்திரத்தைப் பெற்றிருத்தல்**

**வேண்டுமென்பது மிக முக்கியம்.** இது ஓர் அடிப்படை உரிமையாகும். இவ்வமையங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகள், கண்டிப்பாகத் தேர்வுக்குரியனவாக இருக்கும் என்பதுடன், நியாயமற்றனவாகவும் இருக்கக்கூடும். இவை, இவ்வமையங்களின் இயல்பான செயற்பாட்டைப் பாரதூரமான விதத்தில் தடைசெய்வதாகவும் அமையலாம். உதவி வழங்கும் வெளி நாட்டு நிறுவனங்களும் அரசாங்கத் தலையீட்டை எதிர்க்கும்; கட்டுப்பாடின்றி நாட்டிற்குள் நிதி வந்தடைவதற்கும் இது தடையாக இருக்கும். அரசாங்கத்தினூடாக இயங்குவதில் பல்வேறு கஷ்டங்களையும் அனுபவித்தமையினாலேயே, வெளி நாட்டு உதவி வழங்கும் முகவரகங்கள், அரசாங்கத்தினூடாகச் செயற்படாது, அ.சா.நிறுவனங்களினூடாகச் செயற்படுவதற்கு விரும்புகின்றமைக்கு ஒரு காரணமாகும். எனினும், மிகக் கணிசமான அளவிலும் மிகப் பெரிய அளவிலும் நிதி இன்னமும் கூட அரசாங்கங்களினூடாகவே பாய்கின்றது.

## பொதுசன அபிப்பிராயம்

மேலே கூறப்பட்ட கருத்துக்களை நாம் வலியுறுத்துவதனால், எத்தகைய வெளி நாட்டுச் செல்வாக்கும் வெளிநாட்டுச் செல்வாக்கின் ஒவ்வொரு அம்சமும் நன்றென்று நாம் நினைப்பதாகவோ, இவற்றின் தீய தாக்கங்களை நாம் கவனத்திற் கொள்ளவில்லையென்றோ, இவற்றை எதிர்ப்பதற்கு எதுவும் செய்யப்படலாகாதென்றோ, எதுவும் செய்யப்பட முடியாதென்றோ நாம் கருதுவதாக அர்த்தம் செய்யலாகாது.

ஊழல், நிதிகளைத் தவறாகப் பயன்படுத்துதல், சுதந்திரம், சுதேச விழுமியங்கள், வெளி நாட்டுத் தலையீடு, ஏறுவரிசையிலமைந்த ஆதிக்கம், ஜனநாயக அடிப்படையில் இயங்குதல், பொறுப்புக் கூற வேண்டிய நிலை, சுய விமர்சனம், பரஸ்பர விமர்சனம், பொறுப்புள்ள வெகுசன ஊடகங்கள் அம்பலப்படுத்துதல் முதலியன தொடர்பாக **ஆரோக்கியமான பொது அபிப்பிராயம் விருத்தியடைவது அவசியமாகும்** என்பதே, அடிப்படையில் நமது நிலைப்பாடாகும்.

இவை தொடர்பாகத் தரங்களை நிறுவுவதிலும் அவற்றைப் பின்பற்றுவதிலும், அ.சா.நிறுவனங்களும் அரசாங்கமும் வெளி நாட்டு முகவரகங்களும் ஒத்துழைக்க வேண்டும். பெரிதும் வேறுபட்ட வகையினவான வெளி நாட்டு முகவரகங்கள் இருப்பது போன்று, அவை கொண்டுள்ள தரங்களும் பெருமளவில் வேறுபட்டனவாகும். இவற்றுட் சில, முதலாளித்துவ உலகின் ஆதிக்கத்தைப் பராமரிக்கும் வகையில் சமூகத்தின் மாறா நிலையைப் பேணுவதில், அல்லது பலப்படுத்துவதிலேயே பிரதானமாக அக்கறை கொண்டுள்ளன. ஏனையவை, ஏழைகளுக்கு உதவக்கூடிய சமூக மாற்றங்களில் அக்கறையும் ஈடுபாடும் கொண்டனவாகக் காணப்படுகின்றன. இதே போன்று, பெரிதும் வேறுபட்ட வகையினவான அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களும் உண்டு. அ.சா.நி. தாம் மற்றோரால் கணிக்கப்பட வேண்டுமென்று எண்ணினால், உகந்த தராதரங்களை நிறுவுவதற்கு முனைய வேண்டும். அரசாங்கம், தனது அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றின் வேலைகள் தொடர்பாக ஒரு முன்மாதிரியாக அமைய வேண்டும். இவ்விடயங்கள் யாவும் ஒன்றுடனொன்று தொடர்புற்றவை. அரசாங்க நிலையங்களே ஒழுங்காக இயங்காத பட்சத்தில், அது, அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களை எவ்வாறு சீர்திருத்த முடியும்? **ஓர் ஆரோக்கியமான பொது அபிப்பிராயத்தின் செயற்பாட்டினூடாகவே**, பல்வேறு நிறுவனங்களும் அவ்வவற்றின் சட்டதிட்டங்களுக்கமைய ஊழல், நிதித் துஷ்பிரயோகம் என்பன போன்றவற்றை எடுத்தாள முடியும்; அவசியப்பட்டால், அவற்றை நீதிமன்றங்களுக்கும் எடுத்துச் செல்ல முடியும்.

அரசாங்கத்தின் மிகப் பிரதான நிறுவனங்களுள் ஒன்றான இலஞ்ச ஊழல் ஆணையத்தின் தற்போதைய நிலையானது, நிலைமையைத் தெளிவாக எடுத்துக்காட்டும் சிறந்ததோர்

உதாரணமாக அமைகின்றது. இன்றைய அரசாங்கம், ஊழலை ஒழித்துக் கட்டுவதாக வாக்குறுதியளித்தது. ஆனால், இவ்வரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததும், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் (இது பெருமளவு ஆரவாரத்திற்கு மத்தியில் அமைக்கப்பட்டது) பணியை ஊக்குவித்துச் செயற்பட உதவுவதற்குப் பதிலாக, ஏறத்தாழ, இதற்கு எதிர்மாறாகவே நடந்து கொண்டுள்ளது. இலஞ்ச ஊழல் ஆணையாளர் ஒருவருக்கான வெற்றிடத்தை அது நிரப்பவில்லை. அத்துடன், பதில் அலுவலர்களை நியமிக்காமல், திணைக்களத்தைச் சேர்ந்த பல அலுவலர்களை இடமாற்றஞ் செய்தது. இதன் மூலம் ஆணையம் செயற்படுவதைப் உறுதியான முறையில் தடுத்தது. பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியிருந்த ஊழல் சம்பந்தப்பட்ட பல சம்பவங்கள், அவர்களுடைய ஆட்களுக்கெதிரானவையாக இருந்தமையே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று உய்த்துணர வேண்டியுள்ளது. எனவே, அரசாங்கம் தனது ஆட்களைப் பாதுகாக்கின்றதென்றே எண்ணத் தோன்றுகின்றது. ஆணையம் பாரபட்சமாக இருப்பதாகவும் அது மீளமைக்கப்பட வேண்டும் என்பதும் அரசாங்கத்தின் கருத்துப் போல் தெரிகின்றது. இன்றைய நிலையில் சட்ட அமுலாக்கம் எவ்வளவு சிக்கார்ந்ததொரு விடயமாக இருக்கின்றது என்பதை இது தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. பொது உரையாடல்கள், ஊடகங்களினூடாக வெளியிடப்படும் கருத்துக்கள் என்பவற்றின் உதவியுடனும், தேவைப்படின், எதிர்ப்பு ஊர்வலங்கள் என்பன போன்றவற்றின் உதவியுடனும் இத்தகைய விடயங்கள் ஆராயப்பட வேண்டும். இது ஓரளவு இடம்பெறுகின்றதெனலாம்.

அ.சா.நிறுவனங்களின் செயற்பாடுகளைப் பொறுத்தளவில், இரண்டு காரணிகள் மேலெழுந்து நிற்கின்றன. மக்களுட் சில பகுதியினர், அ.சா.நி. தமது நிதியை, முதலில், மதம் மாற்றும் முயற்சியை ஊக்குவிப்பதற்காகக் கிறிஸ்தவ மதத்திற்கும் இரண்டாவதாக, தனி நாடு கோரி விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதற்கும் பயன்படுத்துகின்றனவென்று குற்றஞ் சாட்டுகின்றது. சில சமயங்களில் இவ்விடயங்கள் தொடர்பாக உணர்ச்சி வேகம் அதிகரித்து, மக்கள் தூண்டப்படுகிறார்கள். அரசாங்கம் தலையிட்டு, தடுத்துக் கட்டுப்படுத்த வேண்டுமென்று கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. அரசாங்கம் பயப்பட்டு, அடக்குமுறைச் சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்கும் போக்கைக் காணலாம்.

அ.சா.நிறுவனங்களுக்கெதிராகக் குற்றச்சாட்டுக்களைத் தாறுமாறாகச் செய்வதிலுள்ள அநியாயமே இந்த இரண்டு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் வலியுறுத்தப்பட வேண்டிய முதல் விடயமாகும். ஏனெனில், முன்னர் சுட்டிக்காட்டப்பட்டது போல, மிகப் பெருந்தொகையான அ.சா.நி. இருப்பது போலவே புரிந்துணர்வு, மனப்பான்மை, ஈடுபாடு என்பன தொடர்பாகவும் அத்தனை பெரிய பல்வகைமை உண்டு.

## நீதிநெறி பிறழ்ந்த மதமாற்றங்கள்?

எப்படியிருப்பினும், நீதிநெறி பிறழ்ந்த மதமாற்றங்கள், அதாவது, மதம் மாறும்படி தூண்டுவதற்குப் பணம், அல்லது ஏனைய தவறான நெருக்குதல்களைப் பிரயோகித்தல் பிழை என்பது தெளிவு. எவ்விதத் தயக்கமுமின்றி இது கண்டிக்கப்பட வேண்டும்.

ஆனால், இது பற்றி ஆராயும் போது, தனது சமயத்தை மதிக்கும் - அதாவது, இறுதிப் பெறுமானம் பற்றியும் அதன் நடைமுறைப் பெறுமானம் பற்றியும் திடமான நம்பிக்கையுள்ள - எந்த ஒருவரும் அதை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ள விரும்புவார் என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். **அவருடைய இந்த உரிமையை எவரும் மறுக்க முடியாது.**

ஒருவர், தனது சமயத்தைப் பரப்புவதற்குக் கொண்டிருக்கும் உரிமை மனித உரிமைகளுள் ஒன்றாகும் என்பதும் மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தில் (உறுப்புரை 18) இடம்பெற்றுள்ள இது, சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றென்பதும் கவனிக்கப்பட வேண்டும். அத்துடன், தனது சமயத்தை மாற்றிக் கொண்டு மற்றொரு சமயத்தின் உண்மையை உணர்ந்து, அதை ஏற்றுக்கொள்ளும் உரிமையும் வயது வந்த ஒருவருக்குண்டு. **இதுவும் ஓர் அடிப்படை உரிமையே (உறுப்புரை 18).**

எப்படியிருப்பினும், இது தொடர்பாக மக்களுக்குள்ள உரிமையை ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில், அத்தகையோர், மற்றவர்களின் உரிமைகளுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கொடுத்த பின்னரே, தாம் இவ்வுரிமைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பது தெளிவாக எடுத்துக் கூறப்பட வேண்டும். ஒருவர் தனது திட நம்பிக்கைகளை மற்றொருவருக்கு எடுத்துக்கூறும் பொழுது, அவர், மற்றவர் மீது, எவ்விதமான தகாத நெருக்குதல்களையும் பிரயோகிக்காது அதைச் செய்ய வேண்டு என்பதில் மிகக் கவனமாக இருத்தல் வேண்டும்.

அறநெறி பிறழ்ந்த மத மாற்றம் என்பது ஏகாதிபத்திய காலத்தில் சகஜமாக இடம்பெற்றதொன்றாகும். நேரடியான உடல்ரீதியான கட்டாயப்படுத்தல், அல்லது வன்செயல்கள் என்பன மத மாற்றம் தொடர்பாகப் பிரயோகிக்கப்பட்டமை ஒருபுறமிருக்க, ஏகாதிபத்தியவாதிகளின் மதமாகிய கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுவதனால், பெறப்படக்கூடிய நன்மைகளும் இருந்தன. எனினும், ஆசியாவில், ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டோரின் மொத்தத் தொகை, சராசரியாக, 3 சதவீதமாகும். 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றதுடன், சக்கரம், மறு திசையில் சுழலத் தொடங்கியது. அத்தருணத்தில் கிறிஸ்தவராக இருப்பது பிரதிகூலமாக அமைந்தது. 1948இல் சனத்தொகையில் பத்து சதவீதமாக இருந்த கிறிஸ்தவர்களின் தொகை இன்று ஏழு சதவீதமாகக் குறைந்துவிட்டது. பின்னர், 1980களில், அடிப்படைவாதக் குழுக்கள் பெற்ற வெளி நாட்டு நிதியுதவியுடனும் அவற்றின் சமூகசேவைச் செயற்பாடுகளுடனும் கிறிஸ்தவ மதத்திற்கு, நீதிநெறி பிறழ்ந்த வகையில் மதம் மாற்றுதல் மீண்டும் இடம்பெறலாயிற்று. இவ்வாறு மதம் மாறியவர்களின் தொகை மிகச் சிறியதாகும். சில மக்கட் பகுதியினர் இதற்கெதிராகக் கோஷம் எழுப்பினர். உதாரணமாக, 'வெற்றி' (Success) எனப்பட்ட ஓர் அமையம், இதை எதிர்த்துப் போராடுவதற்காக நிறுவப்பட்டது. அரசாங்கம், பெரும் பீதியுடன், தடுத்துக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மீண்டும் மேற்கொள்ளத் தொடங்கியது. இது, எவ்விதத்திலும் சுலபமானதொரு விடயமல்ல. 'நீதிநெறி பிறழ்ந்த மதமாற்றங்'களுக்கெதிரான கோஷமும் எதிர்ப்புக்களும் ஊடகத் துறையில், இது பற்றிய ஒரு பொது ஆய்வுக்கு வழி வகுத்தமை, இந்நிலைமையில், நாம் அவதானிக்க வேண்டிய பிரதான அம்சமாகும். நீதிநெறி பிறழ்ந்த மதமாற்றங்களைக் கண்டித்து அச்சுலகிற்குக் கடிதங்கள் வந்து குவிந்தன. இதன் விளைவாக, இத்தகைய நடவடிக்கைகளைக் கண்டித்துத் தேவாலயக் குழுக்கள் முக்கியமான அறிவிப்புக்களை விடுத்தன. முதலில், பழைய, மரபுரீதியான தேவாலயங்கள், இத்தகைய செயற்பாடுகளைக் கண்டித்து, இது பற்றிய தமது கொள்கையைத் தெளிவுபடுத்தி, கடுமையான பொது அறிக்கைகளை வெளியிட்டன. அவை, விடயத்தைத் தெளிவுபடுத்திய, சமயோசிதமான சிறந்த அறிக்கைகளாகும். முதலில், தமது செயல்களை நியாயப்படுத்துவதில் மட்டும் அக்கறை செலுத்திய சில அடிப்படைவாதக் குழுக்களும் அமையங்களும் பின்னர், தமது நிலைப்பாடு நீதிநெறி பிறழ்ந்த மதமாற்றத்திற்கெதிரானது என்று கூறின. காலத்திற்குக் காலம் சில கருத்து வேற்றுமைகள் ஏற்பட்ட போதிலும், பௌத்த சமயம், இந்து சமயம், இஸ்லாம், கிறிஸ்தவ சமயம் என்ற முக்கிய மதங்களைச் சேர்ந்த மக்கள், ஓரளவு இசைவிணக்கத்துடன் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்துள்ள, நம்முடைய நாடு போன்ற முதிர்ச்சியடைந்த ஒரு நாட்டில், இவ்விதமாகவே இத்தகைய விடயங்கள் கையாளப்பட வேண்டும். அரசாங்கம் நேரடி

நடவடிக்கையில் இறங்க முயற்சி செய்தால், அது சமயக் கொடுமைப்பாட்டில், அல்லது அரசியற் பழிவாங்கலில் கூட சென்று முடியும் போக்கைப் பெறலாம்.

## சுட்டிகளை மாற்றுதல்

தமது சொந்த சமயத்தில் தீவிர நம்பிக்கை கொண்டவர்களிடையேயும் அதில் ஈடுபாடு கொண்டவர்களிடையேயும் கூட, சமயம் மாறுவது பற்றிய - அல்லது 'சுட்டிகளை மாற்றுதல்' என்றும் கூறுவார்கள் - மனப்பாங்குகளில் வித்தியாசங்கள் உண்டென்பதும் கவனிக்கப்பட வேண்டும். தமது சமயத்தை மற்றவரிடையே 'பரப்புதல்' அல்லது 'விளக்கு'தல் பற்றிய உரிமையில் தீவிர கரிசனை வைத்து, உண்மையான திட நம்பிக்கை ஏற்பட்டால், சமயத்தை மாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் சிலர் இருக்கின்றனர். **எனினும், வித்தியாசமான சமயங்களைச் சேர்ந்தவர்கள், ஒருவரிடமிருந்தொருவர் கற்கலாமென்றும் ஒருவருக்கு மற்றொருவர் கற்பிக்கலாமென்றும் 'சுட்டிகளை' மாற்ற வேண்டிய அவசியமில்லை என்றும் ஏனையோர் நம்புகின்றனர். பின்னைய கருத்து, கூடியளவு முதிர்ச்சியைக் காட்டுகின்றதென்று நாம் நம்புகின்றோம்.** உதாரணமாக, நமது அமையத்தில், நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம்/ இலங்கைக் குழு, சகல சமயங்களையும், சித்தாந்தங்கள் அல்லது தத்துவங்களையும் பின்பற்றுபவர்கள் மிக நெருக்கமாக வேலை செய்கிறார்கள். நம்மிடையே, அல்லது நாம் கூடி வேலை செய்வோரிடையே, என்றுமே சமயம் மாறுவது பற்றிய வினா எழுந்ததில்லை. **ஆனால், மற்றவர்களது உரிமைகளுக்கும் திட நம்பிக்கைகளுக்கும் மரியாதை கொடுக்கும் அதே வேளையில், தத்தமது திட நம்பிக்கைகளுக்கிணங்க நடந்துகொள்ளும் சுதந்திரம் மக்களுக்கிருத்தல் வேண்டும்.**

மதம் மாற்றுவதில், 'சமயத்தைப் பரப்பும் வெறி, ஆர்வம்' கிறிஸ்தவர்களிடையே - சில கிறிஸ்தவர்கள் - மட்டும் காணப்படுமொன்றல்ல என்பதை நாம் இங்கு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். 'சமயத்தைப் பரப்பும் வெறி, ஆர்வம்' கொண்ட சில பௌத்தர்களும் இருக்கிறார்கள். பௌத்த சமயத்திற்கு மதம் மாற்றும் நோக்கத்துடன், பௌத்த தர்மத்தை மற்றவர்களுக்குப் போதிப்பதற்காகச் சமயத்தைப் பரப்பும் குழுக்களை ஒழுங்குபடுத்தி, வெளி நாடுகளுக்கு அனுப்பும் சில பௌத்தர்களும் இருக்கிறார்கள்.

கிறிஸ்தவ அமையங்கள் மட்டுமே வெளி நாடுகளிலிருந்து உதவி பெறுகின்றன என்று கொள்வது தவறென்பதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளப்பட வேண்டும். சர்வோதய நிறுவனம், தனது உச்ச கட்டத்தில், அதாவது 90களின் ஆரம்ப ஆண்டுகளில், ஏறத்தாழ 4000 முழு நேர ஊழியர்களையும் 250இற்கும் மேற்பட்ட வாகனங்களையும் கொண்டிருந்ததுடன், ஏறத்தாழ 600 கிராமங்களில் தனது பணிகளை மேற்கொண்டது. இந்நிறுவனம், தான் பெற்ற வெளி நாட்டு உதவிகளுள், ஏறத்தாழ முழுவதையும் உதவி நல்கும் கிறிஸ்தவ முகவர்களிடமிருந்தும் மேற்கு நாட்டு அரசாங்கங்களுடன் தொடர்புற்ற உதவி நல்கும் முகவர்கிளடமிருந்துமே பெற்றுக் கொண்டது. இஸ்லாமிய மூலங்களிலிருந்தும் தமிழ் (இந்து) மூலங்களிலிருந்தும் இலங்கை அதிக உதவிகளைப் பெறுகின்றது.

## பங்காளிகள் இணைந்தியங்குதலும் வளங்களைப் பகிர்தலும்

மதம் பரப்பும் குழு, சீடனாயிருத்தல், மாற்றம், மதமாற்றம் என்பன போன்ற எண்ணக்கருக்களின் கருத்தை, மேலும் பரந்த, ஆழ்ந்த அடிப்படையில் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். மிக நீண்ட காலமாக ஒருமித்து வாழ்ந்து, கூடிக் கலந்துரையாடி வந்ததன் பயனாக, இத்தகைய விளக்கம் உண்மையில் மேன்மேலும் யதார்த்த நிலையை அடைகின்றது. மதக் கோட்பாடுசார்

நோக்கிற் பார்த்தால், உண்மையில், விவிலிய நூலில், ஒரு சில சந்தர்ப்பங்களில் மட்டுமே மதமாற்றம் என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவையும் கூட, பெரும்பாலும் மனமாற்றத்தையும் உளமாற்றத்தையும் குறிக்கின்றனவேயன்றி, ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறுவததைக் குறிக்கவில்லை. **மேலும், சமயம் அல்லது சித்தாந்தம் (அல்லது தத்துவம்) எதுவாகவிருந்தாலும், 'மதமாற்றம்' என்பது, அதன் மிக ஆழ்ந்த கருத்தில், ஒருவருடைய இயல்பு, வாழ்க்கை என்பவற்றிலேற்படும் முற்றுமுழுதான தன்மை மாற்றத்தையே குறிக்கின்றது.** இது அன்பினூடாக எய்தப்படுவதுடன், இது, அடிப்படையில், ஆரோக்கியமான உறவுகளை விருத்தி செய்வதையும் முழுமையான மனிதத்துவம், நீதி, சமாதானம் என்பவற்றை எய்துவதற்கான போராட்டத்தில், மற்றவர்களுடன் கூடி நின்று ஒத்துழைப்பதையும் உள்ளடக்குகின்றது. இது 'சுட்டிகளை மாற்றுதல்' பற்றிய விடயமல்ல. **இன்றைய தெளிவான முந்துரிமை, ஒரு சமயம், அல்லது சித்தாந்தம் (அல்லது தத்துவம்) என்பதிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுவதல்ல. ஆனால், சகல மதங்களையும் சித்தாந்தங்களையும் (அல்லது தத்துவங்களையும்) அவ்வவற்றின் பாரம்பரியத்தின் உன்னத நிலைக்கு மாற்றுவதும் சகலரையும் அறியாமையிலிருந்து உண்மையை அறிந்து கொள்ளும் நிலைக்கும் தீமையிலிருந்து நன்மைக்கும் ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்து விடுதலைக்கும் வெறுப்பிலிருந்து அன்பிற்கும் போரிலிருந்து சமாதானத்திற்கும் மாற்றுவதுமாகும். அத்தகையதொரு விளக்கத்தைப் பெறுவதற்குப் பிரதான ஆய்வுப் பொருளாக, அல்லது சுலோகமாக அமையக்கூடியது, பங்காளிகள் இணைந்தியங்குதலும் வளங்களைப் பகிர்தலுமாகும்.** நமக்குத் தேவைப்படுவது, போட்டியும் பிரிவினையுமல்ல; பங்காளிகள் இணைந்தியங்குதலும், வளங்களைப் பகிர்தலுமாகும். மதங்களும், சித்தாந்தங்களும் (அல்லது தத்துவங்களும்) தொடர்ந்து போட்டியிடும் வரை போர் இருந்து கொண்டேயிருக்கும். ஆனால், சமயங்களும், சித்தாந்தங்களும் (அல்லது தத்துவங்களும்), பங்காளிகளாக இணைந்தியங்குவதிலும், வளங்களைப் பகிர்வதிலும் ஒன்று கூடினால், அங்கே சமாதானம் நிலவும்.

## நோக்கங்கள்

அடுத்ததாக நாம் ஆராயவிருக்கும் 'பிரிவினைவாதம்' தொடர்பாகப் பொருத்தப்பாடிருப்பதால், முன்னர் இரு தடவைகள் நாம் குறிப்பிட்ட நோக்கங்கள், அல்லது குறிக்கோள்கள் பற்றிய விடயத்தை மீண்டும் கவனத்திற் கொள்வோம். பெரும்பாலான வெளி நாட்டு உதவி முகரவகங்களும் உதவி பெறும் அ.சா. நிறுவனங்களும் 'சமூக செயல்' என்பதை விட, 'சமூக சேவை' என்பதிலேயே கரிசனை கொண்டுள்ளன. இது தொடர்பாகப் பேராசிரியர்கள் ரிசர்ட் கேம்பிரிட்ஜ், கணநாத் ஒபேசேகர என்போரால் எழுதப்பட்ட 'இயல்பு மாற்றம் பெற்ற பௌத்தம்' (Buddhism Transformed) என்ற நூலைக் குறிப்பிடுவது பயனுடையதாகும். இதில், சர்வோதய பற்றிய ஓரளவு விரிவான ஆய்வு இடம்பெற்றுள்ளது. இதிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி பின்வருமாறு: (பக்கம் 247)

> "சர்வோதய நிறுவனத்தின் சித்தாந்தத்தின் பெரும் பகுதி, விவசாய வர்க்கத்தைப் பற்றியதோ, பௌத்த மதக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதோவல்ல. ஆனால், அநகாரிக தர்மபாலவின் சீர்திருத்தங்களின் செல்வாக்கிற்குட்பட்டு, வர்க்க அக்கறைகளையும், சிங்கள, பௌத்த நடுத்தர வர்க்கத்தினரின் சித்தாந்தக் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது."

50களின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட சர்வோதய நிறுவனத்தின் வரலாற்றுக் காலத்தின் பெரும் பகுதியில் அது விவசாய வர்க்கத்தின் மீதோ, தொழிலாளி வர்க்கத்தின் மீதோ, மனித

உரிமைகளுக்கான மறியல்களின் மீதோ, சிறுபான்மையோரின் உரிமைகளுக்கான கிளர்ச்சிகளிலோ அக்கறை கொண்டதில்லை. ஆனால், அது, திடமான, பரந்த அளவிலான சமூக சேவையில் ஈடுபட்டு, சர்வதேசப் புகழீட்டியது. பல வருடங்களுக்கு முன்பு இதன் தலைவரான ஏ.டி.ஆரியரத்ன, உயர் மட்ட, ஆசிய ரமோன் மக்ஸேஸே விருதையும் அண்மையில், மதிப்பு மிக்க, காந்தி சமாதான விருதையும் இவற்றிற்கிடையில் வேறு பல விருதுகளையும் பெற்றார். ஒப்பீட்டடிப்படையில், சற்று அண்மைக் காலத்தில், மிகத் துரிதமாகச் சீரழிந்துவரும் தேசிய நிலைமை, சமாதானத்திற்காகப் பாடுபட வேண்டியதன் அவசியத்தை சர்வோதயவிற்கு உணர்த்தியதால், அது, இத்துறையிலும் தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வருகின்றது.

சர்வோதயவின் உதாரணத்தை முன்மாதிரியாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட, அல்லது தனிப்பட்ட முறையில் ஆரம்பிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான அமையங்கள் உள்ளன. இவை, அ.சா.அமையங்களாக் இருந்தாலோ, இல்லாவிட்டாலோ சமூக சேவையில் ஈடுபட்டுள்ளன. இவற்றுட் பெருந்தொகையானவை, வெளி நாட்டு உதவிகளைப் பெறுகின்றன. இவற்றுட் சிலவோ, பலவோ தமது நடவடிக்கைகளைக் காட்டி, தமக்கெனப் பணம் சம்பாதித்துக்கொள்கின்றன; அல்லது, தனிப்பட்டரீதியில் பணம் சம்பாதிக்கக்கூடிய பல்வேறு சமூகசேவைப் போர்வைகளும் உண்டு! நமது சமூகம், முடியிலிருந்து அடி வரை ஊழல்களுக்காட்பட்டிருப்பதால், மிகச் சிறந்தவை என்று கருதப்படக்கூடிய அ.சா.நி. கூட, இத்தொற்று நோயிலிருந்து, முற்றாகத் தப்பிப் பிழைத்துச் செயற்படுகின்றன என்று திடமாகச் சொல்ல முடியாதிருக்கின்றது.

இனி, மறு புறம், சமூக சேவையை விட, அதிக அளவில் சமூகம்சார் செயல்கள், சமூக மாற்றங்கள் என்பன சார்ந்த அ.சா.நி. காணப்பட்டன. தீவிரமான சமூக சேவை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பல்வேறு செயற்றிட்டங்களுக்கெனப் பெருமளவு பணம் வந்து குவிந்த போதிலும் மக்களின் வறுமை நிலையிலோ, அதிகரித்துச் செல்லும் ஏழ்மை நிலையிலோ அடிப்படையில் எவ்விதத் தாக்கமும் ஏற்படவில்லை என்பதையும் அதனால், முழுமையான அபிவிருத்திச் செயன்முறையைப் பற்றி மேலும் ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினர் என்பதையும் முன்னர் விபரித்துள்ளோம். அபிவிருத்தி பற்றிய நான்கு வரைவிலக்கணங்களை, அல்லது மாதிரிகளை நாம் முன்னர் குறிப்பிட்டோம். இவற்றுள் ஒன்று ஈ.எஸ்.ஷுமாக்கரின் 'Small is Beautiful' என்ற பௌத்த மூலத்திலிருந்து பெறப்பட்டது. மற்றைய மூன்றும் கிறிஸ்தவ மூலங்களிலிருந்து பெறப்பட்டவை. ஆனால், இவ்வரைவிலக்கணங்கள், அல்லது மாதிரிகள் சகல மதங்களையும் சித்தாந்தங்களையும் பின்பற்றும் மக்களுக்கும் பொருந்துவனவாகவும் அவர்களுடன் தொடர்புடையனவாகவும் உள்ளன. உண்மையான அபிவிருத்தியில் ஆர்வம் கொண்டவர்கள், போராட்டம், நீதி, விடுதலை, சமாதானம் என்பன போன்ற எண்ணக்கருக்களிலும் கரிசனை கொள்ள வேண்டியதன் அவசியத்தை இவ்வரைவிலக்கணங்களும் மாதிரிகளும் எடுத்துக் காட்டியுள்ளன. எனவே, இத்தகைய நோக்கங்களை மனத்திற் கொண்டு, சகல மதங்களைச் சேர்ந்தவர்களும் ஒருங்கிணைந்துள்ள அ.சா.நி. இலங்கையில் காணப்படுகின்றன. தேவசரண அபிவிருத்தி மையம் (Devasarana Development Centre), கிறிஸ்தவப் பணியாளர் தோழமைக் கழகம் (Christian Workers Fellowship), சத்தியோதய (Satyodaya), சமூகத்திற்கும் சமயத்திற்குமான மையம் (Centre for Society and Religion), துலன (Tulana), ஆய்வுக்கும் உரையாடலுக்குமான கிறிஸ்தவ உலக முழுமை நிறுவகம் (Ecumenical Institute for Study and Dialogue), குடியியல் உரிமைகள் இயக்கம் (Civil Rights Movement), இனங்களிடையே நீதி, சமத்துவம் என்பவற்றுக்கான இயக்கம் (Movement for Inter Racial Justice and Equality), ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் (Movement for Defence of Democratic Rights), மக்கள் விளக்க மையம் (Janavabodha Kendraya), சமூக விஞ்ஞானிகள் சங்கம் (Social Scientists Association), தேசிய நில, விவசாய சீர்திருத்தத்திற்கான இயக்கம் (Movement for

National Land and Agricultural Reform), இலங்கையில நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம் (World Soliderity Forum for Justice and Peace in Sri Lanka), இலங்கையின் அன்னையரும், புதல்வியரும் (Mothers and Daughters of Lanka), மகளிர் விருத்தி மன்றம் (Women's Development Foundation), மகளிர் கல்வி, ஆராய்ச்சி மையம் (Women's Education and Research Center), மகளிர், ஊடக இயக்கம் (Women and Media Movement) என்பன இவற்றுட் சிலவாகும். இவற்றுட் பல, வெளி நாட்டு உதவி முகவரகங்களுடன் பங்குடைமை கொண்டவையாக இருந்தன. மேலே தரப்பட்ட அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருக்களை இவ்வமையங்கள் அனைத்தும் ஒரே அளவில் ஏற்றுக் கொண்டவை அல்ல. இவை, தத்தமது நிலைப்பாடுகளிலும் ஈடுபாடுகளிலும் வித்தியாசப்படுகின்றன. இவை போன்ற எண்ணிறந்த நல்ல, கெட்ட, கருத்தற்ற அமையங்களும் இருக்கின்றன. இடமின்மை காரணமாக இவற்றைக் குறிப்பிட முடியவில்லை. இவ்வமையங்கள் தொகையில் நிலையாகப் பெருகும் போக்கைக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, குறிப்பாக, சமாதானத்துறையில் நீ.ச.இ.உ.ஒ. (இ.கி.), 1990இல் முதலாவதாகும். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், தேசிய சமாதான சபை (National Peace Council) நிறுவப்பட்டது. இது குடை வகையான அமையம் ஒன்றை விருத்தி செய்வதற்கு முயன்றது. இதற்குச் சற்றுப் பின்னர், மகாவலி மையத்தில் கருத்தமர்வொன்றை ஒழுங்கு செய்ததுடன், சூரியமல் சமாதான மன்றம் உருவானது. பின்னர், பொது நூலக மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கருத்தரங்குடன் இந்த இரண்டும், சமாதானத்திற்கான தேசிய முன்னணி (The Naional Alliance for Peace) என்ற அமைப்பாக ஒன்றிணைந்தன. இது, தான், ஏறத்தாழ நூறு சமாதான அமையங்களையும் சமாதானத்துடன் தொடர்புற்ற அமையங்களையும் ஒன்றிணைத்ததாகக் கூறிற்று. இதன் பின்னர், அண்மைக் காலத்தில், ஓர் ஊர்வலத்தையும் விகாரமகாதேவி பூங்காவில் ஒரு பொதுக் கூட்த்தையும் நடத்தியதன் மூலம் மக்கள் சமாதான முன்னணி (People's Peace Front) உருவாகியது. இதற்கு முன் இருந்த சமாதான, சமாதானத்துடன் தொடர்புற்ற பெருந்தொகையான அமையங்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்கு இது முயன்றது.

## பிரிவினைவாதம்?

நாட்டைப் பிரிப்பதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்தும் போராட்டத்தை ஆதரிப்பதாக, அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களுக்கெதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்குப் போதிய அளவு பின்னணி நம்மிடம் இப்பொழுது உண்டு. அ.சா.நிறுவனங்களுக்கெதிராக எழுப்பப்படும் கண்மூடித்தனமான குற்றச்சாட்டுக்கள், அல்லது அ.சா.நிறுவனங்களுக்கெதிராகப் பொதுவாகச் எழுப்பப்படும் தெளிவற்ற குற்றச்சாட்டுக்களுக்கு அர்த்தமில்லையென்பதும் அவை நியாயப்படுத்தப்பட முடியாதவை என்பதும் மேலும் தெளிவாகின்றது. உண்மையாகச் சொல்லப் போனால், இனப்பிரச்சினைகள், சமாதான நடவடிக்கைகள் என்ற எதிலுமே ஈடுபடாமல், பல்வேறு விதமான சாதாரண சமூக சேவையிலும் மனிதாபிமான நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள பெருந்தொகையான அ.சா.நி. இருக்கின்றன. சமூகத்தின் மேலும் ஆழ்ந்த பிரச்சினைகளில் கரிசனை கொண்டு, இங்கு நிறுவப்பட்ட அ.சா.அ. பல, 'அபிவிருத்தி' என்ற பதத்தின் கீழ் ஆராயப்பட்டன. முன்னர் கூறியது போல, இவை 1960 - 70, 1970 - 80 ஆகிய, ஐ.நா.அபிவிருத்தித் தசாப்தங்கள் இரண்டின் போதும் நடைமுறைக்கு வந்தன. இவை பல்வேறு அ.சா. அமையங்களாக ஒழுங்கமைக்கப்பட்டன. இவற்றுட் சில சிறுபான்மையோரின் உரிமைகள், இனப்பிரச்சினை என்பவற்றில் விசேட அக்கறை காட்டத் தொடங்கின. முழு அபிவிருத்திச் செயன்முறையும், நிகழ்ந்து கொண்டிருக்கும் போர் காரணமாக வெகுவாகப் பாதிக்கப்படுகின்றமையாலும், வெகுவாகத் தடைப்படுகின்றமையாலும், இவையே முந்துரிமை பெற வேண்டிய பிரதான பிரச்சினைகள் என்பதை அவை விளங்கிக் கொள்ளலாயின.

எனவே, போரை முடிவுக்குக் கொண்டுவருவதேயானால், சமாதானத்தை நிலைநிறுத்துவதும் அதனூடாக நாட்டின் காத்திரமான அபிவிருத்தி, யதார்த்தமாவதைச் சாத்தியமாக்குவதற்குமாக, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் மிகமிக அவசியம் என்பதை அவை உணர்ந்தன. இதைச் செய்வதேயானால், தமிழர்களின் மனக்குறைகளின் மீது கருத்தூன்றிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும் இம்மனக்குறைகள் உண்மையானவையென்றும் ஏதோ ஒரு வகையான, அல்லது பல்வகையான அதிகாரப் பரவலாக்கம், அல்லது அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட்ட வேண்டுமென்றும் உணரப்பட்டது. இவர்களிடையே பிரச்சினைகளைப் பற்றிய பழுத்த விளக்கம் கொண்டிருந்தவர்கள், சிங்கள மக்களுக்கும் சில மனக்குறைகள் இருந்தனவென்றும் அதிகாரப் பரவலாக்கம் அல்லது அதிகாரப் பகிர்வினால் அவர்களும் நன்மையடைவார்கள் என்றும் கருதினார்கள். இது பற்றிப் பின்னர் விபரமாகப் பார்ப்போம். தமிழர்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக, நிச்சயமாக, அவற்றிடையே நிறைந்த அனுதாபம் இருந்த போதிலும் அவை, தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்றன என்றோ, பிரிவினையை ஆதரிக்கின்றன என்றோ கூறுவது முற்றிலும் தவறு. உண்மையில், இவற்றுட் பல, தமிழீழ விடுதலைப் புலிகளையும் அது பின்பற்றும் முறைகளையும் தீவிரமாகக் கண்டிக்கின்றன. எப்படியிருப்பினும், நாட்டின் போர் நிலைமை காரணமாக, ஐக்கிய இலங்கையோ, இலங்கையில் ஒற்றை ஆட்சியோ இல்லை; சட்டப்படி எவ்வாறாயிருப்பினும் நடைமுறையில், ஏறத்தாழப் பிளவுபட்ட நிலையே காணப்படுகின்றதென்பதே இவற்றின் நிலைப்பாடாகும். இது, இவர்களை விமர்சிப்பவர்களுக்கு எதிர்மாறானதொரு நிலையாகும். இது பற்றிப் பின்னர் விபரமாகப் பார்ப்போம். எனவே, உண்மையில் பிளவு காணப்படுமிடத்து, அதிகாரப் பரவலாக்கம் அல்லது அதிகாரப் பகிர்வு, ஐக்கியத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. சிங்களத் தலைமைத்துவத்தில், அதிகாரப் பரவலாக்கத்தை, அல்லது அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் தீவிர இனவாதப் பிரிவொன்று உண்டென்றும், அது சமாதான முயற்சிகளுக்குப் பெருந்தடையாக இருப்பதுடன், போர் தொடர்வதற்கு ஒரு பிரதான காரணமாகவும் இருக்கின்றதென்றும் அவை மேலும் நம்பின. அத்துடன், தமிழ்த் தலைமைத்துவத்திலும் சமதானத்திற்கும் போர் தொடர்வதற்குமான பொறுப்பின் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ள வேண்டிய தீவிர இனவாதக் குழு ஒன்றுள்ளதென்பதையும் கருத்து முதிர்ச்சி பெற்றவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

வியாபாரமும், வர்த்தகமும் தொடர்பான பல்வேறு பிணைப்புக்களையும் பல்வேறு வகைப்பட்ட வரலாற்றுத் தொடர்புகளையும் தனிப்பட்ட தொடர்புகளையும் இலங்கையுடன் கொண்டுள்ள பல வெளி நாடுகள், பல காரணங்களுக்காகவும் இலங்கையின் போர் நிலைபரம் பற்றிக் கரிசனை கொண்டனவாகவும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தக்கூடியதொரு தீர்வில் அக்கறை கொண்டனவாகவும் இருக்கின்றன. எனவே, இத்தகைய நாடுகளிலுள்ள உதவி முகவரகங்களினூடாகவும், தூதரகங்களினூடாகவுமே உதவி வழிப்படுத்தப்படுகின்றது. இவை, இலங்கையின் சமாதான முயற்சிகளுக்காகச் சில அ.சா.அமையங்களுக்கு உதவி வழங்கியுள்ளன. இவை, நிச்சயமாகச் சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றியும், தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் அனுதாபம் கொண்டுள்ளன. ஆனாலும் இவை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அவர்களின் பிரிவினை முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்குகின்றன என்று கூறுவது முற்றிலும் தவறு. தத்தம் மனச்சாட்சிக்கேற்ப இனச் சமாதானம் கருதிப் பணி புரிவதற்கு அ.சா. அமையங்களின் உள்ளபடியான உரிமைகளில் அரசாங்கம் தலையிட முயற்சி செய்தால், இலங்கைப் பொது மக்களின் எதிர்ப்புக்களைச் சந்திக்க வேண்டி வரும் என்பது மட்டுமன்றி, உலக சமுதாயத்தின் அதிருப்தியையும் சம்பாதிக்க நேரும். இது, வேறு துறைகளுக்கென வரும் வெளி நாட்டு உதவிகளுக்கும் தடையாக அமையக் கூடும். இத்தகைய உதவிகளை அரசாங்கம் இழக்கக் கூடிய நிலையிலும் இல்லை.

## இரண்டு தத்துவங்கள்

இது தொடர்பாக மிக்க காரசாரமான சர்ச்சைக்குட்பட்டதும் அவசியமற்ற வாதத்திற்கிடமானதுமான விடயமாக அமைந்துள்ள இரண்டு தத்துவங்களை நாம் இங்கு குறிப்பிட வேண்டும். 'ஈழத் தமிழரின் பாரம்பரியத் தாயகம்', 'சுய நிர்ணய உரிமை' என்பனவே இத்தத்துவங்களாகும். எனினும், நிலைமையின் யதார்த்தங்களில் போதியளவு கவனஞ் செலுத்தாமல், கருத்து நிலைத் தத்துவங்களை இறுகப் பற்றிக் கொண்டிருத்தல், தீர்வுகளை நோக்கிச் சாதகமான விதத்தில் முன்னேறுவதற்குத் தடையாக அமையலாம். அத்துடன் நில்லாது, இது எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தலாம். ஏனைய இனக் குழுக்களுடன் (1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) இலங்கை, தமிழ் பேசும் மக்களின் வரலாறுசார் வாழ்விடமாக வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் இருந்தமை, அதாவது பன்னெடுங்காலமாக, வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் இலங்கைத் தமிழருடன் விசேடமாகத் தொடர்புற்றிருந்தமை, நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். அத்துடன், தமது சொந்த எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உரிமை தமிழர்களுக்கு இருக்க வேண்டும். ஆனால், தமிழர்களும் சிங்களவர்களும் சம்பந்தப்பட்ட விடயங்களை, குறிப்பாக, நிலம் தொடர்பான விடயங்களை இணக்கப் பேச்சுவார்த்தைகள் மூலம் முடிவு செய்தல், ஏனைய தரப்புக்களைப் பொறுத்தளவில் நியாயமாக அமையும். இலங்கை வரலாற்றில் சிற்சில காலப்பகுதிகளில் நிலைமை எவ்வாறு இருந்திருப்பினும், இலங்கை வரலாற்றை முழுமையாக எடுத்துப் பார்த்தால், இலங்கை, அங்கு வாழும் அத்தனை மக்களுக்கும் சொந்தமாகும் என்பதை எவரும் ஏற்றுக்கொள்ளலாம். தாம் பெரும்பான்மையாக அமைந்து, தம்மைத் தாமே வளர்த்துக்கொள்வதற்கு உதவக்கூடிய, அணிமைத்தானதும், வளத்தைத் தர வல்லதுமான அதிகாரப் பரவலாக்க அலகொன்றே தமிழர்களுக்கு அவசியமாகும். இதற்குக் கணிசமான அளவு நிலப்பரப்பு தேவை. இது தொடர்பாக, சமாதான சக வாழ்வு, ஒருவர் மீதொருவர் சார்ந்து வாழ்தல் என்ற அடிப்படையில், இணக்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம். எனவே 'பாரம்பரியத் தாயகம்', அல்லது 'ஈழம்', அல்லது 'சுய நிர்ணயம்' என்பவை தொடர்பாக எவ்விதமான வாத எதிர்வாதமும் இருக்க வேண்டியதில்லை. இவ்விடயத்தைப் பின்னர் மேலும் விரிவாக ஆராய்வோம்.

## இனவாதம்?

அடுத்ததாக, அடிக்கடி சிங்களத் தீவிரவாதிகள், அல்லது இனவுணர்ச்சி கொண்டோர் என்று கூறப்படுவோரைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். இவர்கள் சில சமயங்களில் இனவாதிகள் என்றும் குறிப்பிடப்படுவர். இவ்விரு சாராரும் மற்றவர்களுக்கெதிராக வேறுபாடு காட்டுவோராக இருக்க, இனவாதிகள் காட்டும் வேறுபாடு, ஜேர்மனிய நட்சிஸவாதம், இதன் ஆபிரிக்க 'அபாதெயிட்' என்பவற்றிலுள்ளது போன்று, உத்தியோகரீதியாகவும் சட்டரீதியாகவும் தாம் மேம்பட்டோர் என்ற சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது என்று தோன்றுகின்றது. பொதுவாக, பெரும்பாலான சிங்கள அமைப்புக்கள், இத்தகையதொரு வேறுபாட்டை மனத்திற்கொள்ளவில்லையெனலாம். இனவுணர்ச்சியாளர்கள் என்ற வகையிற் கூட உண்மையில் அத்தகைய வகுதிப்படுத்தலையும் அவர்கள் ஆட்சேபிப்பதுடன் வன்மையாக எதிர்க்கிறார்கள். இவர்கள் மறு புறம், தம்மைக் குற்றஞ்சாட்டுபவர்களைத் தீவிரத் தமிழரென்றும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபிகளென்றும் இனவாதிகளென்றும் அழைக்கிறார்கள். **இரு சாராரும் ஒருவரையொருவர் பிசாசு என்று கருதுவதை விடுத்து, ஒருவர் கூறுவதை மற்றவர் கேட்டு, மறு தரப்பினர் என்ன கூறுகின்றனர் என்பதையும் ஏன் அவ்வாறு கூறுகின்றனர் என்பதையும் விளங்கிக்கொள்ள முயலும்படி செய்வதே, சமாதானத்தை ஏற்படுத்தும் செயன்முறையின் மிகக் கடினமான பணிகளுள் ஒன்றாகும்.** சிங்கள மக்கள் பல வகைகளில் பாதகமான முறையில் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர்; இன்னமும்

பாதிப்புக்குள்ளாகின்றனர் என இச்சிங்களப் பிரிவினர் வாதிடுகின்றனர். இவர்களுட் சிலர், தமிழர்களை விடச் சிங்களவர்களே அதிக அளவில் பாதிக்கப்படுகின்றார்களென்றும் தமிழர்கள் முறைப்படுவதற்கு எதுவுமே இல்லை என்றும் சொல்லுமளவிற்குப் பேசுகிறார்கள். ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ், சிங்களவர்கள் சுரண்டலுக்கும் நசுக்குதல்களுக்கும் உட்பட்ட நீண்ட வரலாற்றையும் பிரித்தாளும் கொள்கையின் கீழ் அவர்கள் அனுபவித்த பிரதிகூலங்களையும் அவற்றின் அடையாளங்களை இன்றும் காணலாம் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். ஒப்பீட்டளவில் தாம் ஒரு சிறிய சமூகம் என்பதையும் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். இலங்கை தான் சிங்களவர்களுக்கெனவுள்ள ஒரேயொரு நாடென்றும் தமிழர்களுடைய சமுதாயம் பெரியதென்றும் தமிழர்களுக்கு ஆதரவாகவுள்ள 50 மில்லியனுக்கும் மேற்பட்ட தமிழர்கள் தமிழ் நாட்டில் வாழ்கிறார்களென்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

மேலே கூறப்பட்ட கருத்துக்களைப் பல்வேறு அளவுகளில் பின்பற்றும் பல அமையங்கள், எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் தோன்றியுள்ளன. இவற்றுள் பிரதானமானவை பின்வருமாறு: சிங்ஹள ஆரக்ஷக சங்விதானய, ஜனதா மித்துரோ, சிங்ஹள ஆணையம், தேஷப்பிரேமி பிசஷ் பெரமுன, ஜாதிக சங்க சபாவ, ஜயகிரஹனய (சில கிறிஸ்தவர்களின் நெறி பிறழ்ந்த மதமாற்றத்திற்கெதிரான ஓர் அமையம்), ஜாதிக ஏக்காபத்த சங்விதானய, சிங்கள மகா சம்மத பூமி புத்ர கட்சி, பௌத்த அமையங்களின் கூட்டு, பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கம், சிங்ஹள வீர விதான, பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய முன்னணி.

தமிழர் முறையீடு செய்வதற்கு எதுவுமே இல்லை என்று, அல்லது சிங்கள மக்களே தமிழரை விடப் பிரதிகூலங்களுக்காளாகியுள்ளனர் என்று எப்படி ஒரு சிங்களவரேனும் கூறலாம் என்பதை இரு பக்கத்தையும் சார்ந்த 'மிதவாதி'களால் புரிந்து கொள்ள முடியதிருக்கின்றது. தமிழருக்கு முக்கியமான சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழருக்குத் தேசிய மொழி அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பதை ஓர் உதாரணமாகக் கூறலாம். ஆனால், இதை நடைமுறைப்படுத்தும் செயன்முறை, பெரும்பாலும் சிங்கள அலுவலர்களின் கையில் தங்கியிருப்பதும் வேண்டிய அளவு நிதி வசதி அரசாங்கத்தினால் வழங்கப்படுவதிற் தாமதம் ஏற்படுவதும் பெரும் பின்னடைவையே ஏற்படுத்தியுள்ளன. அத்துடன், சிங்கள மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின், அதாவது 'பயங்கரவாதி'களின் பல்வேறு தாக்குதல்களுக்கு இடைவிடாது ஆளாகுகின்றனர். இவற்றிற்கு முதன்மை நிலையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு செய்திகளை ஊடகங்கள் வெளியிடுகின்றன. ஆனால், ஒப்பீட்டளவில் முன்னர் குறிப்பிட்ட 'அரச பயங்கரவாத'த்தினால் தமிழர்கள் இடைவிடாத இன்னல்களுக்காளாகி வருகின்றமையையும் அவற்றினால் அவர்கள் அனுபவிக்கும் பலாபலன்களையும் சிங்கள் மக்கள் அறிய மாட்டார்கள். இச்செய்திகளுக்கு மிகக் குறைந்த முக்கியத்துவத்தையே ஊடகங்கள் வழங்குகின்றன. முன்னர் குறிப்பிட்டது போல, சிங்களத் தேசியவாதிகளையும் பௌத்தர்களையும் 'பேய்'களாகச் சித்திரிப்பதை நாம் தவிர்த்துக் கொள்ள வேண்டிய அதே வேளையில், இவர்கள் தம்மத்தியிலுள்ள உண்மையான தீவிரவாதிகளின் சொற்களும் செயல்களும் எவ்வளவு பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன என்பதையும் இவை தமிழர்களுக்கெதிரான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இடமளித்திருப்பது மட்டுமன்றிச் சமாதானத்தைக் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்வுகளை உருவாக்குவதில் தடையையும் தாமதத்தையும் ஏற்படுத்துவதற்குப் பங்களித்துள்ளன என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டியதும் முக்கியமாகும். இரு தரப்பிலும் வன்முறைகள் தொடர்ச்சியாகத் தீவிரமடைதலே இவற்றின் விளைவாகும்.

சிங்கள மக்களுட் பெரும் பகுதியினர் தமிழர்கள் அனுபவிக்கும் உண்மையான இன்னல்களை அறியாதவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் எதையும் கண்ணால் காணாததால், அவர்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே, அடிப்படையில் அவர்கள் நியாயமானவர்களாகவும்

தீவிரத்தன்மையற்றவர்களாகவும் இருந்த போதிலும், அவர்கள் ஸ்ரீ மகாபோதி (அரச மரம்), தலதா மாளிகை (தந்ததாதுக் கோவில்) என்பனவற்றைத் தாக்கியது போன்ற தடுமாற்றம் மிக்க நிலைமைகளில், எளிதிற் பாதிப்புக்குள்ளாகக்கூடிய தன்மை வாய்ந்தவர்கள். இத்தகைய நிகழ்ச்சிகளினால், இவர்கள் 'கடுந்தீவிர சிங்களப் பிரிவினர்'களால் ஈர்க்கப்படக்கூடியவர்கள். எனினும், 1983இல் இடம்பெற்றது போன்றதொரு வன்முறை இடம்பெறவில்லை. ஆனால், அதிகாரப் பரவலாக்கம் போன்ற விடயங்களைப் பொறுத்தளவில் அபிப்பிராயம் மாறுபடும் நிலையேற்படுவதற்கு இடமுண்டு. 'கடுந்தீவிரச் சிங்களப் பிரிவினர்'களின் சில நடவடிக்கைகளுக்குத் துலங்கும் வகையில், தலைமறைவான (Underground) வன்முறைப் போக்கொன்றைக் காண முடிகின்றது. தணிக்கப்படாமல் போர் தொடருமேயானால், இது அபாயகரமான அளவுகளை எய்தக் கூடும்.

## தமிழ் அமையங்கள்

இதே போன்று, தமிழ் மக்களை எடுத்துக் கொண்டால், சிங்கள மக்களின் துன்பங்களைப் பற்றி அறியாத பெருந்தொகையான தமிழ் மக்கள் இருக்கின்றனர். குண்டுதாரிகள் தொடர்ச்சியாகச் செயற்படுதலைக் கொண்டு, இவர்களுட் பலரின் உணர்ச்சிகளின் உத்வேகத்தை உய்த்துணர முடிகின்றது. உண்மையில், கல்வியறிவு படைத்த, நியாயமான போக்குக் கொண்ட தமிழர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் சில 'பயங்கர' செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ளாத போதிலும் அல்லது அவற்றைக் கண்டித்த போதிலும் இவர்களிடையே கூட, சிலர் நினைக்கும் அளவிற்கும் அதிகமான அளவு ஆதரவு உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உண்டு. சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காணப்படாத வரை, தமிழீழ விடுதலைப் புலிகள் தோல்வியடைவதைக் காண இவர்கள் விரும்பவில்லை.

**எப்படியிருப்பினும், தமிழர் எல்லோரும் அல்லது தமிழருள் பெரும்பாலானோர் 'ஈழவாதிகள்' என்று சில சிங்களப் பிரிவினர் நம்புவது பிழை.** அதாவது, அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளையும், பிரிவினைவாதத்தையும் ஆதரிப்பவர்கள் என்று கொள்வது தவறு. மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (The University Teachers for Human Rights - UTHR) என்ற தமிழர் குழு, தமிழீழ விடுதலைப் புலிகளைத் தீவிரமாக எதிர்க்கின்றது. இக்குழு, தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் வேறும் பிரிவுகளும் மனித உரிமைகளை மீறுவதைக் கிரமமாக வெளியிடப்படும் தனது விரிவான ஆவணங்களில் வெளிப்படையாக எடுத்துக்காட்டுகின்றது. இன்னும், பெருந்தொகையான தமிழ் 'மிதவாதிகள்' இருக்கின்றனர். இவர்களுடைய நிலைப்பாடு, UTHRஇனது நிலைப்பாடு போன்று, தாக்காற்றல் மிக்கதாக இல்லாதிருக்கக் கூடுமெனினும், இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளையும், ஏனைய தமிழ் குழுக்களையும் கட்சிகளையும் கடுமையாக விமர்சிப்பதுடன், அரசாங்கத்தையும் ஏனைய சிங்களக் குழுக்களையும் கட்சிகளையும் கடுமையாக விமர்சிக்கிறார்கள். ஐக்கிய இலங்கை ஒன்றினுள் சகல சமுதாயங்களுக்கும் ஏற்புடையதான நியாயமான ஒரு தீர்வைத் தேடுவதில் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் (இவர்களுட் சிலர், பல்வேறு அரசியற் கட்சிகளைச் சேர்ந்தவர்களாவர்.) இத்தகைய தமிழ் மிதவாதிகளுள், நீ.ச.உ.ஒ.ம./இ. குழுவின் சமாதான முயற்சிகளில், செயலூக்கத்துடன் ஈடுபட்டுள்ளோர் கணிசமான அளவில் உள்ளனா.

அடுத்து, தமிழ் அரசியற் கட்சிகள் காணப்படுகின்றன. இவற்றுட் சில, பல்வேறு காலகட்டங்களில், மூர்க்கமான தெரிவுகளைச் செய்துள்ளன. ஆனால், தற்பொழுது, இன்றுள்ள அரசியற் கட்டமைப்பிற்குள் செயலாற்றுவதற்கும் ஐக்கிய இலங்கையினுள் ஒரு நியாயமான தீர்வு காண்பதற்கும் இணங்கியுள்ளன. அவை பின்வருமாறு: தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (The Tamil United Liberation Front - TULF), தமிழ் காங்கிரஸ் (The Tamil Congress - TC), தமிழ் ஈழ மக்கள் விடுதலை முன்னணி (The People's Liberation Organization of Tamil Eelam

- PLOTE), தமிழ் ஈழ மாணவர் புரட்சிகர முன்னணி (The Eelam Revolutionary Organization of Students _EROS), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (The Eelam People's Revolutionary Liberation Front - EPRLF), ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (The Eelam People's Democratic Party - EPDP). **இது இவர்களது உரிமைகளுக்கான நீண்ட கசப்பான போராட்டமாக அமைந்தது. இக்கட்சிகள் யாவும் முதன்மையான, ஆற்றல் படைத்த தலைவர்களையும் ஈடுபாடு மிக்க உறுப்பினர்களையும் கொண்டிருந்தன.** இவை தத்தமது தரப்புக்களில் வீரத்தியாகிகளைக் கொண்டிருக்கின்றன. இவை பாரிய கஷ்டங்களுக்கிடையில் போராடியுள்ளன. இவை அடைவுகளையும் வெற்றிகளையும் கண்டது போன்று தவறுகளையும் தோல்விகளையும் சந்தித்துள்ளன. தமது உரிமைகளுக்கான, தமிழ் மக்களின் போராட்ட வரலாறு உரிய நோக்கில் எழுதப்படும் நாளில், தகுதி படைத்தோருக்கான பாராட்டு வழங்கப்படும். இக்கட்சிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒரு குடையின் கீழ் ஒற்றுமைப்பட்டிருந்தால், கதையே வித்தியாசமாக அமைந்திருக்கலாம். ஆனால், அது நடக்கவில்லை. கசப்பான உட்போர்களும் நீக்குதல்களும் கொன்றொழிப்புக்களும் இடம்பெற்றன. இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதிக்கச் சக்தியாகத் தலை தூக்கினர். **வல்லமை மிக்க தென்னக நிறுவனத்திற்கெதிரான, கடைசித் தற்காப்பரணாகவும் பேரிழிவான தோல்வியைக் கௌவும் நிலைக்காளாக்காமல், தமிழர்களுக்காகவும் அவர்களுடைய குறிக்கோளுக்காகவும் எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களுடைய மதிப்பிற்காகவும் சுயகௌரவத்திற்காகவும் எழுந்து நின்ற ஒரே சக்தியாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் கணிக்கப்பட்டனர்.** தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான நமது மனப்பான்மையையும் அதனுடைய 'பயங்கர' செயல்முறைகள் தொடர்பான நமது மனப்பான்மையையும் நாம் ஏற்கெனவே தெளிவாக்கியுள்ளோம். நாம் அவர்களை மன்னிக்கவில்லை. ஆனால், சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எவ்வளவு சிக்கார்ந்தவை என்பதையும் இலகுவான தீர்ப்புக்கள் நியாயப்படுத்தப்பட முடியாதென்பதையும் நாம் எடுத்துக்காட்டியுள்ளோம். 'கிளர்ச்சிக்காரர்களின் பயங்கரவாதம்', அது தமிழீழ விடுதலைப் புலிகளாக இருப்பினும் மக்கள் விடுதலை முன்னணியாக இருப்பினும் 'அரச பயங்கரவாத'த்தின் நோக்கிலேயே தீர்ப்பளிக்கப்பட வேண்டும். 'அரச பயங்கரவாத'மே 'கிளர்ச்சிக்காரர்களின் பயங்கரவாத'த்திற்கு வழி வகுக்கின்றது. இவ்விடயங்களை அவற்றின் உண்மையான நோக்கில் கண்டு, தீர்ப்பளிப்பதற்கு, ஒரு வேளை, மிக நீண்ட காலம் செல்லலாம.

இனி, தமிழர்களின் குறிக்கோள் கருதி, மிக்க விறுவிறுப்புடன் அதை ஆதரிக்கும் மற்றுமொரு அமையத்தை - இது ஓர் அரசியற் கட்சியல்ல - நாம் குறிப்பிட வேண்டும். இது, கொழும்பில் அமைந்துள்ள தமிழர்களின் செயல் குழுவாகும் (The Action Group of Tamils in Colombo - AGOTIC.) நாம் முன்னர் கவனித்தது போல, சிங்களக் குறிக்கோளை நோக்கமாகக் கொண்ட கட்சி அல்லாத மிகப் பல அமையங்கள் உண்டு. ஆனால், இத்தகைய தமிழ் அமையம் ஒன்று மட்டுமே உண்டு. இது, கொழும்பிற்கு வரையறுக்கப்பட்டதொன்றாகும். இந்நாட்டில் குடியியல் வாழ்வு, அரசியல் வாழ்வு என்பவற்றின் நிலை பற்றியதும் இந்நாட்டின் அரசியல் சுதந்திரம் பற்றியதுமான முக்கிய குறிப்பாகும் இது. அதி உயர் மத குருமார் இருவரின் ஆதரவைத் தாம் பெற்றுள்ளதாகக் கூறும் அதி தீவிரச் சிங்களப் பிரிவுகளிலிருந்து நமக்குக் கிடைத்துள்ள தகவல்களின் படி, தேசியக் கொடியிலிடம் பெற்றுள்ள தமிழர்களையும் முஸ்லிம்களையும் குறித்து நிற்கும் இரண்டு நீள் சதுர வண்ணக் கோடுகளும் முற்று முழுதாக நீக்கப்பட்டு, 'சிங்களச் சிங்கம்' மட்டுமே அதில் இடம்பெற வேண்டும்! இது, தற்பொழுது அவர்களிடமிருந்து கிடைத்துள்ள ஆலோசனையாகும். வழமையான குறியீடு, கலைத்துவம் வாய்ந்த உருவமைப்பு என்பனவற்றின் படி, செம்மஞ்சள், பச்சை ஆகிய இரு வர்ணங்களும் கொடியைச் சுற்றி விளிம்பில், நான்கு பக்கமும் இடம்பெற வேண்டுமென்பதே, உண்மையில் ஆரம்பத்தில் நிலவிய கருத்தாகும். ஆனால், 'சிங்களச் சிங்கத்'தைச் சூழ்ந்திருப்பதாக, விளிம்பில் அவை

இடம்பெறலாகாதென்று நகைப்பிற்கிடமான விதத்தில் குருட்டுப் பிடிவாதமுடைய சிங்களவர்கள் ஆட்சேபித்தனர். வர்ண நீள் சதுரம் ஓர் அருகில் அமையலாமெனத் தமிழர்கள் மிகவும் நயமாக ஒத்துக்கொண்டனர். **எனினும், பெரும்பாலான சிங்கள மக்கள், விசேடமாக பௌத்த பிக்குக்கள் இத்தகைய தீவிரவாதத்தையும் குருட்டுப் பிடிவாதத்தையும் கொண்டவர்களாக இருக்கின்றனரென்று சில தமிழர்கள் நம்புகிறார்கள் போல் தெரிகின்றது. எதிர்மாறாக, சிங்களவர்களுள் மிகப் பெருந்தொகையினர், தலைவர்கள் (பிக்குகள் உட்பட), பொதுமக்கள் என்போர் தீவிரவாதிகளினதும் குருட்டுப் பிடிவாதமுடையயோரினதும் அர்த்தமற்ற கருத்துக்களை ஆமோதிப்பவர்களல்லர் என்பதை நாம் வலியுறுத்த வேண்டும். முன்னர் குறிப்பிட்டது போல, அடிப்படையில் அவர்கள் நியாயமானவர்கள்; தீவிரத்தன்மை படைத்தோரல்ல.** அத்துடன், நியாயமாகப் பார்த்தால், தீவிரத்தன்மையுள்ளவர்களும் குருட்டுப் பிடிவாதக்காரரும் தமிழர்களிடையேயும் உள்ளனர் என்பதிற் சந்தேகமில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும். துரதிர்ஷ்டவசமான இவ்வுண்மைகளை நாம் எதிர்நோக்கியேயாக வேண்டும். இத்தகைய கிறுக்குத்தனமும் குருட்டுப் பிடிவாதமும் பரவாமலிப்பதை உறுதி செய்யும் வகையில், இரு பக்கத்தினரும் தளராது, கடுமையாக உழைக்க வேண்டும்.

ஒரு பக்கத்திலுள்ள யதார்த்தங்களை மறு பக்கத்தினர் அறியும்படி செய்வதும் ஒரு சாராரின் உண்மையான நிலைவரத்தை மறு சாரார் மேன்மேலும் விளங்கிக் கொள்ளும்படி செய்வதுமே இங்கு அவசியப்படுகின்றது. முன்னர் குறிப்பிட்டது போல, ஒரு சாரார், மறு சாராரைப் பிசாசுகளெனச் சிந்திப்பதை நிறுத்துவதற்கும் ஒரு சாரார் கூறுவதை மறு சாரார் விளங்கிக் கொள்ள முயல்வதற்கும் அவர்கள் ஏன் அவ்வாறு கூறுகிறார்கள் என்பதை விளங்கிக் கொள்வதற்கும் உதவுவதே சமாதான முயற்சிச் செயன்முறையில் மிகக் கடினமான பணியாகும்.

நீ.ச.உ.ஒ.ம./இ.குழுவின் மிகப் பெறுமதிவாய்ந்த செயற்பாடுகளிலொன்று, பரிமாற்று நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தலாகும். ஒரு சாராரின் நிலைமைகளை மறு சாரார் சென்று பார்த்தல், ஆய்வு, உரையாடல், பண்பாட்டுக் கருத்துப் பரிமாறல்கள் என்பன போன்றவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் சிங்கள, தமிழ், முஸ்லிம் அகதி முகாங்களுக்கு விஜயஞ் செய்தல், ஒரு கண் திறப்பாக அமையலாம். மேலும், பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் என்பன போன்ற இடங்களின் ‘எல்லைப் பிரதேச’ங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டு, மக்கள் தமது வாழ்வைத் தாக்கும் இடைவிடாத போரின் மத்தியில் ஒன்று சேர்ந்து வாழ்தல் தொடர்பான பிரச்சினைகளைச் சமாளிப்பதற்குச் செய்யும் முயற்சிகளைக் காணுதல், வளமூட்டும் அனுபவமாகவும் அறிவூட்டும் அனுபவமாகவும் அமையலாம். நீ.ச.உ.ஒ.ம/இ.கிளை சார்ந்த குழுக்கள், இப்பிரதேசங்களில், தொடர்ச்சியாகச் செயலூக்கத்துடன் செயற்பட்டு, சமாதான முயற்சிகளில், மிகச்சாதகமான விளைவுகளைக் கண்டுள்ளார்கள். கட்டிடக் கலைச் சிறப்புவாய்ந்த பிரதேசங்களைப் பார்ப்பதற்கு மட்டுமன்றி, சமாதானத்திற்கான நவீன ஆக்கபூர்வமான முயற்சிகளைப் பார்ப்பதற்கும் அவற்றில் உதவுவதற்குமென, ஏனைய பிரதேசங்களிலிருந்து அதிக அதிகமான மக்கள் இப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்கிறார்கள்.

### அரசின் தலையீடு

அ.சா.அமையங்கள் பற்றிய விடயத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், அரசின் தலையீடென்ற ஆய்வுப்பொருளை நாம் மீண்டும் கவனத்திற் கொள்ள வேண்டும். அரசின் தலையீட்டினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நாம் குறிப்பிட்டிருக்கிறோம். தேர்வு ரீதியான அநீதிகளுக்கும் தலையீட்டிற்கும் தற்போதையத் தொடர்பில் அத்தியாவசியமானதொரு பங்களிப்பைச் செய்வதாகக் கணிக்கப்படும் அ.சா. அமையங்கள் சில மேற்கொள்ளும் நற்பணிகளுக்கு இடையூறு

ஏற்படுத்துவதற்கும் அரசின் தலையீடு வழிவகுக்கலாம். மக்கள் சுதந்திரமாக ஒன்றுகூடுதல் தொடர்பான மனித உரிமைகளையும் குடியியல் உரிமைகளையும் மீறுவதாக இவை அமையலாம்.

எனவே, அரசின் தலையீடு அவசியமே இல்லை என்று சிலர் வாதாடலாம்.

**அளவெல்லை**

எப்படியிருப்பினும், இவ்விடயம் பற்றிய அபிப்பிராயங்களை உருவாக்குவதற்கு முன்னர், அ.சா. அமையங்களின் பணிகளின் உண்மையான அளவெல்லையைப் பற்றிய சில விடயங்களைக் கருத்திற்கொள்ளல் தகும். 2000ஆம் ஆண்டு, பெப்பரவரி மாதம் 28ஆம் 29ஆந் திகதிகளில், ‘டெயிலி நியூஸ்’ பத்திரிகையில், ‘Sins of the Secular Missionaries’ என்ற தலைப்பில், லண்டன் ‘Economist’ பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரை ஒன்று மீள் பிரசுரிப்புச் செய்யப்பட்டது. இக்கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகள் பின்வருமாறு:

> “உலக ஆளுகை பற்றிய 1995ஆம் ஆண்டு அறிக்கை ஒன்றில், ஏறத்தாழ 29,000 சர்வதேச அ.சா.அ. இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.”
>
> “உள்ளூர் அ.சா.அ. இதைவிடத் துரிதமாக வளர்ந்துள்ளன. ஒரு மதிப்பீட்டின் படி, அமெரிக்காவில் மட்டும், தற்பொழுது இரண்டு மில்லியன் இருக்கின்றன.”
>
> “அமெரிக்காவின் அபிவிருத்திச் சபையான, USAIDஇன் முன்னை நாள் பணிப்பாளரான கரல் லங்கஸ்டரின் படி அபிவிருத்தி முகவரகங்களின் செயற்பாடுகளுக்கான மிக முக்கிய ஆக்கக்கூறாக அ.சா.அ. அமைந்துள்ளன.”
>
> “தற்பொழுது, அ.சா.அ. உலக வங்கியை விடக் கூடுதலான நிதி வழங்குகின்றன என்று செஞ்சிலுவைச் சங்கம் மதிப்பிட்டுள்ளது.”
>
> “மேற்கு அரசாங்கங்கள் நிதி வழங்குவதே, அ.சா.அமையங்களின் அண்மைக்காலத் துரித உயர்வுக்குப் பிரதான காரணமாகும்: இது, ஈகை பற்றிய ஒரு விடயமல்ல; தனியார் மயமாக்கம் பற்றியதாகும். பல அரசாங்கச் சார்பற்ற குழுக்கள், அரசாங்கங்களின் ஒப்பந்தக்காரர்களாகின்றன. அ.சா. அமையங்களினூடாக உதவி வழங்குதல் இலாபகரமானதாகவும் மேலும் வினைத்திறமை சார்ந்ததாகவும் நேரடியான உத்தியோகபூர்வ உதவியை விடச் சிறப்பாகக் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் இருப்பதால், உதவிகளை அ.சா. அமையங்களினூடாக வழங்குவதை அரசாங்கங்கள் விரும்புகின்றன.”
>
> “உணவு, கம்பளி என்பவற்றை விநியோகிப்பதற்கப்பாலும் பல வழிகளில் அ.சா.அ. பயன்படுகின்றன என அரசாங்கங்கள் கருதுகின்றன. சில பயனுள்ள தகவல்களை வழங்கி, அது தமது பணியின் ஒரு பகுதியெனக் கருதுகின்றன.”
>
> ‘செயலுக்கு அண்மையில் இருப்ப’தால், சில அ.சா.அ., ஒரு வேளை தம்மையறியாமலே உளவு பார்ப்போருக்கு நல்ல போர்வையாக அமையக் கூடும்.
>
> **“அ.சா.அ. பல பெருஞ் சாதனைகளைப் புரிகின்றன. உள் நாட்டுப் போர்களில் அகப்பட்டுக் கொண்ட பொது மக்களுக்கும் அநியாயமாகச் சிறைப்**

**பிடிக்கப்பட்டவர்களுக்கும் மில்லியன் கணக்கான கதியற்ற அகதிகளுக்கும் இறுதி நம்பிக்கையாகத் திகழ்கின்றன. பாரிய சாதனைகளைப் புரிந்த சிறிய, வினைத்திறன் வாய்ந்த, தூண்டுதலைக் கொண்ட பல குழுக்கள் உதாரணமாகவுள்ளன:** மிகச் சிறந்தவை, உள்ஊர் மக்களை அமர்த்துகின்றன; வெளி நாட்டு நிபுணர்களை இழிவளவில் வைத்துக் கொள்கின்றன; தெளிவான இலக்குகளையுடைய (சுத்தமான நீரை வழங்குதல் போன்ற) முயற்சிகளில் ஈடுபடுகின்றன; தமது பணிகளின் நீண்ட காலத் தாக்கத்தைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கின்றன. இவற்றுட் சில நன்கு நடத்தப்படும் பெரிய, குழுக்களாக வளர்கின்றன."

**"ஆனால், பிரச்சினைகளும் இருக்கின்றன. அ.ச.அ. அரசாங்கங்களை விடக் குறைந்தளவு அதிகாரப் போக்கு, குறைந்தளவு விரயம், குறைந்தளவு ஊழல் என்பவற்றைக் கொண்டுள்ளன எனக் கொள்ளலாம். எனினும் குறை நுண்ணாய்வு காரணமாக குழுக்கள், அதே, பிரதான குறையைக் கொண்டவையாகலாம்: அதாவது, அவை எவருக்கும் பொறுப்புக்கூற வேண்டிய நிலையில் இல்லாததால் பிழையான வழியில் செல்லலாம்."**

"சில உதவிக் குழுக்கள் 19ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதக் குழுக்கள் செய்தது போன்று, மேற்கத்தைய விழுமியங்களைப் பரப்பும் பழக்கத்தைக் கொண்டுள்ளனவென்றும் திறனாய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர். உள்ஊர் மக்கள் பற்றிய அடிப்படைகள் எதையும் கொண்டிராத பல அ.சா.அ. வெளி நாடுகளிலிருந்து பணம் வருவதால் எவ்வித வாதவிவாதங்களுமின்றித் தமது கருத்துக்களைத் திணிக்கின்றன. உதாரணமாக, இவை பெரும்பாலும், மேற்கத்தைய சமூகங்களால் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட, பெண்களினதும் பிள்ளைகளினதும் நன்மைகளை மேம்படுத்த முற்படுகின்றன. இதனால், தமக்குத் தேவைப்படும் நிதிகளை இவை இலகுவாகப் பெற்றுக் கொண்ட போதிலும் நாட்டில் சமூகத் தகர்வை ஏற்படுத்திவிடுகின்றன."

"அ.சா.அ. போர்கள் நீடிக்கப்படக்கூடிய, அல்லது போர்கள் சிக்கார்ந்ததாக்கப்படக்கூடிய நிலைமைகளிற் சிக்கிக் கொண்டு, படையினருக்கு உணவளித்தல், அகதிகளுக்குப் புகலிடமளித்தல், அல்லது போரிடும் தரப்பினர்களுக்குப் போர்வையாதல் என்பன போன்ற நிலைகளுக்குத் தள்ளப்படுகின்றன. இவை, உதவி வழங்கலின் எதிர்பார்க்கப்படாத விளைவுகளாகலாம். ஆனால், இவையும் வெளி நாட்டுக் கொள்கையைச் சிக்கலுக்குள்ளாக்கலாம்."

அ.சா.அமையங்களின் அகன்ற அளவெல்லை, மிகப் பல்வேறுபட்ட செயற்பாடுகள் என்பவற்றைக் கொண்டு பார்க்கையில், இவற்றின் செயற்பாடுகளைக் கண்டுகொள்ளாமலும் அரசாங்கம் இருக்க முடியாது. அத்துடன், இலங்கையில் ஆயிரக்கணக்கான அ.சா.அ. உண்டு. அரசாங்கமும் அதை விட முக்கியமாக மக்களும் மிக விழிப்பாக இருத்தல் வேண்டும். அ.சா.அமையங்களைப் பொறுத்தளவில், நல்லது, கெட்டது, இரண்டும் உண்டு. தீய அம்சங்களைக் குறைத்து நல்ல அம்சங்களை ஊக்குவிக்கும் விதத்தில் எவ்வாறு தலையிடலாம் என்பதே பிரச்சினையாகும். அதாவது அ.சா. அமையங்களின் பாதகமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு என்னென்ன செய்யப்படுகின்றனவோ, அவை அவற்றின் சாதகமான செயற்பாடுகளைத் தடை செய்வதாக அமையலாகாது.

## அரசின் தலையீடு

உண்மையில் அரசின் தலையீடு எவ்வாறிடம்பெற்றுள்ளது என்பதை, அல்லது எத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைப் பார்ப்போம். 1980ஆம் ஆண்டின் தன்னிச்சையான சமூக சேவை அமையங்கள் (பகிர்வும், மேற்பார்வையும்) அதிகாரச் சட்டம், இல.31. அத்தருணத்தில் ஆட்சியிலிருந்த ஐ.தே.கட்சியினால் நிறைவேற்றப்பட்டது.

அ.சா.அமையங்களை நுணுகி ஆராய்ந்து, அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைக்குமாறு, அப்பொழுது அதிகாரத்திலிருந்த ஐ.தே.க., 1991இல் ஓர் ஆணையத்தை நியமித்தது. அ.சா.அமையங்களுக்கெதிராகச் செய்யப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் பற்றியும் நாம் முன்னர் குறிப்பிட்டோம். ஊழல், நெறிமுறை சாரா மதமாற்றங்கள், ஈழச் சார்பு, அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சார்பான அரசாங்கத்திற்கெதிரான நிலைப்பாடு (ஏனெனில் மனித உரிமை மீறல்கள் அடிக்கடி கையாளப்படுகின்றன), தேசிய எதிர்ச் செயற்பாடுகள் (வெளி நாட்டு முகவரகங்களுடனான பிணைப்புக்கள் காரணமாக) போன்றவை இக்குற்றச்சாட்டுக்களுள் முக்கியமானவை. ‘கரிசனைமிக்க’ பல்வேறு தனியாட்கள், அமையங்கள், அல்லது ‘சக்திகள்’ என்பவற்றினால் கொண்டுவரப்பட்ட மேற்கூறிய குற்றச்சாட்டுகளுக்கெதிராக, அல்லது இக்குற்றச்சாட்டுக்கள் சிலவற்றிற்கெதிராகத் துலங்கும் விதத்தில், அரசாங்கம், அ.சா.அமையங்களுக்கெதிரான நடவடிக்கைகளிற் குதித்தது என்பதிற் சந்தேகமில்லை. இது தொடர்பாக ஓர் ஆணையம் நியமிக்கப்பட்டது. ஆணையம் விரிவானதொரு வினாக்கொத்தை விநியோகித்தது. இது, நாடு முழுவதிலும் பரந்திருக்கும் அ.சா. அமையங்களுக்கு அனுப்பபட்டது. குறிக்கோள்கள், நோக்கங்கள், அமைப்பு, பதவியாளர்கள், கணக்குகள், செயற்பாடுகளின் வகைகள், யாப்பு, நிதி மூலங்கள் போன்றன பற்றிய வினாக்கள் வினவப்பட்டன. இவ்வினாக்கொத்து முதலில் ஆங்கிலத்தில் மட்டுமே விநியோகிக்கப்பட்டமை சுவாரசியமானது. எனவே, இது, ஆங்கிலத் தகைமை பெற்ற அ.சா. அமையங்களுக்கு மட்டுமே பொருந்துமென்று கொள்ள வேண்டும் என்பது போல் தோன்றுகின்றது. இவ்வினாக்கொத்தைப் பெற்ற அ.சா.அ. ஒன்று சிங்களப் பிரதியொன்று வேண்டுமென்று கோரிய பின்னரே, ஏறத்தாழ ஒரு மாதத்தின் பின், அது வழங்கப்பட்டது. மேலும் தகவல்களைத் தரும்படி, விடைகளை அனுப்பிய பல அமையங்களை மீண்டும் மீண்டும் கேட்டனர். இவ்வாணயம், பல பிரதேசங்களிலும் பொது அமர்வுகளை நடத்தி அ.சா. அமையங்களின் செயற்பாடுகள் பற்றிய கருத்துக்களைக் கூற விரும்புவோரை அவ்வமர்வுகளிற் பங்குபற்றும்படி அழைத்தது. அத்துடன் இவ்வாணயம், சில அமையங்களிலிருந்து சில சாட்சிகளை வரவழைத்து, அவர்களைக் குறுக்கு விசாரணை செய்தது. இவ்வாணயத்தின் நிகழ்ச்சிகளின் இயல்பை அவதானித்த போது, அரசாங்கம் சில தலையீட்டுச் செயல்களைப் பற்றிச் சிந்திக்கின்றது என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. இத்தகைய செயல்கள் பற்றி இந்தியாவில் சிந்திக்கப்பட்டது மட்டுமன்றி, இந்தியாவின் சில மாநிலங்களில் இவை செயற்படுத்தப்பட்டன. எனவே, மக்களும் மக்கள் அமையங்களும் இதை எதிர்க்கத் தொடங்கி ஒன்று கூடுவதற்கான சுதந்திர உரிமையை வலியுறுத்தத் தொடங்கின. இவ்வெதிர்ப்புக்கள், சர்வதேச மட்டத்தில் வலுவான ஆதரவைப் பெற்றன. அபிவிருத்தியிலும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலும் ஈடுபடும் உதவி நல்கும் முகவரகங்களை உள்ளடக்கியதும் இலங்கைக்கும் உதவி வழங்கி வருவதுமான, ஐரோப்பிய அரசாங்கச்சார்பற்ற அமைய மன்றமும், ஜூரிகளின் சர்வதேச ஆணையமும் தமது கவலையைத் தெளிவாக வெளியிட்ட தாபனங்களுள் அடங்கும். அ.சா. அமைய ஆணையம், தனது அறிக்கையையும் பரிந்துரைகளையும் தயாரித்தது.

எப்படியிருப்பினும், எரிச்சலூட்டுகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருப்பது விவேகமென அரசாங்கம் கருதியது. இதற்காக, அரசாங்கம், நிச்சயமாக மெச்சப்பட வேண்டும். மனித

உரிமைகள், உண்மையான ஆபத்துக்குள்ளாகும் ஓரளவு மோசமான நிலைமை காணப்பட்ட போதிலும், இடம்பெற்ற பொது விவாதங்களும், உரையாடல்களும் சில ஆரோக்கியமான விளைவுகளை ஏற்படுத்தின என்று நிச்சயமாகக் கூறலாம். அரசாங்கத் தலையீடுகள் சில, ஒருபக்கச் சார்பான சில செயல்கள், அரசியற் பழிவாங்கல்கள் போன்றவற்றிற்கு வழிவகுக்கும் என்பதை நாம் முன்னர் சுட்டிக்காட்டியிருப்பதுடன், பின்னரும் வலியுறுத்துவோம். ஆனால், மறு புறம், சில கிறிஸ்தவ சமயப்பிரிவுகளின் செயல்களினால் உண்மையில் ஆபத்தான நிலை இருந்தது. அதாவது, இப்பிரிவுகள், அறநெறி பிறழ்ந்த மதமாற்ற முயற்சிகளில் ஈடுபட்ட குற்றத்திற்கும் சில சந்தர்ப்பங்களில் உண்மையாகவே மதம் மாற்றிய குற்றத்திற்கும் ஆளாகியுள்ளன. எனினும், இத்தகைய செயற்பாடுகளின் அளவு, பெரிதும் மிகைப்படுத்தப்பட்டன என்பதில் சந்தேகமில்லை. சீரழிந்து வரும் பொருளாதார நிலைமையின் பின்னணியில், மேன்மேலும் சமூக சேவை நடவடிக்கைகளுக்கான அவசியம் தெளிவாக இருந்தது. இப்பிரிவுகளும் நிதி வழங்கும் அமைப்புகளும் - அவை உள்ளூரெனினும், வெளி நாட்டினவெனினும் - நிச்சயமாகப் பயனுள்ள பங்கு வகித்தன. இச்செயன்முறையில், உதவி பெறுவோரின் பொருளாதார நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, 'நெறிமுறை பிறழ்ந்த மதமாற்றங்கள்' தொடர்பாக, நெருக்குதல்களை மேற்கொள்ளும் நிச்சயமானதொரு போக்குக் காணப்பட்டது. இவ்வகையான செயற்பாடுகள் வெளிவெளியாக, மிக நுணுக்கமாக அவதானிக்கப்பட்டதுடன், பொது மக்களின் நுண்ணாய்வுக்கும், விவாதத்திற்குமுட்பட்டன. எல்லாப் பக்கங்களிலிருந்தும் கண்டனத்திற்காளாகின. முன்னர் குறிப்பிட்டது போல, சில பெரிய, நன்கு நிலை பெற்ற தேவாலயங்கள், நெறிமுறை பிறழ்ந்த மதமாற்றங்களுக்கெதிராக அறிக்களை விடுத்தன. இதன் பின்னர், 'கிறிஸ்தவ மதத்தைப் போதிக்கும்' சில சிறிய அடிப்படை மதவாதப் பிரிவுகளும் கூட அத்தகைய நடவடிக்கைகளில் தாம் ஈடுபடவில்லையென்றும், அத்தகைய நடவடிக்கைகளை எதிர்த்தும் அறிக்கைகளை விடுக்கலாயின. இதன் பின்னர், எந்தவோர் அமையமும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் நிச்சயமாகக் கடினமாகவேயிருக்கும். திறந்த பொது விவாதங்களும் உரையாடல்களும் அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தவை.

எப்படியிருப்பினும், பல்வேறு விதமான நெருக்குதல்களை ஏற்படுத்தும் விடயம், அதாவது, சமயம் மாறுவது தொடர்பான முடிவுகளும் ஈடுபாடுகளும் சம்பந்தப்பட்ட நெருக்குதல்கள், சில சமயங்களில் மிக எளிமையானவையாகவும் நேரடியானவையாகவும் வேறு சில சந்தர்ப்பங்களில் நாசூக்கானவையாகவும் மறைமுகமானவையாகவும் அமையும் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். இது ஒரு மிகப் பாரிய விடயமாகும். இது அப்படியே மறைந்துவிடக்கூடியதொன்றல்ல; இது எப்பொழுதும் நம்மிடையே ஒட்டிக்கொண்டேயிருக்கும். இது கிறிஸ்தவ சமயம் தொடர்பானது மட்டுமல்ல. பௌத்த மதமும், ஏனைய மதங்களும் கூட இதில் தொடர்புபட்டுள்ளன. இவை பழைய நிறுவனங்களா, புதிய பிரிவுகளா என்ற வேறுபாடுகள் இல்லை; இதில், அரசாங்கங்களும் தொடர்புபட்டுள்ளன. இவை யாவும் பல்வேறு விதமான நெருக்குதல்களை ஏற்படுத்தவல்லன. எனவே, பொது மக்கள் என்றுமே விழிப்பாக இருத்தல் வேண்டும். இதுவே, உண்மையான ஒரே விடையாகும்.

மேலும், மனத்திற் கொள்ள வேண்டிய வேறு பல காரணிகளும் உண்டு. முதலாவதாக, பெருந்தொகையான மக்களின் மிக மோசமான ஏழ்மை நிலைமை, விசேடமாக, இவர்களை நெருக்குதல்களுக்கு இரையாக்குகின்றது. இரண்டாவதாக, இத்தகைய நெருக்குதல்களைப் பிரயோகித்தல், சமூகத்தில் நிலவும் வன்முறைக் கலாசாரத்தின் ஒரு பகுதியாகும். மூன்றாவதாக, பௌத்த ஆலயங்கள், கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள் என்பவற்றைச் சேர்ந்த அதிகாரிகளும் தலைவர்களும் தத்தமது பிரிவுகளைச் சேர்ந்த ஏழை மக்களின் ஆன்மிக முன்னேற்றத்திலும் பொருளாதார முன்னேற்றத்திலும் காட்டும் அக்கறையும், இவ்வதிகாரிகளினதும்

தலைவர்களினதும் நடத்தையும் அவர்களின் முன்மாதிரியும் போதிய அளவு சிறப்பாக அமையாததால், இவர்களைப் பின்பற்றுவோர், தத்தமது சமூகங்களுக்கு விசுவாசமாக இருப்பதற்கான ஊக்குவிப்பும் தூண்டுதலும் இல்லாமற் போய்விடுகின்றது.

## புதிய சகாப்தம், புதிய பங்கீடு

பின்னர், ஐ.தே.கட்சியின் 17 வருட ஆட்சி முடிவிற்கு வந்து, 1994இல் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பொறுப்பேற்றதுடன், ஒரு புதிய சகாப்தம் உதயமாகியது. இத்துடன் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் அ.சா. அமையத்துறையிலும் கூட புதிய சுதந்திரப் பங்கீடு இடம் பெறுவதற்கொரு வாய்ப்புண்டென்றொரு ஊகம் நிலவியது. எனினும், சிலர் எதிர்பார்த்தது போல், விடயங்கள் சுமுகமாகச் செல்லவில்லை. விடயங்களின் இயல்பு காரணமாக எதிர்பார்த்தளவு சுமுகமாக நிகழ்வுகள் இடம்பெற முடியாது போய்விட்டது போலும். திறந்த சந்தைச் சமூகமும் அதனுடன் கூடிய சுதந்திரக் கட்டுப்பாடுகளும் சடுதியாக மாற்றியமைக்கப்பட முடியாதவையாகும். "தான்தோன்றித்தனமான சுதந்திரத்தை மக்கள் எதிர்பார்க்கக் கூடாது" என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க கூறினார்!

சுருக்கமாகக் கூறினால், மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கும் அவற்றைப் பூர்த்தி செய்ய முடியாதிருந்த அரசாங்கத்திற்குமிடையில், விரைவில், மோதல் மேலெழத்தொடங்கியது. ஊடகம், கட்டுப்பாட்டிற்கப்பாற் செல்லத தொடங்குகின்றதென்று அரசாங்கம் உணரத் தொடங்கியது. நிறுவனத்தை மிகவும் கடுமையாக விமர்சித்ததாக நிரூபிக்கப்படும்பட்சத்தில் பத்திரிகையாளர்களுக்கெதிராகக் குடியியல் (சிவில்) மட்டுமன்றி, குற்ற நடவடிக்கைகளும் எடுக்கக் கூடிய விதத்தில் சில சட்டங்களின் துணை வாசகங்கள் பயன்படுத்தப்படக்கூடியவையாக்கப்பட்டன. உலகம் முழுவதிலுமுள்ள ஏனைய ஜனநாயக நாடுகளில் இது, ஏற்றுக்கொள்ளப்பட்ட செய்முறைகளுக்கு முரணானதாகும். அ.சா. அமையங்கள் இணங்காமல் நடக்கவும் கூடுமென்றும் அதனால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மேலும் அதிகாரங்கள் அவசியமென்றும் அரசாங்கம் உணர்ந்ததென்பதிற் சந்கேமில்லை.

## கூடிய கட்டுப்பாடு

முன்னர் குறிப்பிடப்பட்ட 1980ஆம் ஆண்டு அதிகாரச்சட்டம், இல. 31 தொடர்பாக, 1998ஆம் ஆண்டில் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. இது 1998ஆம் ஆண்டின் தொண்டர் சமூக சேவை அமையங்கள் (பதிவும், மேற்பார்வையும்) (திருத்தம்) அதிகாரச் சட்டம் இல. 8 எனக் காட்டப்பட்டது. எந்தவொரு அ.சா.அமையத்தினதும் முகாமையை முற்றாக எடுக்கக்கூடிய வகையில் பெரும் அதிகாரங்களைக் கொண்ட, இடைக்கால முகாமைச் சபையை நியமிக்கும் அதிகாரத்தை, இது அமைச்சருக்கு வழங்கியது.

இது, ஓர் அபாய அறிவித்தல். அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு அபாய அறிகுறி. ஒன்று கூடும் சுதந்திரத்தைக் காப்பதற்கான அ.சா.அமையங்களின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

எந்தவோர் அ.சா.அமையமேனும் நிதி அல்லது ஏனைய ஊழல்கள் அல்லது ஒழுங்கீனங்களுக்கு உட்பட்டிருக்கும் பட்சத்தில், வழமையான சட்டங்களுக்கமைய சாதாரண நீதி மன்றங்களில் எதிர் நடவடிக்கை எடுப்பதற்கு வழி வகைகள் உண்டென்றும், ஜனநாயக முறைகளுக்கு முரண்படும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாகாதென்றும் உள் நாட்டு, வெளி நாட்டு மனித உரிமைகள் அமையங்கள் பல, அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டின. 500இற்கும் மேற்பட்ட

அ.சா.அமையங்களினால் கையொப்பமிடப்பட்டதோர் முறையீட்டு மனு அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. பல கூட்டங்கள் நடத்தப்பட்டன. விடய அறிவு கொண்டோரின் கலந்துரையாடல்களும் விவாதங்களும் தெளிவாகவும் ஈர்க்கக்கூடியவிதத்திலும் முன்வைக்கப்பட்டன. அறிவும், ஒழுங்கும் கொண்ட அ.சா. அமையங்களின் ஒற்றுமையை இது எடுத்துக் காட்டியது. 1998ஆம் ஆண்டு அதிகாரச்சட்டமும் செயலறுக்கப்பட வேண்டுமென்று செய்யப்பட்ட வேண்டுகோள்களுக்கெதிராக ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டன. இச் செயன்முறையை ஒழுங்கமைத்த அ.சா. அமையங்களின் கூட்டமைப்பின் செயற்குழுவிலுள்ளோரின் பெயர்களை குறிப்பிடுதல் தகும்: இனங்களுக்கிடையிலான நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் (Movement for Inter Racial Justice and Equality -MIRJE), செயலாளர், சுநந்த தேஷப்ரிய, ஜனநாயக உரிமைகளின் பாதுகாப்பிற்கான இயக்கத்தின் (Movement for Defence of Democratic Rights - MDDR) தலைவர், சட்டத்தரணி எஸ்.ஜி. புஞ்சிஹேவ, இன்ஃபோர் (Inform) என்பதன் பணிப்பாளர் திருமதி சுனிலா அபேசேர, தேசிய சமாதானச் சபையைச் சேர்ந்த (National Peace Council) எஸ்.பி.நாதன், தேசிய அ.சா.அ.அமையத்தின் (National N.G.O. Organization) தேசிய ஒழுங்கமைப்பாளர் வில்ஃ. பிரட் கருணாரத்ன, செயல் முன்னணி, விபவி கலாசார மையத்தைச் சேர்ந்த கலாநிதி சுனில் விஜேசிரிவர்தன.

இவை எப்படி நடந்தன என்பது பற்றிய 'செயன்முறை' எதிர்காலத்தேவை கருதிக் கீழே தரப்படுகின்றது. பின்வருவன, பிரதானமாக அதிகாரச் சட்டத்திலிருந்து, அல்லது அதிகாரச்சட்டத்தைப் பற்றி அ.சா.அ. அதிகாரிகளுக்குச் சமர்ப்பித்த பல்வேறு சமர்ப்பணங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்:

1. 1980ஆம் ஆண்டின் தன்னிச்சையான சமூக சேவை அமையங்கள் (பதிவும், மேற்பார்வையும்) அதிகாரச் சட்டம் இல.31. 1998ஆம் ஆண்டின், தன்னிச்சையான சமூக அமையங்கள் (பதிவும், மேற்பார்வையும்) அதிகாரச்சட்டம், இல.8. இவை இரண்டும் அவ்வத்தருணத்தில் அதிகாரத்திலிருந்த அரசாங்கங்களினால் இயற்றப்பட்டவை.

2. இலங்கை அரசியல் யாப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளுள் ஒன்றாகவும் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாகவுமுள்ள, ஒருங்குகூடும் சுதந்திரத்திற்கு கீழே காட்டப்படவிருப்பது போல, அபாயம் விளைவிக்கக்கூடிய பகுதிகள், துவக்க நிலை அதிகாரச் சட்டத்திலும் திருத்த அதிகார சட்டத்திலும் இருக்கின்றன. இவை, அ.சா.அமையங்களின் ஒருங்குகூடும் சுதந்திரத்திற்கு ஊறு விளைவிக்கலாம். இலங்கை அரசியல் யாப்பில் இடம் பெற்றுள்ள உத்தரவாதங்களை மீறுவதன் மூலம், சகல மக்களினதும் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கு இச்சட்டங்கள் பயன்படுத்தப்படலாம் என்பதனால், இவை, அடக்கியொடுக்குவதற்கான சட்டங்கள் என்ற வகையில், வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். முன்னைய அரசாங்கமும் இன்றைய அரசாங்கமும் அடக்கியொடுக்கும் இச்சட்டத்துடன் தொடர்புடையவையாகும.

3. 1980ஆம் ஆண்டு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், விசாரணைச் சபையொன்று அமைக்கப்படலாம். தொண்டர் அமையம் ஒன்றிற்கெதிராக, மோசடி அல்லது கையாடல் தொடர்பாகச் சாட்டப்படும் குற்றத்திற்கு ஆதரவான சான்றுகளைப் புலன் விசாரணை செய்து, அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் உரிமை இச்சபைக்குண்டு. அத்தகைய தொண்டர் அமையமொன்றின் விவகாரங்களை நிர்வகிப்பதற்காக, இடைக்கால முகாமைச் சபையொன்றை நியமிக்கும அதிகாரத்தை, 1998ஆம் ஆண்டு திருத்த அதிகாரச் சட்டம் வழங்குகின்றது. எந்தவொரு தொண்டர் அமையம் தொடர்பாக நியமிக்கப்பட்ட இடைக்கால முகாமைச் சபையொன்று,

அத்தொண்டர் அமையத்தின் நிறைவேற்றதிகாரக் குழுவின் அதிகாரங்களையும் கடமைகளையும் பணிகளையும் முறையே பிரயோகித்து, நிறைவேற்றி, பூர்த்தி செய்யும், இடைக்கால முகாமைச் சபை செயற்படும் காலப்பகுதியில், நிறைவேற்றதிகாரக் குழு, அத்தகைய அதிகாரங்களையும் கடமைகளையும் பணிகளையும் முறையே பிரயோகிக்கவோ, நிறைவேற்றவோ, பூர்த்தி செய்யவோ மாட்டாது.

4. திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட விதமே ஜனநாயக முறைக்கு முரணானதாகும். மொத்தமாக 30 சட்ட மூலங்கள், எந்தவித விவாதமுமின்றி ஒரு சில நிமிடங்களுள் நிறைவேற்றப்பட்டன. மேலும், இத்தருணத்தில் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பொன்றில் ஈடுபட்டிருந்தனர்.

5. இவ்வதிகாரச் சட்டத்திற்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடுகள் அவற்றின் உள்ளடகத்தின் அடிப்படையிலன்றி, வினை நுட்ப அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டன. பாராளுமன்றக் கட்டளைப் பத்திரங்களில், சட்ட மூலம் பற்றிய அறிவிப்பு தெரியப்படுத்தப்பட்டு, ஒரு வாரத்திற்குள் மேன்முறையீடு செய்யப்படவில்லை என்பதனால், இவை தள்ளுபடி செய்யப்பட்டன. இருப்பினும், சட்ட மூலம் கலந்துரையாடலுக்காக எடுக்கப்பட முன்னர், இரண்டரை வருடங்களுக்கும் மேலாகக் கட்டளைப் பத்திரத்தில் இடம்பெற்றிருந்தது. நம் சட்டமியற்றுவோரால் அனுமதிக்கப்பட்ட இத்தாமதம், அரசாங்கங்கள் கூட இச்சட்ட மூலத்தை அவசரமானதொன்றென்று கருதவில்லை என்பதையே தெளிவாக்குகின்றது.

6. இவ்வதிகாரச் சட்டம், குறிப்பாக, தொண்டர் சமூக சேவை அமையங்கள் பற்றியதாக இருந்த போதிலும், இவ்வதிகாரச் சட்டத்தில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் படி, அவ்வமயம், அரசாங்கச் சார்பற்ற இயல்புடைய, வெளி நாட்டு அல்லது உள் நாட்டு நிதியைப் பெறுவதுடன், தனிப்பட்டவர்களைக் கொண்ட குழுவொன்றினால், தன்னிச்சையாக அமைக்கப்பட்ட எந்தவோர் அமையத்தையும் உள்ளடக்கும்.

வரைவிலக்கணம் சற்றும் தெளிவாக இல்லாததால், இவ்வதிகாரச் சட்டம் குறிப்பிட்டதொரு வகைக்குட்படும் அமையத்தை உள்ளடக்குகின்றதா அல்லது சகல அமைப்புக்களையும் உள்ளடக்குகின்றதா என்பதைப் பொறுத்தளவில், அரசாங்கம் சாதகமானதொரு நிலையிலுள்ளது. இது, இத்தகைய அமையங்கள் எல்லாவற்றிற்கும் மறைமுகமானதோர் அச்சுறுத்தலாகும்.

7. 1998இல் நிறைவேற்றப்பட்ட திருத்தத்தின் படி, இவ்வதிகாரச்சட்டம் பின்னோக்கிச் செயற்படுகின்ற தன்மை வாய்ந்தது. இது, இலங்கை அரசாங்கத்தினால் கைச்சாத்திடப்பட்டு, வலுவாக்கம் செய்யப்பட்ட குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஏற்பாட்டின் (ICCPR) உறுப்புரிமை 15ஐ மீறுவதாக அமைந்துள்ளது.

8. பின்வருமாறு பிரகடனப்படுத்தும் ICCPRஇன் உறுப்புரை 22 (1) ஐ மீறுவதாக இவ்வதிகாரச் சட்டமும் அதன் திருத்தமும் அமைந்துள்ளன.

"தனது நலன்களைப் பாதுகாப்பதற்காகத் தொழிற் சங்கங்களை உருவாக்கும் உரிமையும் அவற்றிற் சேரும் உரிமையும் உட்பட, ஏனையோருடன் ஒருங்கு சேரும் சுதந்திரத்திற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு."

9. ICCPRஇன் உறுப்புரை 22(3)ஐ மீறும் விதத்தில், அரசு தனது அதிகாரங்களைப் பயன்படுத்தியுள்ளது:

"1948ஆம் ஆண்டின் சர்வதேசத் தொழில் அமைய சமவாயத்தில் வழங்கப்பட்டுள்ள, ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம் சம்பந்தப்பட்டதும் உரிமைகளைப் பாதுகாப்பது சம்பந்தப்பட்டதுமான விடயங்களுக்குக் கேடு விளைவிக்கும் விதத்தில் ஒழுங்குகளை மேற்கொள்ளவதற்கோ, சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ, அவ்வுத்தரவாதங்களுக்கு கேடு விளைவிக்கும் வகையில் சட்டத்தைப் பிரயோகிப்பதற்கோ 1948ஆம் ஆண்டின் சர்வதேசத் தொழில் அமைய சமவாயத்தை ஏற்றுக்கொண்ட எந்த ஓர் அரசிற்கும் இந்த உறுப்புரையிலுள்ள எந்தவொரு பகுதியிலும் அதிகாரம் வழங்கப்படவில்லை."

10. 1948இல் கையெழுத்தாகிய 87ஆவது சர்வதேசத் தொழில் அமைய சமவாயத்தில் இலங்கை அரசாங்கமும் கைச்சாத்திட்டுள்ளது. அமைப்பு, சேர்க்கை என்பவற்றிற்கான சுதந்திரத்தை எவ்வகையிலும் அரசுக்கள் தடை செய்யலாகாதென்று இச்சமவாயமும் பிரகடனப்படுத்தியுள்ளது.

11. ICCPRஇன் தெரியல்முறைத் தாயேட்டில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது. இதன்படி, இப்பொறிமுறையின் மூலம், அரசாங்கச் சார்பற்ற அமையங்கள் தமது முறைப்பாடுகளை சர்வதேச சமுதாயத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட சர்வதேசச் சட்டங்களின் கீழ், இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை நிலைப்படுத்துதல் அதன் கடப்பாடாகும். அத்துடன், அரசியல் யாப்பில் இடம்பெற்றுள்ள அடிப்படை உரிமைகளைப் பற்றிய உத்தரவாதங்களையும் அரசாங்கம் அனுசரித்து நடத்தல் வேண்டும். எனினும், இந்த அதிகாரச் சட்டமும் அதன் திருத்தங்களும் அவ்வுத்தரவாதங்களுக்கும் அது, ஏற்றுக்கொண்டுள்ளவற்றிற்கும் சரி எதிர்மாறாக அமைந்துள்ளன. அரசாங்கத் தலையீட்டை அனுமதிக்கும் சட்டங்களை ஆக்குவதன் மூலம் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கப் பொறிமுறையினுள் காணப்படும் ஊழல்களையும் இலஞ்சங்களையும் சில செய்தித்தாள்கள் பிரசுரிப்பதைத் தடுப்பதற்காக, அவதூறு தொடர்பான சட்டங்களைத் துஷ்பிரயோகம் செய்யும் முயற்சிகள் ஏற்கெனவே இடம்பெற்றுள்ளன. அத்தகையதொரு அதிகாரச் சட்டத்தைப் பிரயோகிப்பதன் மூலம் இதே விதமான நடவடிக்கை, அரசாங்கச் சார்பற்ற அமையங்களுக்கு எதிராகவும் எடுக்கப்படலாம்.

இலங்கை அரசியல் யாப்பில் இடம்பெற்றுள்ள உத்தரவாதங்களை மீறுவதன் மூலம், சகல மக்களினதும் அடிப்படைச் சுதந்திரங்களை மீறுவதற்கு, இவ்வதிகாரச் சட்டமும் அதன் திருத்தங்களும் பயன்படுத்தப்படலாம்.

உறுப்புரை 14 (அ) பேச்சுச் சுதந்திரமும் அபிப்பிராயச் சுதந்திரமும்
(ஆ) அமைதியாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்
(இ) ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம்

உறுப்புரை 12 (1) சட்டத்தின் முன்னர் சமத்துவம்

இவ்வதிகாரச் சட்டத்தின் திருத்தங்களுடன் கூடிய இவ்வதிகாரச் சட்டத்தில், ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம், அரசைப் பொறுத்தளவில் வேறு விதமாகவும் அரசு அல்லாத அமையங்களைப் பொறுத்தளவில் வேறு விதமாகவும் பிரயோகிக்கப்படலாம். அரசு அல்லாத அமையங்களின் மீதான சட்டக் கட்டுப்பாடுகள், அரச அமையங்களின் மீதான கட்டுப்பாடுகளை விடக் கடுமையானவையாக உள்ளன. இது, மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் மீறுதலாகும்.

மனச்சாட்சிச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் என்பனபற்றிக் குறிப்பிடும் உறுப்புரை 10ஐ அனுபவிப்பதற்கும் இது தடையாகவுள்ளது. அரசாங்கத் தலையீடு, கட்டுப்பாடு என்பன பற்றி மக்கள் பீதியுறும் காட்சி ஒன்றை உருவாக்குவதன் மூலம் அரசு, மனச்சாட்சிக் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் என்பவற்றில் தலையிடுகின்றது. இச்சட்ட மூலத்தினூடாக, நீதிநெறி கடந்த விதங்களில் நடப்பதற்கு அரச அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது. இதுவும் கூட, மனச்சாட்சிச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் என்பவற்றிற்கு நமக்குள்ள உரிமையின் மீது மறைமுகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

12. அ.சா.அ. பற்றிய விசாரணைகளை நடத்துவதற்கும் அவற்றை நிர்வகிப்பதற்கும் அரச அதிகாரிகளுக்கு அதிகாரங்களை வழங்குதல், கட்சி அரசியற் தலையீடு, பாரபட்சம், அரசாங்கத்தின் பல்வேறு செயற்றிட்டங்கள், அரசாங்கக் கட்சி என்பவற்றிற்குக் கூட அ.சா.அமையங்களின் நிதிகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றிற்கு வழியைத் திறந்துவிடுகின்றது.

## போதிய அளவிலமைந்த சட்டப் பொறிமுறைகள்

**மோசடி, கையாடல் என்ற குற்றங்களுக்குள்ளான அமையங்களையோ தனியாட்களையோ விசாரணைக்குட்படுத்தித் தண்டிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய போதிய அளவு சட்டப் பொறிமுறைகள் ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. கம்பனி அதிகாரச் சட்டம், கழக அதிகாரச் சட்டம், நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டம், மோசடி, கையாடல் என்பவற்றைக் கையாள்வதற்கு உருவாக்கப்பட்ட ஏனைய குடியியல், குற்றச் சட்டங்கள் இவற்றுள் அடங்கும்.**

## முறையீடும் மேன்முறையீடும்

மேலே குறிப்பிடப்பட்டவற்றின் பின்னணியில், பல்வேறுபட்ட சமுதாயச் சேவைகளுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட, 500இற்கும் மேற்பட்ட அ.சா.அ., நமது அரசியல் யாப்பிற்கும், சர்வதேச மனித உரிமைத் தத்துவங்களுக்கும் முரணாகவுள்ள அதிகாரச்சட்டத்தின் பகுதிகளையும் அதிகாரச் சட்டத்தின் திருத்தத்தையும் மீள் பரிசீலனை செய்யும்படி அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தன.

இதுவரையிலான அரசாங்கத்தின் துலங்கல் குறிப்பாகச் சாதகமாகவோ அன்றிப் பாதகமாகவோ அமையவில்லை. அதிகாரச் சட்டமும், அதிகாரச் சட்டத் திருத்தமும் அவ்வாறே உள்ளன. முன்னர், ஒரு சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இது வரை, நமக்குத் தெரிந்தளவில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை.

அ.சா.அமையங்களும் பொது மக்களும் தொடர்ந்தும் உசாராக இருத்தல் வேண்டும்.

## அரசாங்கத்தின் கடமைக்கூறு

அ.சா.அமையங்களைப் பொறுத்த மட்டில், அரசாங்கத்தின் கடமைக்கூறு எத்தகையதாக இருத்தலாகாது என்பதை ஓரளவு முழுமையாக அலசி ஆராய்ந்து விட்டோம். அப்படியானால், அரசாங்கத்தின் கடமைக்கூறாக அமைய வேண்டியது என்ன? அடிப்படையில், நாட்டை சிறப்புறச் செய்யும் பல்வேறு பணிகளில், அ.சா.அமையங்களை, அரசாங்கம் வரவேற்க வேண்டும். உண்மையான, உயிர்த்துடிப்புள்ள மக்கள் சமூகத்தை வளர்ப்பதற்கு இலங்கையில் அ.சா.அமையங்கள் அவசியம் என்பதையும், அவையின்றி, அர்த்தபூர்வமான ஜனநாயகம் இருக்க முடியாதென்பதையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். குறை காணுதல், கட்டுப்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்கிய எதிரான அணுகுமுறைக்கு மாறாக, இத்தகைய சார்பான அணுகுமுறையை அரசாங்கம் பின்பற்றினால், அது பரஸ்பர நம்பிக்கையை வளர்ப்பதுடன், பல்திறப்பட்ட அபிவிருத்தித் துறைகள், சேவைகள் தொடர்பாக ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு வேண்டிய ஒத்துழைப்பையும் வழங்கும். அ.சா.அ சில, அரசாங்கத் தலையீடின்றிச் சுதந்திரமாகப் பணியாற்ற விரும்பலாம். அப்படி இயங்குவதற்கான சுதந்திரம் அவற்றிற்கு இருக்க வேண்டும். ஏனைய அ.சா.அ., குறிப்பிட்ட பணிகளைச் செய்யும் போது அரசாங்கத்துடன் கூடி கருமமாற்ற விரும்புகின்றன. நன்கு ஆராய்ந்த பின்னர், இவற்றின் உதவி பெறப்பட வேண்டும். அரசாங்கத் தலையீடின்றிச் சுதந்திரமாக இயங்கும் அ.சா.அமையங்களாக இருந்தாலும் அரசாங்கத்துடன் இணைந்து கருமமாற்றும் அ.சா.அமையங்களாக இருந்தாலும் இவை நாட்டின் வளர்ச்சிப் பணியில், அரசாங்கத்துடன் சேர்ந்து பணி புரியும் சக உழைப்பாளிகள் என்ற வகையில் அங்கீகரிக்கப்பட வேண்டும். மேலும், சகல அ.சா. நிறுவனங்களும், அரசாங்கத்தையும் அரசாங்க நிறுவனங்களையும் விமர்சிப்பதற்கான சுதந்திரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விமர்சனம் வரவேற்கப்படவும் வேண்டும். சுய விமர்சனச் செயன்முறையொன்றும் பரஸ்பர விமர்சனச் செயன்முறையொன்றும் இருத்தல் வேண்டும். பரஸ்பர நம்பிக்கை நிலவும் இத்தகைய சூழலில், இத்தகையதொரு செயன்முறையில் கஷ்டங்களையும் தவறுகளையும் பலவீனங்களையும் இணைந்து எதிர்நோக்குவதுடன், இலஞ்ச ஊழல்களை வெளிப்படுத்தி, அக்குறைபாடுகளைத் திருத்திக் கொள்வதிலும் ஒத்துழைக்கலாம். இது சுலபமான விஷயமல்ல; இதை, நினைத்தவுடன் செய்துவிடவும் முடியாது. இதை எய்துவதற்குப் பரஸ்பர நம்பிக்கையைப் பொறுமையுடன் உருவாக்க வேண்டும்; திறந்த தன்மை, கடின உழைப்பு என்பன அவசியம்; நீண்ட கால எல்லையில் முன்னேற்றமான அபிவிருத்தி அவசியம்.

## பதிவு

அ.சா.அமையங்களின் தொகை, பெரும்பாலும், எவருக்குமே பொறுப்புக் கூற வேண்டிய நிலையின்றி அதிகரித்துச் செல்வதை, எவ்விதமான மேற்பார்வையுமின்றி, அனுமதிக்க முடியாது. எனவே, இவை, அரசாங்கத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனை நியாயமானதே. அவை ஒவ்வொன்றினதும் பரந்த நோக்கங்கள், குறிக்கோள்கள், வேலைப் பரப்புக்கள், பிரதான பொறுப்புக்களை ஏற்போர் என்பன பற்றிய அடிப்படைத் தகவல்களை வழங்க வேண்டுமென்பதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே.

## பதில் சொல்லும் பொறுப்பு

திறந்த தன்மை இருத்தல் வேண்டும்; எனினும் அது சுதந்திரம், சுய கௌரவம் என்பவற்றுடன் இயைந்து செல்ல வேண்டும். பதில் சொல்லும் பொறுப்பு இருத்தல் வேண்டும். ஆனால் அ.சா.அ. பிரதானமாகத் தனது உறுப்பினர்களுக்கே பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளது என்பது நினைவிற் கொள்ள வேண்டியதொன்றாகும். கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்

தொடர்பான விபரங்கள் முதலியன இதன் ஒரு பகுதியாகும். உதவி வழங்கும் முகவரகங்களுக்குக் கணக்களிக்க வேண்டிய தகைமையும் உண்டு. எழுபதுகளில், உதவி வழங்கும் ஒரு முகவரகத்தைச் சேர்ந்த உதவி வழங்கும் ஒருவரிடம், கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்ட போது, அவர், "உங்களுக்கு வழங்கப்பட்ட பணத்தைக் கொண்டு **நீங்கள** என்ன செய்கிறீர்களென்பது **நமது** பிரச்சினையல்ல. அப்பணம் **உங்களுக்குச** சொந்தம். உங்களுடைய உறுப்பினர்களுக்கே, உங்களுடைய வாக்காளர்களுக்கே நீங்கள் பொறுப்புக் கூற வேண்டும்; கணக்களிக்க வேண்டும்" என்று கூறியமை, இங்கு குறிப்பிடப்பட வேண்டும். மிகவும் ஆழ்ந்த கருத்தில், அது, நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட பங்குடைமையின் உன்னத அடையாளமாகும். மிகவும் ஆழ்ந்த பொருளில் பார்த்தால், மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் உதவி நல்கும் முகவரகத்திற்கும் கூட பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு அ.சா. அமையங்களுக்குண்டு. ஆனால், அத்தகைய பதில் சொல்லும் பொறுப்பு வித்தியாசமானது. அது, கணக்கு பற்றிய விபரங்களுடன் சம்பந்தப்பட்டதல்ல. அது, மனிதத்தன்மை, மானுடம் தொடர்பான அக்கறை, அபிவிருத்தி சார்ந்த பணிகள், நீதி, சமாதானம் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டது.

## நடத்தைக் கோவை, அல்லது தத்துவங்கள் பற்றிய உடன்பாடு

ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைக் கோவை, அல்லது தத்துவங்கள் பற்றிய உடன்பாடே அவசியமாகும். முன்னர் குறிப்பிட்ட, 'ஈகனோமிஸ்ட்' (Economist) என்ற சஞ்சிகையில் இடம்பெற்ற, அ.சா.அ.பற்றிய கட்டுரை, 1995இல் கொங்கோவிலுள்ள கோமா என்ற இடத்திற்குப் பல்லாயிரக் கணக்கான அகதிகள் வந்து சேர்ந்த போது, கணக்கற்ற அ.சா.அ., அப்பிரதேசத்தினுள் வந்து குவிந்து, தொலைக்காட்சியில் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகவும் நிதிக்காகவும் வெறியுடன் போட்டியிட்டன என்பதைக் குறிப்பிடுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட அ.சா.அமையங்களின் பட்டியலொன்றைத் தயாரித்து, பத்து அம்சங்களைக் கொண்ட நடத்தைக் கோவையொன்றில் அவற்றின் பெயர்களை இடம்பெறச் செய்து, நிலைமையைச் செஞ்சிலுவைச் சங்கம் சமாளித்தது. 70இற்கும் மேற்பட்ட குழுக்களும், 142 அரசாங்கங்களும் பிரமாணக் கோவையை ஆதரித்தன.

ஒரு நடத்தைக் கோவையை, அல்லது தத்துவங்கள் பற்றிய உடன்பாடொன்றை வரைவதற்காக, அரசாங்கம், அ.சா.அமையங்களுடனும் உதவி முகவரகங்களுடனும் கலந்துரையாடி, நடத்தைக் கோவையொன்றை, அல்லது தத்துவங்கள் பற்றிய ஓர் உடன்பாட்டை வரைய வேண்டும். சிறந்த சமூகப் பகுப்பாய்வு, உண்மையான தேவைகளை இனங்காணல், பொறுப்பையும் கணக்களி தகைமையையும் ஏற்றல், அத்தகைய நடத்தைக் கோவைக்கு, அல்லது தத்துவங்கள் பற்றிய உடன்பாட்டிற்கு அடிப்படையாக அமைதல் வேண்டும். கணக்காய்வு செய்யப்பட்ட கண்கணுகளைக் கிரமமாகச் சமர்ப்பித்தல், ஜனநாயக அடிப்படையிலமைந்த கலந்துரையாடல்கள், மதிப்பீடு, சுய விமர்சனம், பரஸ்பர விமர்சனம் என்பன முக்கிய இடத்தைப் பெற வேண்டும். நிதி பெறப்படும் மூலங்கள், முடிவுகளைச் செய்வதில் மக்களின் பங்குபற்றுகை, கண்காணிப்பு, மதிப்பீடு என்பன பற்றித் திறந்த தன்மை நிலவ வேண்டும். வெகுசன ஊடகச் சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்தி, சிறந்த விவாதங்களை நடத்துதல் வேண்டும். நடத்தைக் கோவையை, அல்லது தத்துவங்கள் பற்றிய உடன்பாட்டை வரைதல், அதை அ.சா. அமையங்கள் ஏற்றுக்கொள்ளல், அ.சா. அமையங்களின் நம்பகத்தன்மையை நிறுவுவதற்கும், அவற்றின் பயனுதிப்பாட்டை மேம்படுத்துவதற்கும் பெருமளவில் உதவும்.

## அரசாங்கத்தின் கோரிக்கை

பொது வேலைகளில், அ.சா. நிறுவனங்களின் ஒத்துழைப்பைக் கோருதல் சாதகமாக அமையுமென்று, அரசாங்கம் தற்பொழுது உணர்கின்றதென்பது சுவாரசியமானதொரு விஷயமாகும். ஐ.நா. அமைபத்திற்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியான எச்.எம்.ஜி.பி. பலிஹக்கார 2000ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 30ஆந் திகதி ஜெனீவாவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையத்தின் முன்னிலையில், காணாமற் போனோர் பற்றிய செயற்குழுவின் இலங்கை விஜயம் பற்றிப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> "அது, (செயற்குழு), தனது அதிகாரக் கட்டளையுடன் தொடர்புற்ற சகல விஷயங்கள் பற்றியும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் கையாள்வதற்கும் அவற்றை நிவிர்த்தி செய்வதற்கும் இலங்கை அரசாங்கமும் இலங்கையிலுள்ள அ.சா.அமையங்களும் மேற்கொண்ட பயனுறுதி வாய்ந்த நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடியது."

ஆசியா/பசுபிக் அரங்கத்தின் கூட்டம் பற்றிப் பின்வருமாறு கூறினார்:

> "கடந்த ஆண்டு, நமது தேசிய மனித உரிமைகள் ஆணையம், ஆசியா/ பசுபிக் அரங்கத்தின் முக்கியமான ஒரு கூட்டத்தைக் கண்டியில் நடத்தும் வாய்ப்பை பெற்றது. இது, அ.சா. அமையங்களுக்கும், உலகளாவிய, பிராந்திய, தேசிய மட்ட மனித உரிமைகள் பொறிமுறைக்குமிடையில் முக்கியத்துவம் மிக்க, ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட ஒரு பிராந்திய நிகழ்வாகும். நாட்டிலுள்ள செயலூக்கம் மிக்க அ.சா.அ. சமுதாயத்தின் பங்களிப்பு இந்நிகழ்வை வெற்றிபெறச் செய்வதற்குக் காரணமாக அமைந்தது. மிகக் கஷ்டமான நிலைமைகளின் கீழ், மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் செய்யும் முயற்சிகள் தொடர்பாக அ.சா. அமையங்களின் பங்களிப்பை எனது அரசாங்கம் பெரிதும் மதிக்கின்றது.............. "

அத்துடன், வடக்கிலும் கிழக்கிலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ளோருக்கு, இலவச உணவு உட்பட, வழங்கப்பட்ட மனிதாபிமான உதவி தொடர்பாகப் பின்வருமாறு கூறுகிறார்:

> "இப்பிரதேசங்களில், பெருந்தொகையான, சர்வதேச அமையங்களும் தேசிய அமையங்களும் அ.சா. அமையங்களும் இயங்குகின்றன. இவை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவுவதுடன், குறை நிரப்பும் பணியிலும் ஈடுபட்டுள்ளன."
> (2000ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆந் திகதியிடப்பட்ட 'டெய்லி நியூஸ்' பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)

## உலக வங்கியும் சமயங்களுக்கிடையிலான உரையாடலும்

உலக வங்கியின் தலைவர் ஜேம்ஸ் வுல்ஃபன்ஸன், ஆளுநர் சபையின் வருடாந்தக் கூட்டத்தில் தமது கொள்கைகள் வறியோர் மீது ஏற்படுத்தியுள்ள சில தீவிரமான தீய தாக்கங்களைப் பற்றியும் வறிய சமுதாயங்களைத் துரிதமாகச் சென்றடையக்கூடிய முன்னுரிமை நிகழ்ச்சித் திட்டங்களில் கவனஞ் செலுத்த வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் அவர் கூறியதை நாம் முன்னர் எடுத்தக் காட்டியுள்ளோம். புதிய அணுகு முறைகள் அவசியம் என்பது பற்றியும் அவர் பேசியுள்ளார்.

வறுமைக்கெதிரான போராட்டத்தில், அரச நிறுவனங்களுக்கப்பாலும் செல்ல வேண்டியதன் அவசியத்தையும், மக்களின் நிறுவனங்களையும் செயற்படச் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் உலக வங்கி ஏற்றுக்கொண்டுள்ளது என்பது தெளிவு. இப்பணியில், உலக சமயங்களின் வளங்களையும் பயன்படுத்த வேண்டுமென்பதில் அது கவனஞ் செலுத்தியுள்ளது. இதன் விளைவாகவே, ‘உலக சமய விருத்தி உரையாடல்’ (WFDD) என்ற நிறுவனம், 1998ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், லண்டனில் லம்பெத் பிளேஸில் நிறுவப்பட்டது. கன்டர்பெரி ஆக் பிஷப் வண. கலாநிதி ஜோர்ஜ் கரே, உலக வங்கித் தலைவர் ஜேம்ஸ் டி வுல்ஃபன்ஸன் என்போர் இதன் கூட்டுக் காப்பாளர்களாவர். உலக சமயங்கள் இதில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டன. இப்புதிய இயக்கம், அபிவிருத்தியில் உலக சமயங்களின் பங்கு தொடர்பாக, ஓர் உரையாடலை அதி உயர் மட்டத்திற் தொடக்கி வைத்தது.


இதைத் தொடர்ந்து, வேறு நாடுகளிலும் பல பிராந்திய மகாநாடுகள் கூட்டப்பட்டன. இந்தியாவில், சென்னையில், 1999ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நடத்தப்பட்ட பிராந்திய மகாநாட்டில் WFDDஐப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக, நீ.ச.உ.ஒ.ம./இ.கிளையின் ஒருங்கிணைப்பாளர்களுள் ஒருவராகிய வண.யோகான் தேவானந்தா அழைக்கப்பட்டார். அபிவிருத்தியில், குறிப்பாக, வறுமைக்கெதிரான போராட்டத்திற்கு அழுத்தம் கொடுத்து, பல்வேறு சமயங்களும் வழங்கக்கூடிய பங்களிப்பைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு எட்டு மதங்களைச் சேர்ந்த தலைவர்கள் இம் மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். கலந்துரையாடலுக்குப் பங்களிப்புச் செய்த அதே வேளையில், இலங்கையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் கசப்பான போருக்கு மத்தியில், வறியோரின் நிலை பற்றிய கருத்துக்களை வண. தேவானந்தா முன்வைக்கக்கூடியதாயிருந்தது.

1999ஆம் ஆண்டு நொவம்பர் மாதம், ஐக்கிய அமெரிக்காவில், வொஷிங்டனில் உலக வங்கியில் WFDD இன் இரண்டாவது உலக மகாநாடு நடைபெற்றது. கலந்துரையாடல் இடம் பெற்றவாறிருக்கின்றது. உலகளாவிய இணையத்தில் உலக சமயங்களின் கருத்துக்கள் வேண்டப்படுகின்றன. விவாதங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இதனுடைய வரைபு (மார்ச் 2000) எழுதப்பட்டு வருகின்றது. இது உலக, வங்கியின், தசாப்தத்திலோர் உலக அபிவிருத்தி அறிக்கை 2000ஆக அமையவிருக்கின்றது. இறுதி அறிக்கை, செப்டெம்பர் 2000இல் பிரசுரிக்கப்படவிருக்கின்றது. இது பற்றிய மேலும் விபரங்கள் பின்னர் இடம்பெறும்.



சமுதாயத்தினதும், உரையாடலினதும் செழுமையை
எடுத்துக் காட்டும் குறியீடு

பறவைநாகத்தின் இயல்பானது,
யானையின் தும்பிக்கை,
சிங்கத்தின் கால்கள்,
பன்றியின் செவிகள்,
மீனின் உடல்,
முதலையின் பற்கள்,
குரங்கின் கண்கள்
என்பவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளதுடன்,
பல் நிறங்களுடன் கூடிய இதழ்களையும்
பெற்றுள்ளது.



## Publications of WSF/SL

1. **World Solidarity Forum on Sri Lanka for Justice and Peace. Report of Inaugural Programme in Sri Lanka and Thailand. May 1990.**

2. **Peace Appeal, January 1992.**
   Outline of issues of war and peace in Sri Lanka and general peace proposals.

3. **Call to a Joint Campaign to Stop the War and to Press for Negotiations for Peace.**
   Short outline of general situation and specific proposals for peace.

4. **Hand - Book for Peace Activists, November 1993.**
   Commentary on the peace proposals of the WSF/SL and answers to questions arising from them.

5. **Peace Proposals, March 1994.**
   WSF/SL Peace Proposals with Annexures on Devolution and Reservation of Powers and Land Settlements, and List of Signatures.

6. **A Noble Eight - Fold Path. 8 Musts for Peace, November 1994.**
   Re - presentation of Peace Proposals in the present context after the Elections and the latest bombing assassination.

7. **Sharing of Power. The Challenge of our Times. An Analysis of Devolution of Power.**
   Historical Background. Present Situation and Future Prospects. 10th Anniversary Publication of WSF/SL, 2000

---

பின் உட்பக்க அட்டையிலுள்ள காட்டுரு, இலங்கையில் தெவி நுவர கோவிலிலுள்ள மகா விஷ்ணு தேவாலயத்தில் காணப்படுகின்றது. இக்கோவிலும் தேவாலயமும் 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இக்காட்டுரு ஏறத்தாழ 18ம் நூற்றாண்டிற்குரியது. வண.ஜேம்ஸ் கோர்டினரால் வரையப்பட்டு, டி.மெட்லன்டினால் செதுக்கப்பட்ட பெரியதோர் ஆக்கத்தின் ஒரு பகுதியே இது. - லண்டன், 1807

## நீ.ச.இ.உ.ஒ.ம/ இ.கி. பற்றிய கருத்துரைகள்

பிரச்சார நடவடிக்கைகளை விடுத்து, நிலையான நம்பிக்கை என்ற உண்மையான அத்திவாரத்தின் மீதான சமாதான முயற்சிகளை விரிவாக்குவதற்கு நீங்கள் கைக்கொள்ளும் தொடர்ச்சியான, மாறாத எத்தனிப்புக்களை நான் மெச்சுகிறேன். நமது சமூகத்தின் எவ்வளவு தான் குறுகிய ஒரு பகுதியினராயிருப்பினும், அவர்களுடைய மனச்சாட்சியை - தனிப்பட்ட, கூட்டு - பிரஜைகள் யாவரினதும் உயிருக்கும் சுதந்திரத்திற்கும் உத்தரவாதம் அளிக்கக்கூடிய யாப்பு ரீதியான ஓர் ஒழுங்கை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கும்படி தூண்டுவதற்கான முயற்சி ஏறத்தாழ கால் நூற்றாண்டாக இடம்பெற்று வருகின்றது.

நமது நாட்டில் மிக நீண்ட காலமாக மக்கட் சமூகத்தைக் கறைப்படுத்தி வந்துள்ள வன்முறை, பயங்கரச் செயல்கள், சமூக நசுக்கல், பொருளாதாரச் சூறையாடல் என்பவற்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஒரு தொடக்கமாக அமையக்கூடிய சமாதானத்தையும், நீதியையும் கௌரவத்துடன் மீண்டும் நிலைநிறுத்துவதற்கான அடிப்படை விடயங்களை உள்ளடக்கிய சூத்திரத்தைக் கொண்ட உங்களுடைய இவ்வாண்டு வெசக் பண்டிகை நினைவு இதழை நான் வாசித்தேன். மோதல் பற்றிய எந்தவோர் அரசியல் விஞ்ஞாபனமோ, அமைதியான தீர்வு ஆலோசனையோ இந்த ஆவணத்தில் தரப்பட்டுள்ள கருத்துக்களைப் பயன்மிக்க விதத்தில் உபயோகப்படுத்தலாம்.

### பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னை நாள் நூலகரும் இலங்கை பற்றிய, ஐந்து பாகங்களைக் கொண்ட நூல் விபரப் பட்டியலை ஆக்கிய சர்வதேச ரீதியில் அறியப்பட்டவருமான கலாநிதி எச்.ஏ.ஐ.குணதிலக்க, நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம்/ இலங்கைக் குழுவின் முன்னைய ஒரு கூற்றுப் பற்றி வழங்கிய கருத்துரை

விடய அறிவு பொதிந்த மிகச் சார்பானரீதியிலமைந்த கருத்துக்களைக் கொண்டதும் ஆழ்ந்த மரபிலிருந்து விடயங்களை பெற்றுள்ளதும் மோதலைத் தீர்ப்பதில் எல்லோருக்கும் நீதியையும் விமோசனத்தையும் வழங்கக்கூடிய புதிய தீர்வுகளைத் தூண்டக்கூடியதுமாக இது அமைந்துள்ளதென நான் நம்புகிறேன்.

### லண்டன், மக்கள் சபைப் பராளுமன்ற உறுப்பினர் ஜோன் பட்டில் நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம் / இலங்கைக் குழுவின் முன்னைய பிரசுரம் ஒன்றைப் பற்றி வழங்கிய கருத்துரை

இந்த ஆவணம் உன்னதமாக இருக்கின்றது. எனது உளமார்ந்த உடன்பாடும் இதற்குண்டு. இதனுடன் நான் எனக்குத் தொடர்புபட்டிருப்பது பற்றி நான் பெருமிதமடைகின்றேன்.

### களனி பல்கலைக்கழகத்தின் முன்னை நாள் மருத்துவ பீடத்தலைவர், பேராசிரியர் கார்லோ ஃபொன்சேகா, நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம்/ இலங்கைக் குழுவின் முன்னைய பிரசுரம் ஒன்றைப் பற்றி வழங்கிய கருத்துரை

பெரும் நம்பிக்கையீனத்தின் மத்தியில், நம்பிக்கையுடன் பணிபுரிவதற்கு, குறிப்பாக ஏழை மக்களுக்கு உதவுவதும், தேசிய நன்மை கருதி, சகல இன, சமயக் குழுக்களைச் சேர்ந்த மக்களையும் ஒருங்கிணையச் செய்வதுமான ஒரு பலம்வாய்ந்த ஆன்மீக இயக்கமாகும் இது.


எல்லைப் பிரதேசங்களிலும், மத்திய மலை நாட்டுப் பெருந்தோட்டங்களிலும் தெற்கிலுள்ள கிராமங்களிலும் சமமான ஆதரவு நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம்/ இலங்கைக் குழுவிற்கு உண்டு. இலங்கை முழுவதிலும் வாழும் பல்வேறுபட்ட குழுக்களைச் சேர்ந்த மக்களும் துணிவுடனும் தமது அயலவர் அனைவரிடமும் அன்பு காட்டியவண்ணமும் சமாதானத்திற்காக முயற்சி செய்கின்றனர்.

### இலங்கையின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம்/ இலங்கைக் குழுக் கிளைகளுக்கும் அண்மையில் விஜயம் செய்த, ரிப்பன், லீட்ஸ் என்பவற்றின் ஆக்டிக்கன் எமரிட்டஸ் வண. டோனி கோம்பரின் கருத்துரையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.

"உடனடியான எதிர்காலம் எதை வழங்கினாலும், இலங்கையிலுள்ள பழைய கட்டமைப்பு, அதன் மீது சுமத்தப்பட்டுள்ள பளுக்களைத் திருப்திகரமாகத் தாங்கவல்லதல்ல.

இலங்கையில் எழுப்பப்படும் கட்டமைப்பு, மாற்றத்திற்குள்ளாகி வரும் உலக நிலைமையின் அடிப்படையில் ஏற்கெனவே எய்தப்பட்டனவற்றிலும் எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டு மக்களின் விருப்பத்திலுமே தங்கியிருக்கும். தமது எதிர்பார்ப்புகளுக்கும் விருப்பங்களுக்கும் இடங்கொடுக்கக்கூடிய கட்டமைப்பொன்றை உருவாக்குவது தொடர்பாக, இலங்கை மக்கள், இறுதியில் தமது சொந்தத் தீர்மானத்திலேயே தங்கி இருத்தல் வேண்டும்."

**ஈ.எ.ப்.சி.லுடொவைக்: இலங்கையின் நவீன வரலாறு, 1966.**



நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றம்/ இலங்கைக் குழுவின் இப்பத்தாம் ஆண்டு நிறைவுப் பிரசுரம், இன மோதல் தொடர்பாக, அடிமட்ட மக்களுடனும் மக்களதும் சமயங்களினதும் அதிகார மையங்களுடனும் நடத்தப்பட்ட உரையாடலின் விளைவாகும். இலங்கையிலுள்ள சகல, மத சமுதாயங்களும் இனச் சமுதாயங்களும் இதில் பங்குபற்றின. இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில், சமாதானத்தை நோக்கிச் சாதகமாகச் செயற்படுவதற்கு, அடிமட்டத்திலும் அதிகார மையங்களிலும் ஆதரவு திரட்டி, நெருக்கி, உரையாடலையும் புரிந்துணர்வையும் தொடர்வதற்கும் ஆழமாக்குவதற்கும் இவ்வாவணம் பயன்பட வேண்டுமென்பதே நமது நோக்கமாகும்.